
# தமிழ் கிறிஸ்தவத்தின் இறை – அனுபவ வளர்ச்சி







பணி. எஸ். ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்பு

இறைவனால் எனது பெற்றோராக

தேர்ந்து கொள்ளபட்ட

சீமாம்பிள்ளை – செல்லம்மா தம்பதிகள்,

எனக்கு இம்மானுவேல், இறைவன் உன்னுடனே

என்று பெயர் வைத்து

ஆலயம் அழைத்து சென்று

இறை அன்புடனும் பிறர் அன்புடனும்

என்னை வளர்த்தவர்க்கு நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்புகுமுன்

எனது படைப்பு முயற்சிக்கு ஒரு தனித்தன்மை இருக்கின்றது. வழமையாக நாம் வாசிக்கின்ற இறையியல் புத்தகங்கள் ஐரோப்பிய திருச்சபையிலே உருவாக்கப்பட்ட இறையியல் களை அடித்தளமாகக் கொண்டவை. ஐரோப்பியர் தங்களுடைய சிந்தனைகளை தமது பகுத்தறிவினால் கிரேக்க மெய்யியல் அடிப்படையில் சிந்தனை செய்து வளர்த்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள் நன்றிக் கடன் உடையவர்கள். இந்த இறையியலைத்தான் நான் பல வருடங்கள் உரோமையிலே கற்று எனது ஆராய்ச்சி யையும் அங்கே செய்தேன்.

அதன் பின்பு இருபது வருடங்களாக கண்டியிலே பத்து வருடங்களும் யாழ்ப்பாணத்திலே பத்து வருடங்களும் நான் கற்றுக்கொண்ட ஆராய்ச்சி செய்த இறையியலை எனது குரு மாணவர்களுக்கும் இறையியலாகக் கற்பித்தேன். அத்தோடு இறையியல் கோட்பாடுகளில் கிறிஸ்துவைப் பற்றியும் திருஅவையைப் பற்றியும் திருப்பணியில் இருக்கும் பணிகள் பற்றியும் திருஅவையில் இருக்கும் அமைப்புகள் பற்றியும் கற்பித்தேன்.

இவைகளைக் கற்றுக் கொடுக்கும் காலங்களில் விசேடமாக எட்டு வருட காலமாக (1986-1994) ஆசியாவின் ஒரு இறை யியலாளராக (FABC-TAC) ஆசிய ஆயர் சங்கங்களுக்கு ஓர் இறையியல் ஆலோசகராகப் பணியாற்றினேன். ஆகையால் நான் கற்றுக் கொண்டவை - கற்பித்தவற்றின் பெரும்பாலானவை - ஐரோப்பிய இறையியலாக இருந்தாலும் நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும் எங்களது சொந்த தமிழ் சூழலிலும் எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக் கின்றேன். ஆசிய திரு அவைகள் என்னை அன்புடன் வரவேற்று எனது சேவைகளை பெற்றன. அத்தோடு ஆசிய ஆயர் சங்கம் யப்பான் ரோக்கியோவில் 1986ஆம் ஆண்டில் நடத்திய கூட்டத்திற்கு பொதுநிலையினரைப் பற்றி ஆரம்ப உரை நிகழ்த்தும்படி அழைத்தனர். ஆனால் உரோமை அதிகாரிகளுக்கு எனது சிந்தனைகளை உள்வாங்குவதில சில சந்தேகங்கள் தோன்றின. அவைகளையும் முகங்கொடுத்து விளக்கியிருந்தேன்.

அதனோடு தொடர்ந்து நான் ஐரோப்பாவிலும் இலண்டன் - பிறான்ங்பேட் - முன்ஸ்ரர் பல்கலைக்கழகங்களிலும் ஆசிய இறை யியலாளராக கற்பிப்பதற்கு அழைக்கப்பட்ட பொழுது அவர்களு டனும் எனது ஆசிய இறையியல் அனுபவங்கள் சிந்தனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்திலும் ஜேர்மன் மொழியிலும் பகிர்ந்து கொண்டு சில சஞ்சிகைகளிலும் எழுதினேன். வருங்கால ஆசிய திரு அவைகளை பற்றி எழுதிய இரு படைப்புகளை ஆங்கிலத்திலேயே இப் புத்தகத்தின் கடைசிப் பகுதியில் கொடுத்துள்ளேன்.

எனது கடந்த 54 ஆண்டுகளின் குருத்துவ வாழ்க்கை அனுபவங்கள் என்னுடைய இறையியல் சிந்தனைகளோடு பின்னிப்பிணைந்து வளர்ந்திருக்கின்றன. என்னுடைய சொந்த அனுபவ இறையியல் வளர்ச்சியில் பல முறைகளில் வாதாடி வேதனையை விலையாக கொடுத்து அவைகளை என்னுடையவையாகப் பாதுகாத்து வைத்திருக்கின்றேன். அவற்றிற்கு எதிராக நண்பர்களும் ஆயர்களும் உரோமை அதிகாரிகளும் கண்டனம் தெரிவித் திருக்கின்றார்கள். இவை எல்லாவற்றின் மத்தியிலும நான் இறை வனுக்கும் அவர் கொடுத்த எனது மனச்சாட்சிக்கும் பிரமாணிக் கமாக நடந்து என்னுடைய சிந்தனைகளிலே நான் உறுதியாக நிற்கின்றேன். எனக்கு துணிவும் அருளும் கொடுத்த இறைவன் தொடர்ந்தும் என்னைக் காப்பாற்றிஎன்னை தனது தூதுவனாக வழி நடத்துவாராக.

*பணி. எஸ். ஜே. இம்மானுவேல்* sjemmanuel@t-online-de
ஆயர் இல்லம், யாழ்பாணம் esjayemmanuel@gmail.com
T.P:0763531104

**welcome to read some of my random thoughts on**
**my human, spiritual, theological, political & german life**

www.fremmanuelslifeexp.blogspot.com

www.fremmanuelsspiritualexp.blogspot.com

www.fremmanuelstheologicalexp.blogspot.com

www.fremmanuelspolitcalexp.blogspot.com

www.fremmanuelsgermanexp.blogspot.com

www.globaltamilforum.org

**And my Twitters in English,Tamil, Sinhala and German**
**Prof.Dr.S.J.Emmanuel @ProfSJEmmanuel**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கிறிஸ்தவத்தின் இறை-அனுபவ வளர்ச்சி

## (Experiential growth Of Tamil Christianity)

### அத்தியாயம் 1

### என்னை இம் முயற்சிக்குத் தூண்டிய காரணங்களும் என் ஆதங்கமும்

1.1 எனது சுய வரைவிலக்கணம் (self-identity) என்னைத் தூண்டுகிறது.

1.2 திரு அவை இறையியலாளர் என்ற நிலையும் (professor of ecclesiology) பணியின்போது பெற்ற பட்டறிவும் என்னை ஊக்குவிக்கின்றன

1.3 இலங்கை இனப் பிரச்சினை-போர் மத்தியில், கிறீஸ்துவ திரு அவைகளின் செயற் பாட்டில் ஏமாற்றமடைந்தேன்.

1.4 தமிழ் கிறீஸ்தவத்தில், பல பிரச்சினைகளும் ஏற்றத் தாழ்வுகளும் தொடருகின்றன.

1.5 சமூக அநீதிகளை, சீர்கேடுகளை ஒழிக்க, கிறீஸ்தவ ஆர்வம், முயற்சி போதாது.

1.6 திரு அவை எப்பொழுதும் சீர திருத்தப்பட வேண்டும். (church must be always reformed)

1.7 16ம் நூற்றாண்டின் பின் தோன்றிய தமிழத் திரு அவை களின் சூழலுக்கேற்ற மாற்றங்கள் செய்யப்படவில்லை.

1.8 2ம் வத்திக்கான் சங்கத்தின் துணிச்சலும் ஆர்வமும் நீடிக்கவில்லை! இருந்தும் தொடர்ந்தன சீர் திருத்த முயற்சி கள்

1.9 ஐந்து நிலைகளில் புதுப்பிக்க முயலுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 2

## இறை வெளிப்பாடுகள், மதங்களின் தோற்றம் இந்து-சைவ மார்க்கத்தில் தமிழரின் வாழ்வு.

2.1 சிருட்டிப்பின் வியப்பில் தவித்த மனிதனுக்கு, இறைவன் தாமே, தம்மை வெளிப்படுத்தினார்.

2.2 ஆசியாக் கண்டத்தில் தோன்றிய வாழ்க்கை முறைகள் - மார்க்கங்கள்

2.3 யூத விடுதலைப் பயணத்திலும் இரட்சகர் இயேசுவிலும் இறைவன் தம்மை வெளிப்படுத்தினார்.

2.4 பல் மதங்கள் மத்தியில் கிறிஸ்தவமும் ஒரு மதம்.

## அத்தியாயம் 3

## கிறிஸ்தவம் ஐரோப்பிய திரு அவையாக வளர்ந்தது - பிரிவினைகள் தோன்றின - எம் மத்தியில் மறைபரப்பாளரின் வருகை

3.1 இயேசு விண்ணகம் திரும்பிய பின் சீடர்கள் ஆவியினால் தூண்டப்பட்டு குழுமங்களை ஆரம்பித்தனர்.

3.2 பெந்தக்கோஸ்தும் அப்போஸ்தலரின் முதல் ஜெருசலேம் சங்கமும கிறீஸ்தவத்தைப் பிற இனத்தாருக்கும் இரட்சணியப் பாதையாகத் திறந்தது.

3.3 உரோமையை அடைந்த கிறிஸ்தவம் - முதலில் துன்பத்திற்கு உள்ளானது பின்பு அரசின் அனுசரணை பெற்றது

3.4 ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பேரமைப்பாக வளர்ச்சி.

3.5 11ஆம் நூற்றாண்டில் உரோமையிலிருந்து பிரிந்த கீழைத் தேசத் திருஅவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.6 14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மொழிகளிலே விவிலியம மொழிபெயர்பபு - மக்கள் புரட்சிகள் - எதிர் கொள்ள திரிடென்ரைன் சங்கம்

3.7 உரோமன் கத்தோலிக்க திரு அவையில் இறுக்கமாக கட்டப்பட்ட ஆர்வத்துடன் வந்த மறை போதகர்கள் எவ்வித தமிழ் மக்களை எதிர்நோக்கினர்.

## அத்தியாயம் 4

## பழைய வாழ்க்கை முறையையும் புதிய கிறிஸ்தவ ஆலய ஆராதனைகளையும் சேர்த்து தமிழ்க் கிறிஸ்தவர்களின் சமாளிக்கும் கிறிஸ்தவம்

4.1 போர்த்துக்கேய மறைபரப்பாளரின் ஆரம்பம்

4.2 ஆலயம் பூசாரி சடங்குகளை மையப்படுத்தி வாழ்ந்த தமிழர் - மதம் மாறிய பின்பும் அதே கண்ணோட்டத்தில் கிறிஸ்தவ ஆலய வழிபாடுகளையும் நோக்கினர்

4.3 சைவத் தமிழர்கள் கிறீஸ்தவ மதத்தில் எவ்விதம் சேர்ந்து கொண்டனர்?

4.4 ஆலயத்தையே மையப் படுத்தி வாழ்ந்தவர்கள் மதம் மாறிய பின் கிறிஸ்தவ ஆலயங்கட்கு சென்றனர்.

4.5 சைவ சமய ஆலயங்களையும் கிறிஸ்தவ ஆலயங்களையும் சரியாக புரிவது முக்கியம்

4.6 தமிழ்க் கிறிஸ்தவர்கள் பழைய முறைகளை முற்றாக விட்டு விடவில்லை

4.7 குடும்ப சமூக வாழ்வில் சமாளிக்கும் கிறிஸ்தவம்!

4.8 2ஆம் வத்திக்கான் சங்கம் தமிழ்த் திரு அவைகளுக்கும் தலைவர்களுக்கும் புது வழிகளை திறந்துள்ளது 4.9 அந்நிய மறைபரப்பாளர்களும் தமிழ்க் கிறீஸதவர்களும் தமிழ்மொழிக்கு ஆற்றிய சேவைகள் மதிப்புடையன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 5

## 2ஆம் வத்திக்கான் சங்கம் - கத்தோலிக்க திரு அவை முழுவதையும் புதுப்பிக்க நடந்த புதிய பெந்தக்கோஸ்து

5.1 உயிருள்ள அமைப்புகள் எப்பொழுதும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

5.2 23ஆம் அருளப்பர் திருத்தந்தையாக தெரிவானது திரு அவைகளுக்கு ஓர் புதிய பெந்தக்கோஸ்து!

5.3 திரு அவைகளை அவைகளின் சூழ்நிலைக்கு ஏற்ப சீர் திருத்தம் செய்ய இச்சங்கம் வழி திறந்தது. .

5.4 காலத்தின் அறிகுறிகளை புரிந்து திரு அவையை நவீனப்படுத்துவதற்காகவே இச்சங்கம் கூடியது.

5.5 2 ஆம் வத்திக்கான் சங்கம்! திரு அவையின் 21ஆவது சங்கம் - ஆனால் எமது காலத்திற்கேற்ற மாற்றத்தை - திருப்பத்தை ஊக்குவிக்கும் முதல் சங்கம்!

## அத்தியாயம் 6

## சங்கத்தின் முன்னேற்றமான முடிவுகளும் தமிழ்த் திருஅவைகளின் புதிய பயணமும்.

6.1 தமிழ்த் திருஅவைகள் உரோமைத் திருஅவையின் கிளைகளாகப் பணிவுடன் நீண்ட காலம் வளர்ந்தன.

6.2 2ஆம் வத்திக்கான் சங்கத்துடன் தமிழ்த் திருஅவை களுக்கு இன்னோர் ஆரம்பம்!

6.3 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஏவுதல்களுக்கு பாப்பரசர் பிரான்சீசின் துணிச்சலான ஊக்குவிப்பு.

6.4 சங்கம் ஆசிய மதங்களையும் பண்பாடுகளையும் புதிய கண்ணோட்டத்தில் நோக்கியது.

6.5 தமிழ் நாட்டில் இராமசாமி பெரியாரின் - சுய மரியாதை இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.6 மதத்தை சேர்நத நானும் சீர் திருத்தத்தின் ஒரு கருவியாகி மற்றவருடன் இணைந்து செயற்பட முயற்சிக்கின்றேன்.

## அத்தியாயம் 7

## 2ஆம் வத்திக்கான் சங்க ஏவுதல்களுக்கு தமிழ்த் திருஅவைகளின் வரவேற்பு.

7.1 தமிழ் ஆயர்கள் தமது பங்கெடுப்புக்கு மேலாக பொருத்தமான அறிவுரைகளைப் பெற்றனர்.

7.2 தமிழ்க் கிறீஸ்தவர்களும் பொதுவான ஆர்வத்துடன் சங்க ஏவுதல்களை வரவேற்றனர்

7.3 தமிழ்த் திருஅவைகள் பண்பாட்டு மயமாக்குதலை மிக ஆர்வத்துடன் வரவேற்றன.

7.4 தமிழில் இறைவார்த்தை

7.5 தமிழில் வழிபாடுகள்

7.6 ஊக்கப்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான மையங்கள்

## அத்தியாயம் 8

## வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.

8.1 வத்திக்கானின் சந்தேகமும் பண்பாட்டு மயமாக்குதலுக்கு 3 வருட அனுபவ அனுமதியும்.

8.2 பண்பாட்டு மயமாக்குதலின் போர்வையில் நடந்ததென்ன?

8.3 போதகர் இயேசு சினத்துடன் சீறி ஆலயப் பெருவிழா ஆயத்தங்களைச் சிதறடிக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.4 பண்பாட்டு மயமாக்குதலை மிகைப்படுத்தி வாழ்வின் மற்றைய கடமைகளைக் கை விட்டுவிட்டோமா?

8.5 உலக சூழலின் சோகம் நிறைந்த யதார்த்தங்களுக்கும் உண்மைகளுக்கும் தமிழ் திருஅவைகள அந்நியமாக வளர்ந்து வந்திருக்கின்றன.

8.5 ஐரோப்பிய திருஅவைகளின் உதவியுடன் மனிதாபிமான உதவிகளைச் செய்தோம்.

8.6 வறுமையிலும் துன்பத்திலும் மீட்புப் பணி செய்த இயேசுவைப்போல திருஅவைகளும் நடந்துகொள்ளவேண்டும்.

8.7 ஆகையினால் திஅவையைச் சீர்திருத்துவதற்கு பண்பாட்டு மயமாக்குதல் மாத்திரம் போதாது.

8.8 தமிழ்த் திருஅவை தமிழ் மக்கள் மத்தியில் ஒளியாகவும் உப்பாகவும் இருக்க வேண்டும்.

8.9 பிற மத சகோதரருடன் ஒன்றித்து சமூகப் பிரச்சினை களைத் தீர்ப்பதிலும் அநீதிகளை எதிர்ப்பதிலும் செயற்பட வேண்டும்.

## அத்தியாயம் 9

## சமாளிக்கும் தமிழ்க் கிறீஸ்தவத்தை புதுப்பிக்க தமிழ் விடுதலை இறையியல் தோன்றவேண்டும்

9.1 மறைபரப்பாளர்கள் 16ஆம் நூற்றாண்டில் நாட்டிய ஐரோப்பிய திருஅவைகள சுதேசிய வளர்ச்சி அடையத் தொடங்கின.

9.2 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் தென் அமெரிக்க ஆயர்களின் தாக்கமும் விடுதலை இறையியல் தொடக்கமும்.

9.3 தென் ஆபிரிக்க வட அமெரிக்க கறுப்பு மக்களின் விடுதலைப் போராட்டம் கறுப்பு இறையியலை பிறப்பித்தது
(Apartheid & Negro Black theology)

9.4 தென் அமெரிக்க ஆயர்களைப்போல் ஆசிய ஆயர்கள் ஏன் நடந்து கொள்ள முடியவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.5 சமூக அநீதிகளுக்கு எதிராக சிறுபான்மையான தமிழ் கிறிஸ்தவர்கள் எதுவித போராட்டமுமின்றி சமாளிக்கும் நிலையையே பின்பற்றினால் தமிழ் விடுதலை இறையியல் தோன்றாது.

9.6 தமிழ் திருஅவைகளின் தலைவர்களும் கிறிஸ்தவ ஒற்றுமை என்ற போர்வையில் தமிழ் மக்களின் சமூக அரசியல் பிரச்சினைகளை அரசியலாக மாத்திரமே கணித்து விலகி நின்றனர்.

9.7 ஈழத்தமிழ் விடுதலைப் போராட்டத்தில், தமிழ்க கிறீஸ் தவத்தின் பங்களிப்பும் மட்டுப்படுத்தப்பட்டது.

9.8 தமிழ் இளைஞர் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஆரம்பித்த ஆயுதப் போராட்டத்தை இன்னும் தமிழரே சரியாக புரிந்து கொள்வதாக இல்லை.

9.9 தென் ஆபிரிக்க அனுபவங்களும் எனது சர்வதேச ஈடுபாடுகளும்.

## அத்தியாயம் 10

## தற்போதைய தமிழ்த் திருஅவைகளை எவ்வாறு எவ்வளவுக்கு புதுப்பிக்கலாம்?

10.1 இறை ஏவுதலில் மனிதன் நடத்தும் திரு அவையை எவ்வளவுக்கு எவ்வாறு புதுப்பிக்கலாம்?

10.2 எம்மை புதுப்பிப்பதற்காக எமது ஊற்றின் அடித்தள உண்மைகளுக்கு திரும்புவோம்.

10.3 தமிழ் திருஅவைகளின் தூர நோக்கம் எமது சமூகத் தையும் உலகையும் இறையரசை நோக்கி நகர்த்துவ தற்காகவே

10.4 எம்மை ஊக்குவிக்கும் ஒரு உதாரணம் - தென் அமெரிக்க திருஅவைத் தலைவர்களின் துணிவு

10.5 வேதனை அனுபவங்களே எனது நம்பிக்கை உறுதியை பெலப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.6 துணிவான நம்பிக்கையும் வேதனைகளும் திரு அவையின் புதுப்பித்தலுக்கு இன்றியமையாதவை

10.7 தமிழ்த் திரு அவைகளின் சீர்திருத்தமும் தமிழ் சமூகத்தின் சீர்திருத்தமும் கிறீஸ்தவ ஆன்மீகத் தலைவர்களின் இரட்டைப் பணியாகும்.

10.8 எனது நம்பிக்கை உறுதியை அதிகரித்த வேதனை அனுபவங்கள்.

10.9 துணிவான நம்பிக்கையும் வேதனைகளும் திரு அவையின் புதுப்பித்தலுக்கு இன்றியமையாதவை எனது கடந்த கால வாழ்வில் நான் செய்த தவறுகளுக்கு மன்னிப்பு வேண்டுகின்றேன்.

## அத்தியாயம் 11

## 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில் மனித மீட்பும் உலக உண்மை நிலைகளும்

11.1 கத்தோலிக்க திருஅவையின் சங்கம் ஒன்று முதல் முறையாக உலக உண்மை நிலைமைகளுடன் எமது உறவை ஊக்குவித்தது.

11.2 இப்பயணத்தை ஆரம்பித்துத் தொடருவதற்கு வத்திக்கானிலும் ஆசியாவிலும் சில ஆயத்தங்கள்.

11.3 பிற மதத்தவருடன் கிறீஸதவர்கள் நடத்த வேண்டிய உறவு பற்றி உரோமைச் சபைக்கும் ஆசிய இறையியலாளருக்கும் நான் கொடுத்த ஊக்குவிப்பு

11.4 ஆசிய திருஅவைகளைப் பற்றி உரோமையின் தொடர்ந்த கவனம்

11.5 எல்லா மனிதருக்கும் ஒரே இறைவன் - மீட்பு அளிப்பவரும் அவரே!

11.6 மதமாற்றம் அல்ல நற்செய்தி விழுமியங்களை ஒளியாகவும் உப்பாகவும் கொடுப்பதே எமது நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.7 தமிழ்க் கிறீஸ்தவர்கள் சைவ மார்க்கத்தின் சூழலில் கிறீஸ்தவ விழுமியங்களை எப்படி வாழ்வது?

11.8 சவால் நிறைந்த எதிர்காலப் பயணத்தைத் துணிவுடன் தொடர கிறீஸ்துவத்தில் எம்முடைய இருப்பைத் தெளிவுபடுத்தி பெலப்படுத்துவது இன்றியமையாதது.

11.9 எமது வாழ்வு - சாட்சியம் - செயற்பாடுகள்?

## அத்தியாயம் 12

## இறை மறைபொருட்கள் - சிருட்டிப்பு - இறை வெளிப்படுத்தல - மீட்பின் வழிகள் - இறைவனில் எல்லாம் நிறைவடைதல்!

12.1 இறைவன் எப்பொழுதும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மாபெரும் மறைபொருளாகவே இருந்து செயற்படுவார்.

12.2 இறைமகன் கிறிஸ்து மனித மீட்பிற்காக இம் மண்ணில் ஆரம்பித்த இறை அரசும் இறைவனில் நிறைவடையும் மறை பொருள். அதை நோக்கியே கிறிஸ்தவர்கள் பயணிக் கின்றனர்.

12.3 நன்மையும் தீமையும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்து வளரும் மண்ணுலகிலே பல மதங்கள் மத்தியில் நாம் பின்பற்றும் வழிகள்.

12.4 கிறிஸ்தவ திருஅவையில் இணையாத கிறீஸ்துவின் பக்தர்களையிட்டும் மகிழ்வோம்

12.5 தமிழ்க் கிறிஸ்தவர்களின் வருங்காலப் பயணத்தில் மதம் சார்ந்த சவால்களையும் சந்திக்க வேண்டிவரும்.

12.6 தமிழ்க் கிறிஸ்தவர்கள் நவீன உலகின் சவால்களை சந்திக்க ஆர்வத்துடன் செயற்பட வேண்டும்.

12.7 எல்லா மனிதரின் தொடக்கமும் முடிவும் ஒரே இறை வனே என்ற தத்துவ உறுதியுடன் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 1*

# என்னை இம்முயற்சிக்குத் தூண்டிய காரணங்களும் என் ஆதங்கமும்

## 1.1 எனது சுய வரைவிலக்கணம் என்னைத் தூண்டுகிறது

நாளாந்த செபத்தில் நான் பாடும் முதல் வரிகள் -

*இதுவரை செய்த செயல்களுக்காக இறைவா உனக்கு நன்றி.*

*மனிதனாய்ப் படைத்து - தமிழனாய் வளர்த்து -*
*கிறீதுவின் சீடனாய்ப் பணி செய்ய அழைத்தாய்*

*அலைகடல் அலைந்து ஓய்கின்ற வரையில்*
*நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி*

இறைவன் என்னை மனிதனாகவும் தமிழனாகவும் இறைமகன் கிறிஸ்துவின் சீடனாகவும் அழைத்து மனிதத்துக்கும் தமிழினத்திற்கும் இயேசுவின் சாயலில் பணி செய்ய அனுப்பியுள்ளார். அதுவே எனது அடையாளமும் வாழ்வின் இலட்சியமுமாகும்.

இதற்கமைய நான் எனது இறைஅழைத்தலை இந்த 3 நிலைகளில்த்தான் உணருகின்றேன். மனிதன் - தமிழன் - கிறிஸ்துவின் சீடன். மூன்றையும் ஆழமாக மதித்து வாழ விரும்புகின்றேன். எமக்கு கிடைத்த முதல் இரண்டு அழைத்தல்களை அதாவது மனிதனாகவும் தமிழனாகவும் இவைகளைப் பற்றி நாம் அநேகர் பொறுப்புடன் சிந்திப்பதில்லை. அவை இரண்டிலும் இறைவன் இனா மாகக் கொடுத்த வாழ்வையும் திறமைகள் பண்புகளையும் உணர்ந்தால்தான் ஒவ்வொருவரும் தனது வாழ்க்கை நிலையில் மனிதத்துவத்திற்கும் தமிழினத்திற்கும் தமது கடமைகளையும் பணிகளையும் செய்ய முடியும.

என்னை பொறுத்த மட்டில் எனது மூன்றாவது நிலையான கிறிஸ்தவ சீடத்துவத்தில் வாழ்ந்து இயேசு காட்டிய பணி உருவில் எனது மனித சமுதாயத்திற்கும் தமிழ் இனத்திற்கும் இயன்ற பணி களைச் செய்ய முயலுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையே எனது குருத்துவத்தின் சாராம்சமாக மேலும் மேலும் புரிந்து கொள்ளுகிறேன். இந்நோக்கிலேயே மனித சமுதாயத்திலிருந்தும் தமிழ் உடன் பிறப்புகளிடமிருந்தும் கிறிஸ்தவத்திலிருந்தும் பெற்ற அனுபவங்களை ஒருங்கி ணைத்துப் பார்க்கிறேன். கிறிஸ்துவின் ஒளியில் குறைகளை உணர்ந்து அவரின் உருவில் பணி செய்ய முயலுகின்றேன்.

## 1.2 திருஅவை இறையியலாளர் என்ற நிலையிலும் பணியிலும் பெற்ற பட்டறிவும் என்னை ஊக்குவிக்கின்றன

நான் உரோமையிலே 2ஆம் வத்திக்கான் சங்கம் நடந்த வருடங்களில் (1962-1965) எனது மெய்யியல் - இறையியல் அறிவையும் உருவாக்கத்தையும் பெறும் பாக்கியம் பெற்றேன். அதன்பின் 1976ஆம் ஆண்டு உரோமையில் இறையியல் பண்டிதத்தையும் பெற்று எனது இறையியல் தேடல்களை தொடங்கினேன். இவைகள் இறைவன் எனக்களித்த பெரும் ஆரம்ப கொடைகள்.

இதன் பின்பு இறையியலாளராக 20 வருடங்கள் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் (1976-1996) பணியாற்றினேன். இதே காலத்தில் ஆசிய ஆயர் சங்கங்களிற்கு இறையியல் ஆலோசகராகவும் பணியாற்றினேன். இலண்டன் - பிறாங்பேட் - முன்ஸரர் கலாசாலைகளில் வருகைதரு பேராசிரியராகவும் இறையியல் விரிவுரைகள் ஆற்றினேன். அத்துடன் ஜேர்மனியின் புகழ்பெற்ற கலாசாலைகளுடனும் இறையியலாளருடனும் 30 ஆண்டுகளுக்கு மேல் (1983-2017) தொடர்பில் இருந்து இறையியல் அனுபவங்களைப் பெற்றிருக்கின்றேன்.

போர்க் காலத்தில் இலங்கை புத்த சிங்கள ஊடகங்களினாலும் அரசாங்கத்தினாலும் பொய்யாக குற்றம் சாட் டப்பட்டேன். தனியாக அவைகளை எதிர்த்து பணி செய்ய முடியாததினால் தாய் நாட்டை விட்டு வெளியேறினேன். 21 வருடங்கள் ஜேர்மனியில் வாழ்ந்து ஜேர்மன் திருஅவைக்கும் உலகில் பரவி வாழும் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியிலும் பணி செய்தேன். 2015ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் மீளவும் தாய் நாட்டிற்கு அழைக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு மார்கழி நாடு திரும்பினே்.

இந்நிலையில் 2019ஆம் ஆண்டில் தமிழில் சில சிறு புத்தகங்களை வெளியிட்டேன். அவை 1) *முடிந்த முள்ளி வாய்க்காலும் தொடரும் போராட்டமும் 2) இனப் பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும் 3) பொது நிலையினரின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முதிர்ச்சி 4) பொது நிலையினரின் எழுச்சி என்பனவாகும்.* தாய் நாடு திரும்பியதும் எனது தாய்த் தமிழ் சமூகத்தையும் அதன் மத்தியில் இருந்து இயங்கும் கிறிஸ்தவ திருஅவைகளையும் கிறிஸ்தவர்களையும் கூர்மையாக அவதானித்தேன். தெளிவாக எனது கவனத்தையும் இரக்கத்தையும் ஈர்த்தவை கள் பல. மாற்றங்களின் தேவையைக் கூர்மையாக உணர்ந் தேன்.

### 1.3 இலங்கை இனப்பிரச்சினை - போர் மத்தியில் கிறிஸ்தவ திருஅவைகளின் செயறபாட்டில் ஏமாற்றமடைந்தேன்

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து எமது மண்ணில் மாற்று நடுகை செய்யபட்ட (transplanted churches) திரு அவைகள் இலங்கையில் மற்ற மதங்களுக்கிடையில் சிறு பான்மையாக இருந்தாலும் கடந்த 70 வருடங்களாக இம்மண்ணில் நடக்கும் அநீதிகள் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள துயரங்கள் மத்தியில் கிறிஸதுவின் அவைகளாக இருக்கவில்லை. இயங்கவில்லை. இவை எனது ஏமாற்றம்! நீண்ட போரின் அழிவுகளைத் தன்னும் சரியாக புரிந்து பணி செய்ய முடியாததை இட்டு வருந்துகிறேன்.

அன்று தனித்தவனாக எனது குரு முதல்வர் பணிகளை திரு அவைகளின் மௌனத்தின் மத்தியிலும் செய்ததின் காரண மாக நான் தவறாகத் தீர்பிடப்பட்டேன். என் அபிப்பிரா யங்களையும் செயல்களையும் விளக்க கொழும்பு ஆங்கில ஊடகங்களுக்குக் கடிதங்கள் எழுதி விளக்கியிருந்தேன். அத்துடன் 1994இல் ஆங்கிலத்தில் Church politics and war in Sri Lanka என்ற சிறிய நூலையும் வெளியிட்டேன். இருந்தும் என் மேல் தவறான விமர்சனங்கள் - பொய்யான குற்றச்சாட்டுகள் - தென் இலங்கையின் சிங்களப் புத்தரிட மிருந்து அதிகரிக்க திருஅவை தலைவர்கள் எவரும் எனக் காகக் குரல் கொடுக்க இல்லாததால் 1996 செப்ரெம்பர் ஐரோப்பா சென்றேன். அங்கிருந்து ஜேர்மன் முன்ஸரர் மறைமாவட்டத் திருஅவைக்கும், உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடனும் இணைந்து ஈழத் தமிழருக்காக சர்வதேச மட்டத்தில் குரல் கொடுத்தேன். 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டுவரை உலகத் தமிழர் பேரவையின் தலைவராகப் பற்பல நாடுகளுக்கு சென்று மக்களையும் அரசாங்கங்களையும் சந்தித்து இலங் கையில் சமாதானம் ஏற்படுத்த முயன்றேன். ஜெனிவாவில் இயங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டங்களில் 25 ஆண்டுகள் தொடர்ச்சியாக பங்கு பற்றினேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் இலங்கைத் திருஅவைவகள் மக்களின் பிரச்சினைகளிலும் தற்போதைய அரசாங்கம் பாதுகாப்பு படைகளை நெருக்கமாக இணைத்து செயற்படுவதையும் ஜனநாயகம் குறைந்து சர்வாதிகாரம் மிகுந்து மக்ளை அடக்கி ஒடுக்க முயற்சிக்கும் நேரத்தில் மௌனமாகச் செயலற்றிருப்பது கோளைத்தனம்.

கொரோணா அபாயத்தை சாட்டாக வைத்து தலைவர்கள் துன்புறும் மக்களிடமிருந்து தூர நிற்பதும் சரியல்ல. வழிபாடுகளை குறைப்பதுடன் நின்று விடாது மாற்று வழிகளை திறந்து இல்ல-திருஅவைகளை ஊக்கபடுத்த வேண்டும்.

## 1.4 தமிழ்க் கிறிஸ்தவத்தில் பல பிரச்சினைகளும் ஏற்றத் தாழ்வுகளும் தொடருகின்றன.

கடந்த 400 வருடங்களாக பல வளர்ச்சி முதிர்ச்சி படிகளை கடந்து வந்திருந்தாலும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் இன்னும் கிறிஸ்தவத்தின் சாராம்சத்தை முழுமையாக உள்வாங்காதவர்களாக தமக்குள்ளே வேரூன்றி இருக்கும் வேறுபாடுகள் அடிமைத்தனங்களைக் கைவிடுவதாக இல்லை.

ஒரு பக்கத்தில் ஆலய வழிபாடுகளைச் சிறப்பாக நடாத்திக் கொண்டு மறுபக்கத்தில் மனித உறவிலும் சமூக வாழ்விலும் ஏற்றத்தாழ்வுகளைக் கடைப்பிடித்தே வருகின்றனர். இவ்வாறு வழிபாட்டிலும் வாழ்விலும் இரு முகங்களுடன் வாழ்வது சமாளிக்கும் கிறிஸ்தவம் என்றே நான் கருதுகிறேன். நீண்ட காலம் சமாளித்து வந்த கிறீஸ்தவத்தின் காரணமாகவே இன்றும் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

16ஆம் நூற்றாண்டில் எமது மூதாதையர் தமிழராக வாழ்ந்து கொண்டு கிறிஸ்தவத்தை ஒரு புதிய மதமாகத் தழுவிய பொழுது கிறிஸ்தவத்தின் சாராம்சத்தை சரியாக உள் வாங்கவில்லை - புரிந்து கொள்ளவில்லை. அதாவது எல்லா மனிதரும் இறைவனின் பிள்ளைகளென்றும் தமக்குள்ளே சமத்துவ சகோதரர் என்பதையும் புரிந்து ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கும் பல காரணங்கள் உண்டு. அவைகளை அறிந்து சீர்திருத்த வேண்டியவை பல உண்டு. இன்றைய பிரச்சினைகளின் வேர்களைச் சரியாக இனங்கண்டு அவைகளை இனியாவது களைய வேண்டும் என்பதே எனது ஆதங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.5 சமூக அநீதிகளை ஒழிப்பதில் கிறிஸ்தவ திருஅவைகளின் ஆர்வம் - முயற்சி போதாது

2ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் தென் அமெரிக்கா ஆபிரிக்கா நாடுகளில் மனித சமூகத்திலுள்ள வறுமை - அநீதி - துன்புறுத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு முன்னு ரிமை கொடுத்து அவைகளைத் தீர்க்க முயலுகின்றனர். சமூக அநீதியை ஒழிக்க விடுதலை இறையியலையும் (liberation theology) அடிப்படை கிறீஸ்தவ குழுமங்களை (basic christian communities) ஆரம்பித்தனர். இவர்களின் முயற்சிகளிலிருந்து பயன் பெற 80ஆம் ஆண்டுகளில் நாம் தென் அமெரிக்கர் சிலரை இலங்கைக்கு அழைத்து கொழும்பு - கண்டி, திருகோணமலை - யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கூட்டங்களை நடத்தினோம்.

ஆனால் இன்றும் எமது தமிழ்த் திருஅவைகளுக்குள் கிறிஸ்தவ - விசுவாசம் கிறிஸ்தவ - சீடத்துவம் - கிறிஸ்தவ குழும வாழ்வும் - மனித சமூகத்தில் நிலவும் அநீதி - வறுமை இவைகளுக்கெதிரான பணிகளும் பல விதத்தில் சீரமைக்கப் பட்டுப் புதுப்பிக்கப்பட வேண்டிய தேவை இருப்பதாக எனக்கு தோன்றுகிறது.

1.6 திருஅவை எப்பொழுதும் சீர்திருத்தப்பட வேண்டும் (church must be always reformed)

இந்த தத்துவ வாக்கு திருஅவையில் எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இதை அதி உயர் தலைமைத்துவமும் தலத் திருஅவைத் தலைவர்களும் தத்துவத்திற்கு ஏற்ற ஞானத்துடனும் துணிவுடனும் நடந்து கொள்ளவில்லை!

உயிர் வாழும் அனைவரும் எம்மை நாளாந்தம் புதுப்பிப்போம். அழுக்குகளை அகற்றிப் புதிய உடை அணிந்து எமது தோற்றத்தைப் புதுப்பிப்போம். எமது உடலின் தோற்றத்தைப் புதுப்பித்தலும் அழகுபடுத்துவதும் போதாது. நாம் தொடர்ந்து வாழ்வதற்கு இன்றியமையாதது, எமது உயிரையும் உடலையும் உயிருள்ள நிலையில் காப்பதற்கு நல்ல காற்றைச் சுவாசிக்க வேண்டும். சக்தியான உணவை உண்ண வேண்டும். சுகத்திற்கு பாதகமான வற்றை தவிர்க்க வேண்டும். உடற் பயிற்சி செய்ய வேண்டும். இவைகள் இல்லாவிடில் நாம் வாழ முடியாது - பணி செய்ய முடியாது. கெதியில் வாழ்வை இழந்து பிணங்களாகி விடுவோம்.

ஆனால் திருஅவைகள் தெய்வீக பிரசன்னத்தை கொண்ட மனித அமைப்பு (human institution containing divine presence) மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாகவும் கூட்டாகவும் தங்களுடைய காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற தெய்வீக ஆவியை உள்வாங்கி வார்த்தையாலும் அருட் சாதனங்களினாலும் ஊட்டம் பெற்று பணிபுரியும் நிலையில் இருக்க வேண்டும். அதற்காகவே திருஅவை இவ்வுலகில் இருக்கின்றது.

இச்சீர்திருத்தத்தை ஆங்கிலத்தில் Reform என்கின்றனர். அதை பிழையாக re+form என்ற விளக்கத்தில் முன்னிருந்த நிலைக்குத் திரும்பிச் செல்வதாகக் கருதக் கூடாது. ஆங்கில சொல் கிரேக்க metaphorein என்ற சொல்லிலிருந்து உருவத்தை மாற்றுவது என்று பொருள்படும். ஆகையினால்

சீர்திருத்தம் என்று நாம் கூறுவது முந்திய நிலைக்குத் திரும்புவது அல்ல மாறாக கிறீஸ்துவத்தை நிகழ் காலத்திலும் வருங்காலத்திலும் செயற்படக் கூடியதாக (futurable) மாற்றுவதாகும்.

இதற்காகவே கிறிஸ்தவத்தின் ஊற்று நிகழ்வுகளை மீளவும் ஆழமாகப் புரிந்து கொண்டு வரலாற்றில் இடம் பெற்ற தவறுகளைக் களைந்து இன்றைய உண்மையான சூழலுக்கும் சவால்களுக்கும் பொருத்தமான முறையில் திருஅவையை அமைப்பது அவசியம்.

இப்போர்ப்பட்ட சீர் திருத்தம் 20ஆம் நூற்றாண்டு வரலாற்றில் திருஅவையில் இடம் பெறவில்லை. முதலாவது ஜெருசலேம் சங்கத்தை தவிர மற்றவை அனைத்தும் விசுவாச கோட்பாட்டை நிர்ணயிப்பதிலும் அவைகளுக்கெதிராக எழுப்பப்படும் கொள்கை களைத் தண்டிப்பதிலும் திருஅவை பிளவுபடுவதை ஒழுங்கு செய்யவே நடத்தப்பட்டன.

## 1.7 16ஆம் நூற்றாண்டின்பின் தோன்றிய திருஅவைகளில் சூழலுக்கேற்ற மாற்றங்கள் செய்யப்படவில்லை.

திருஅவை உரோமைத் தலைமைத்துவத்தின் கீழ் வளர்ந்து கொண்டு போகையில் அமைப்பிலும் அதன் அதிகார முறைகளிலும், பல இன்றியமையாத மாற்றங்கள் நடந்தே றின. விசேடமாக யூதேயாவில் உதித்த கிறிஸ்தவத்தின் ஆரம்ப விசுவாசக் கோட் பாட்டை உரோமைத் தலைமைத் துவத்தின் கீழ் கிரேக்க மெய்யியல் - ஐரோப்பிய இறையியல் வழியாகக் கட்டுப்படுத்திப் பாதுகாப் பதற்காக எடுத்த கடும் நடைமுறைகளில் பல பிழைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இப்படியாக 16ஆம் நூற்றாண்டுவரை ஐரோப்பிய நாடுகளில் மாத்திரம் வளர்ந்த திருஅவைகள் தென் அமெரிக்கா - ஆபிரிக்கா - ஆசிய நாடுகளிலும் அதே உருவத்திலும் விசுவாசக் கோட்பாட்டுடனும் நாட்டப்பட்டன. (transplanting European churches



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on alien/Asian soil) இவைகள் 300 ஆண்டுகளுக்குமேல் ஐரோப்பியக் கண்ணோட்டத்துடன் உரோமையினால் நடாத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில்தான் - ஓர் உலக ஆயர் சங்கம் - 2ஆம் வத்திக்கான் சங்கம் கூடி இவ்அந்நிய நாடுகளின் தற் போதைய சூழலை மாத்திரமல்ல முழு உலகில் மாறி வரும் நிலைகளையும் கணிக்கவும் பெரும் மாற்றங்களை முன் மொழிந்து சங்க ஏடுகளாகத் துணிந்து பிறப்பித்திருக்கின்றது.

1.8 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் துணிச்சலும் ஆர்வமும் நீடிக்கவில்லை! இருந்தும் தொடர்ந்தன சீர் திருத்த முயற்சிகள்

இந்த நூற்றாண்டுகளில் உலகத் திருஅவைகளை காலத்திற்கேற்பப் புதுப்பிக்க நாம் பெற்ற பரிசுத்த ஆவியின் கொடை 1962-65 நடந்தேறிய 2ஆம் வத்திக்கான் சங்கம் ஆகும். அச்சங்கம் எமது திருஅவைகளுக்குப் பொருத்தமான முக்கிய அறிவுரைகளை வழங்கி இருக்கின்றது. இவைகளை நிறைவேற்றிய சங்கபிதாக்களும் இறையியலாளரும் வீடு திரும்பினர்.

சங்கத்தின் பார்வையையும் ஊக்குவித்தல்களையும் நடைமுறைப்படுத்துவது வத்திக்கானில் தங்கியிருந்த தலைவர்களிலே தங்கியிருந்தது. இதன் காரணமாக பல இழுத்தடிப்புகள். தமிழ்த் திருஅவைகள் தமது தமிழ் - மார்க்க வாழ்க்கை முறைகளின் காரணமாக எல்லாவற்றையும் முழுமையாக உள்வாங்கவில்லை.

தமிழ் மொழி கலை கலாசாரம் சார்ந்த முன்னேற்றங்களைப் பெருமையுடனும் ஆர்வத்துடனும் வரவேற்று அரும்பெரும் முயற்சிகளில் தமிழர் தம்மை ஈடுபடுத்துகின்றனர். ஆனால் அதே சங்கம் மனித சமூகத்தின் மேன்மைக்காக வலியுறுத் திய வழிகளை வரவேற்கத் தயங்குகின்றனர். மனித சமூக வாழ்வின் பிரச்சினை களுக்கு வறுமை, - ஏற்றத்தாழ்வு - அடக்கு முறைகள் - அநீதி இவைகளுக்குக் காரணமாயி ருப்பவற்றை ஒழிக்கத் தயங்குகின்றனர். காரணத்தைத் தேடுவோம்.

சங்க முடிவுகளைத் தன்னும் எமது ஆசியச் சூழலில் நடை முறைப்படுத்துவதில் வத்திக்கான் அதிகாரிகளை மனம் திருப்புவது கடினமாயிருந்தது. (*1986-1994 வரை ஆசிய திரு அவை ஆயர்களுடன் நானும் ஏனைய 15 ஆசிய இறை யியலாளரும் உரோமை இறையியல் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடாத்திய போதும் எமது மத - பண்பாட்டு பிரச்சினைகளை ஏற்று முயற்சி எடுப்பது கடினமாயிற்று*) ஆனால் தற்போதைய பாப்பரசர் *பிரான்சிஸ் எமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றார். ஆகையினால்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இனியாவது, இந்த 2 ஆம் வத்திக்கான் சஙகம் ஊடாக பரிசுத்த ஆவியானவர் ஏவியிருக்கும் சீர்திருத்த வழிகளை அலட்சியம் செய்யாது மனப்பூர்வமாகவும் ஆர்வத்துடனும் ஏற்று எம்மைச் சீர்திருத்துவோமாக.*

1.9 ஐந்து நிலைகளில் புதுப்பிக்க முயலுவோம்.

ஆகையால் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக எமது சீர்திருத்தல் முயற்சி - கிறிதவத்தின் தனி பெரும் தன்மைக்கும் எமது தமிழ் உண்மைச் சூழலுக்கும் சவால்களுக்கும் ஏற்றதாக நேர்மையானதாக இருக்க வேண்டுமாயின் நாம் ஐந்து நிலைகளிலே வழி செல்ல வேண்டி இருக்கிறது.

1. கிறிஸ்தவ மதம் யூத ஊற்றைக் கொண்டிருந்தாலும் ஆரம் பத்திலேயே திரு அவை முழு மனிதருக்குமாக, இன - பண்பாட்டு எல்லைகளைக் கடந்ததாக வெளிப் படுத்தப் பட்டது. (Universality of Christianity) இவைகள் விவிலியத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

2. திருஅவை பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் வளர்ந்த தன் காரணமாக ஐரோப்பிய தோற்றத்தையும் சிந்தனை - இறையியல் - வழிபாட்டு முறைகளையும் தழுவிற்று. (Roman institutinalisation of Christianity) உரோமையிலே நடைபெற்ற மாற்றங்கள் மேற்கூறப் பட்ட விவிலிய வெளிப்பாட்டினதும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி சீடர்களின் நம்பிக்கை குழுக்களின் முக்கியத்துவத்தையும் உரிமையையும் குறைக்க முடியாது.

3. தமிழர்கள் கிறிஸ்தவ மதத்தை ஆரம்பத்தில் தழுவிய விதத்தையும் தமிழ்க் கிறீதவர்கள் வளர்ந்து வந்த விதத்தை யும் கவனத்திற்கொண்டு திருஅவையின் ஆரம்ப நிகழ்வுக ளையும் 2ஆம் வததிக்கான் சங்கம் கொடுத்த முன்னேற்ற மான பார்வைகளையும் கண்ணோட்டத்தையும் முழுமை யாக உள்வாங்கி ஆரம்ப தமிழ்க் கிறீஸ்தவர்களில் இருந்த குறைபாடுகளைத் திருத்தி அமைக்க வேண்டும்.

   (Updating Tamil Christianity to Vat.II Council)

4. அத்தோடு சங்கம் எமது அந்நிய இன மதப் பண்பாடுகளைப் பற்றி முன்னேற்றமான பார்வையுடன் உறவு கொண்டு கிறிஸ்துவின் ஒளியாகவும் உப்பாகவும் சூழலில் இருக்கும் மனிதத் தன்மையற்றவைகளை நீக்கி நாம் பணி புரிய எம்மை ஊக்கப்படுத்துவதைப் பொறுப்புடன் நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்க வேண்டும். (Enabling Tamil Christianity to be effective Light - salt in the Tamil world)

5. நான் கற்பனை இறையியல் (speculative, scholastic theology) மாத்திரம் செய்ய விரும்பவில்லை. சிந்தனை - இறையிய லாக்கத்தில் நின்றுவிடாது எனது வாழ்வில் பின்னிப்பிணைந்து எனது சிந்தனை செயல்களைத் தூண்டியவைகளைத்தான் பட்டறிந் தவைகள் என்று கூறுகின்றேன். நான் பார்த்தவை கேட்டவை பல. ஆனால் இங்கே நான் வாழ்வில் விலை கொடுத்து அனுபவித்வைகளையே பட்டறிவு என்று வைத்து ஒரு அனுபவ இறையியலாக்கம். (experiential theology) செய்யத் துணிகிறேன்.

எனது அழைத்தலிலும் இறையியல் செய்வதிலும் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றியதிலும் ஆபிரிக்கா - தென்அமெரிக்க - ஆசிய இறையியலாளர்களுடன் கொண்ட தொடர்புகளிலுமிருந்தும் கற்றுக் கொண்டவைகளை பல எதிர்ப்புகள் துன்பங்களுக்கு இறை அருளுடன் முகங் கொடுத்து உரையாடலிலும, என் கருத்திற்காக வாதாடுவ திலும் எனது உறுதியை பெலப்படுத்திக் கொண்டேன். (conviction through suffering, discussion, debate and defence) இக்காரணங்களுக்காக இடைக்கிடையே எனது வாழ்வில் எடுத்த முடிவுகளையும் செயல்களையும் தாக்கங்க ளையும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

இன்று நான் மகிழ்ச்சி அடைவதன் காரணம் என்னவென்றால் ஆசிய திருஅவைகள் எனது கருத்துக்களை வரவேற்ற போதிலும் இயேசுவை போல் உரோமைத் திருஅவை அதி காரிகளினால் நான் சந்தேகத்திற்கும் எதிர்ப்புக்கும் உள்ளா னேன். ஆனால் இறைவன் தன் இறையரசுத் திட்டத்தில் இன்னும் என்னைக் கத்தோலிக்க திருஅவைக்குள் வைத்து மக்கள் மத்தியில் ஒரு கருவியாக வழிநடத்துகிறார்.

தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் திருஅவைகளுக்கும் இப் பணியை உரிய முறையில் செய்ய இறைவன் எமக்கு அருள் தருவாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 2*

# இறைவெளிப்பாடுகள் - மதங்களின் தோற்றம் - இந்து சைவ மார்க்கத்தில் தமிழர் வாழ்வு

## 2.1 வியப்பில் தவித்த மனிதனுக்கு இறைவன் தாமே தம்மை வெளிப்படுத்தினார்.

அனைத்துப் படைப்புகளையும் அவைகளின் அழகையும் ஒழுங்கையும் கண்டு மனிதன் வியப்படைந்தான். அவனது ஐம்புலன்களினால் விளங்கவோ விளக்கவோ, அவைகளின் காரண கர்த்தாவை அறியவோ முடியாது தவித்தான். இந்தத் தேடல் நிலையில்தான் அன்பும் இரக்கமுமான இறைவனே தம்மைச் சகல மனிதருக்கும் வெவ்வேறு விதத்தில் வெளிப்படுத்தினார். தாம் இனமாகக் கொடுத்த இன - மொழி - கலை - கலாசார - சூழலில் அறிகுறிகள் ஞானிகள் ஊடாகத் தம்மை வெளிப்படுத்தினார்.

இந்த அறிகுறிகளை ஆதாரமாகக் கொண்டு மக்கள் தமது சூழலில் அந்த இறைவனை வெவ்வேறு வழிபாடுகள் செபங்கள் ஆலயங்கள் வழியாக வழிபட்டனர். இவைகள் அவர்களுக்குரிய மதங்களாக வளர்ந்தன. உலகின் வெவ்வேறு பாகங்களில் மனித வாழ்வு தோன்றிய காலம் தொட்டு சிருட்டிப்பின் சிகரமாக வாழ அழைக்கப்பட்ட மனிதன் தனது ஐம்புலன்களையும் பயன்படுத்தி வாழ்ந்தான். அனைத்தையும் அனுபவித்து வாழ்ந்தவன் காரண கர்த்தாவை வியப்பிலே தேடினான்.

இந்நிலையில்தான் இறைவன் தம்மை வெவ்வேறு வழியாக வெளிப்படுத்தினார். அவைகளை ஆதாரமாக வைத்து மனிதன் இறைவனோடு தொடர்பு கொண்டான். போற்றுதல் - வேண்டுதல் - நன்றிகூறுதல் ... இம் முயற்சிகள் வளர்ந்து மதங்களாக - இறைவனையும் மனிதனையும் இணைக்கும் மத அமைப்புகளாக உருவெடுத்தன.

## 2.2 ஆசியாக் கண்டத்தில் தோன்றிய வாழ்க்கை முறைகள் - மார்க்கங்கள்

ஆசியாக் கண்டத்தில் தோன்றிய வாழ்க்கை வழி முறைகள் சீனாவில் கொன்பூசியஸ் ஊடாகவும் இந்தியாவில் இந்து ஞானிகள் ஊடாகவும் தோன்றின. இவைகள் பின்தோன்றிய மதங்களைப்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான வரையறுக்கபட்ட கோட்பாடுகளையும் ஒழுங்கு அமைப்பு களையும் தலைவர்களையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட மக்கள் அவர்களின் சூழல் இயற்கை இறை ஏவுதல்கள் கொண்ட மூதாதையர் ஞானம் அடங்கிய வாழ்க்கை முறையாக - மார்க்கமாக இருந்தது. சுருங்கக் கூறின் மார்க்கம் அல்லது வாழ்வுமுறை என்பது வாழ்விற்குத் தேவையான சகலத்தையும் மொழி கலை கலாசாரம் தெய்வீக ஏவுதல்கள் உணவு சிந்தனை முறைகள் எல்லாவற்றையும் ஒன்றாக மனிதருக்கு வழங்கியது.

ஆகையினால் 16ஆம் நூற்றாண்டில் கிறீஸதவம் தமிழர் களை வந்தடைவதற்கு முன்பும் வாழ்வில் குறையில்லாத வர்களாக அவர்கள் வாழ்ந்தனர். இறைவனை ஆராதிக்கவும் (மதம்) மனித வாழ்வை குடும்பத்திலும், சமூகத்திலும், வாழ்வதற்குத் தேவையான ஞானத்தையும் அறிவையும் மூதாதையர் ஞானிகள் திருக்குறள் - நாலூறு போன்ற பல வழிகளில் கற்றறிந்தனர். தேசவழமை நடை முறையில் இருந்தது. ஆகையினால் பிரச்சினையின்றி சமூகமாகப் பல நூற்றாண்டுகளாகத் தமிழர் வாழ்வு முழு மனித வாழ்வாகப் போய்க் கொண்டிருந்தது.

## 2.3 யூத விடுதலைப் பயணத்திலும் இறைமகன் இயேசுவிலும் இறைவன் தம்மை வெளிப்படுத்தினார்.

மத்திய கிழக்கில் இறைவனின் வெளிப்படுத்தல் யூத மக்களின் சரித்திரத்தைத் தழுவியது. இறைவன் ஆபிரகாம் என்பவரை அழைத்து புதுமையான வழிகளிலே அவரைப் பல இனங்களுக்குத் தந்தையாக்கினார். இந்த இனங்களில் ஒன்றான யூத இனம் எகிப்தியரின் பிடியில் அடிமைகளாகத் தவித்தனர். இவர்களுக்கு இறைவன் மோயீசன் வழியாக, எகிப்திய பார்வோனின் முன்நிலையில் - என் மக்களைப் போக விடு - என்ற செய்தியுடன் அவர்களின் விடுதலைப் பயணத்தில் செயற்பட்டார்.

இறைவாக்கினர் முன்கூட்டியே அறிவித்தபடி யூதரின் தாவீதின் குலத்தில் இயேசு இறைமகன் தோன்றினார். தமது போதனை பாடுகள் சிலுவை மரணம் உயிர்ப்பினால் கிறிஸ்வத்திற்கு அஸ்திவாரமிட்டார்.

இச்செய்தியைத்தான் அவருடைய சீடர்கள் யூதேயாவிலும் அயல் நாடுகளிலும் ஆர்வத்துடன் பரப்பினர். ஆனால் இச்செய்தி 16ஆம் நூற்றாண்டுவரை தமிழராகிய எம்மை வந்தடையவில்லை.

கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தில் இறைவன் தம்மை ஓர் விடுதலைப் பயணத்தில் வெளிப்படுத்தினார். இஸ்ரவேலரை எகிப்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க மோயீசனை தேர்ந்தெடுத்து எகிப்திய பார்வோனின் முன்னால் - என் மக்களை வாழ விடு - என்ற கட்டளையுடன் விடுதலையை ஆரம்பித்தார்.

*(இக்காரணத்தைக் கொண்டே ஈழத் தமிழரின் போராட்டத்தில் நான் எனது கிறீஸ்தவ குரல் கொடுக்க ஆரம்பித்த பொழுது ஆங்கிலத்திலும் தமிழிலும் ஜேர்மனிலும் பிரெஞ்சு மொழிகளிலும் -* ***Let my people go*** *- என் மக்களைப் போக விடுங்கள் - என்ற தலைப்பில் சிறு புத்தகங்களை வெளியிட்டேன்.)*

## 2.4 பல் மதங்கள் மத்தியில் கிறிஸ்தவமும் ஒரு மதம்.

இறைவனே அனைத்து மதங்கள் தோன்றுவதற்கு ஊற்றாகவும் முடிவுமாக இருப்பதன் காரணமாக கிறிஸதவர்களாகிய நாம் கடந்த காலத்தில் எமது திருஅவை பற்றியும் மத மாற்றங்கள் பற்றியும் வைத்திருந்த புரிந்துணர்வுகளை மாற்றி அமைக்க வேண்டும். 2ஆம் வத்திக்கான் சங்கத்தை தொடர்ந்து விசுவாசத்தை பரப்புதற்கு பொறுப்பாயிருந்த உரோமைத் தலைமைப்பீடத்தின் பெயர் (Propagation of Faith) மாற்றப்பட்டது. தற்போது கத்தோலிக்க கிறிஸ்தவர்க ளாகிய நாம் மனம் திரும்பி மதமாற்றத்தை நோக்காகக் கொண்டு செயற்படுவதில்லை. ஆனால் இயேசுவின் நற்செய்தியை எல்லோர்க்கும் அறிவித்து அவைகளின் அடிப்படையில் செயற்படுகின்றோம். உரோமைத் தலைமைப் பீடமும் இப்போது நற்செய்தியைப் பரப்புவதற்காகவே (Evangelization of People) செயற்படுகின்றது.

திரு அவைகள் அனைத்து மதங்களைப் போலும் இறைவனையே தொடக்கமாகவும் முடிவுமாகக் கெண்டு மற்றைய மதங்கள் மத்தியில் பயணம் செய்கின்றன. தமிழ்த் திரு அவைகள் தமது சூழலுக்கேற்ப நற்செய்தியைப் போதித்து அதன் விழுமியங்களைச் சமுதாயத்தில் நிலை நாட்டுவதே எமது தலையான கடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 3*

# கிறிஸ்தவம் ஐரோப்பிய திரு அவையாக வளர்ந்தது - பிரிவினைகள் தோன்றின - எம் மத்தியில் மறைபரப்பாளரின் வருகை

**3.1** இயேசு விண்ணகம் திரும்பிய பின் சீடர்கள் ஆவியினால் தூண்டப்பட்டுக் குழுமங்களை ஆரம்பித்தனர்.

இயேசுக் கிறிஸ்துவின் விண்ணேற்றத்திற்குப்பின் ஆவியினால் ஏவப்பட்ட சீடர்களின் சாட்சியத்திலும் புதுமைச் செயல்களிலும் நம்பிக்கை கொண்டவர்கள் சிறு குழுமங்களாகத் தோன்றியதே திரு அவைகளின் ஆரம்ப தோற்றம். தங்கள் நம்பிக்கையை அடித்தளமாக்கிக் கிறிஸ்துவின் செயல்களையும் போதனைகளையும் நினைவுபடுத்தி அவர் தம் நினைவாக விட்டுச் சென்ற திருவிருந்தையும் நிறைவேற்றினர். தாம் கண்டதையும் கேட்டதையும் அனுபவித்தவைகளையும் நம்பி மற்றவர்களும் அவற்றை நம்பி வாழ ஒருவரை ஒருவர் ஊக்குவித்தனர். தலைவர்கள் அவற்றை வார்த்தையினாலும் வாழ்வினாலும் கடிதங்களினா லும் பகிர்ந்து யூதேயாவிலும் அயல் நாடுகளிலும் கிறிஸ்தவ குழுமங்களை - திருஅவைகளை ஏற்படுத்தினர்.

அப்போஸ்தலரும் தலைவர்களும் நடந்தவற்றை மக்களுக்கு அவர்களின் மொழியிலே விளக்கி பகுத்தறிவுடன பகிர்ந்து கொடுத்தார்கள். பழைய ஏற்பாடு வரலாற்றை நினைவு படுத்தி இயேசுவே மனித மீட்பிற்காக எதிர்பார்க்கப்பட்ட இரட்சகர் - மெசியா என்று போதித்தனர்.

சீமோன் பேதுரு ஒரு யூதன் - மீன் பிடிப்பவர் - அரமேய மொழி மாத்திரம் தெரிந்தவர். இருந்தும், இயேசுவினால் சீடர்களின் பேச்சாளனாக செயற்பட்டார் என்றும் தமது விசுவாசத்தையும் எதிர்பார்ப்பையும் துணிவாக வெளிப்படுத்தினார் என்பதும் தெளிவாக இருக்கின்றது. அவர் ஒரு கணம் தமது மனித பெலவீனத்தில் இயேசுவை மறுதலித்தாலும் இயேசு அவரிடமே வருங்காலப் பொறுப்பையும் தலைமைத்துவத்தையும் ஒப்படைத்தார் என்பது தெளிவாக இருக்கின்றது.

மாறாக புனித பவுல் (சின்னப்பர்) ஓர் படித்த பரிசேயர் - மொழிகள் தெரிந்தவர் - உரோமையின் பிரசை. அவர் கிறிஸ்துவின் துணிவான சாட்சியும் போதகருமானதால் கைது செய்யப்பட்டு, உரோமை அதிகாரிகளினால் உரோமைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து அவர் எழுதிய கடிதங்கள் இவைகளை நிரூபிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித சின்னப்பர் - பர்னபாஸ் போன்றவர்களின் பயணங்களும் கடிதங்களும் எமக்கு எப்படி யூதேயாவின் அயல் நாடுகளுக்கு கிறிஸ்தவ குழுமங்கள் பரவின என்பதைக் காட்டுகின்றன.

ஆரம்ப காலச் சீடர்களும் திரு அவைத் தலைவர்களுமான யூதர்கள் இயேசு பேசிய அரமைக் மொழி தெரிந்தவர்கள். ஆனால் தமது நம்பிக்கையை மக்களுடன் பகிர்ந்துகொள்ள பயணங்களும் போதனைகளும் நடாத்தினர். அயல் நாடுகளுக்கு நற்செய்தியைப் பரப்புவதில் அந்நிய மொழிகளில் வார்த்தையும், சிந்தனையும், வளர்ச்சி அடைவது ஒன்றாக நடைபெற்றது.

### 3.2 பெந்தக்கோஸ்தும் அப்போஸ்தலரின் முதல் ஜெருசலேம் சங்கமும் - கிறிஸ்தவத்தைப் பிற இனத்தாருக்கும் மீட்பின் பாதையாகத் திறந்தன.

கிறிஸ்தவத்தின் யூத ஊற்றின் காரணத்தால் யூத இயேசுவைப் பின்பற்றி சீடர்களாக விரும்புபவர்கள் மீது யூதர்களின் விருத்தசேதனம் கட்டாயமான நிபந்தனையாகத் திணிக்கப்பட்டது.

ஆனால் இரு நிகழ்வுகள் கிறிஸ்தவத்தை முழு உலகத்திற்கும் உரிய மதமாக மாற்றியிருக்கின்றன.

1) பரிசுத்த ஆவியின் பொழிவிலே ஜெருசலேமுக்கு வந்திருந்த யூதரல்லாதவரும் ஆவியினால் ஏவப்பட்டவர்களின் பேச்சை தமது மொழியிலும் புரிந்து கொண்டனர்.

2) கி.பி. 49ஆம் ஆண்டில் புனித பவுல் அப்போஸ்தலர்களை முதன் முதல் சந்தித்து நடந்த சங்கத்தில் அப்போஸ்தலர்கள் புனித பவுலின் வேண்டுகோளுக்கு இணங்க யூதரல்லா தவர்கள்மேல விருத்தசேதனம் திணிப்பதில்லை என்று முடிவு எடுத்தனர்.

மூவொரு இறைவனின் நாமத்தில் திருமுழுக்குப் பெற்று கிறீஸ்துவின் சீடராகும் அனைவரும் அவரின் இரட்சணியத்தைப் பெறுவர் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

49ஆம் ஆண்டில் ஜெருசலேமில் நடந்த முதல் அப்போஸதலர் கூட்டமே திரு அவையின் முதற் சங்கமாக கணிக்கப்டுகின்றது. பிற மதத்தாரையும் யூத விருத்த சேதனம் இன்றித் திருமுழுக்கினால் சீடராக்குவதாகத் தீர்மானிக்கபட்டது. கிறிஸ்தவத்தை யூத உலகிற்கு அப்பால் பிறஇனத்தவர்க்கும் உரியதாக ஆக்கியது. (Christianity became a universal religion – for Jews and gentiles)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போஸ்தலா் யூத புறவின சீடர்களுக்கு எழுதிய கடிதங்களும் 4 நற்செய்தி ஏடுகளுடன் இணைந்து இக்கிறிஸ்தவத்தின் அடி அத்திவாரமாகத் திகழுகின்றன.

இதனால் பிற மதங்களின் பொருளையும் முக்கியத்து வத்தையும் குறைக்கவோ அல்லது கிறீஸ்தவத்தைப் பிறமதங்கள் அனைத்திற்கும் மேலானதாக கருதுவதாகவோ இல்லை. ஆனல் கிறிஸ்தவம் யூத இன எல்லைகளை கடந்து பிற இன மக்கள் மத்தியிலும், இயேசுவின் சீடர்க ளைக் கொண்டிருக்கவும், பிற மதங் கள் மத்தியிலும் இயேசு வின் ஒளியாகவும் உப்பாகவும் செயற்படும் தன்மையையும் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

## 3.3 உரோமையை அடைந்த கிறிஸ்தவம் முதலில் துன்பத்திற்கு உள்ளானது, பின்பு அரசின் அனுசரணை பெற்றது

ஜெருசலேமில் பெந்தக்கோஸ்து விழா நடைபெற்ற பொழுது உரோமையிலிருந்தும் வந்த சிலா் அங்கிருந்தனா் என்றும் அவா்கள் ஊடாகவே கிறிஸ்தவம் உரோமையை வந்தடைந்ததென்றும் நம்பப் படுகின்றது. சீமோன் பேதுரு உரோமைக்கு எப்போது எப்படி வந்தார் என்பது தெளிவில்லாவிட்டாலும் புனித பவுலடிகள் உரோமன் அதிகாரிகளினால் சிறைக்கைதியாக உரோமைக்கு கொண்டு வரப்பட் டார். கிறிஸ்தவா்கள் முதலில் சித்திரவதைக்கு உள்ளா னார்கள். முதல் நூற்றாணடின் நடுப்பகுதியிலேதான்

*(55-60) சீமோனும் பவுலடிகளாரும் வேதசாட்சிகளாக உரோமையில் உயிர் நீத்தனர். இன்னும் பல கிறீஸ்தவ குழுமங்கள் மறைவாக வாழ்ந்து வந்தன. (catecombs)*

ஆனால் 310ஆம் ஆண்டிலிருந்து உரோமை இராட்சியப் பேரரசன் கொன்ஸ்ரன்ரைன் உதவியுடன் இணைந்து கிறிஸ் தவமும் ஒரு பேரமைப்பாக பல சிக்கல்கள் மத்தியில் வளா்ந்தது. ஆனால் உரோமைக் கிறீஸ்தவம் 4ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் அரச மயமாக்கபட்டு உரோமை மன்னனால் வழி நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து உரோமை - கொன்ஸ்ரான்ரினோப்பிள் - அந்தியோக் - அலெக்ஸ்சான்றிய ஆயர்கள் மத்தியில் திருத்துவ விசுவாசம் பற்றி பல இழுபறிகள் நடந்தது.

அன்றைய உலகில் சிந்தனை முறையில் கீர்த்தி பெற்ற கிரேக்க மெய்யியல் அடிப்படையில் சீடா்கள் சிலா் தமது நம்பிக்கையைப் பகுத்தறிவின் ஆராயச்சிக்கு உட்படுத்தி மக்களுக்கு விளக்கத் தொடங்கினா். இதுதான் கிறிஸ்தவ இறையியலின் முதற் படியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅவைகள் உரோமைப் பீடத்தை அதிகார மையமாகக் கொள்ளத் தொடங்கிய பொழுது உரோமை இராட்சியத்தைச் சேர்ந்த நாடுகளிலே கிரேக்க மெய்யியல் ஊற்றெடுத்துக் கீர்த்தி பெற்றிருந் தது. இந்த மெய்யியலை அடித்தளமாகக் கொண்டு பல்கலைக் கழகங்களிலே பல சிந்தனை வளர்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. (Plato, Socrates, Aristotle) வாக்குவாதங்கள் - நிரூபித்தல்கள் இப்படியானவைகள் நடந்த பொழுது எங்களுடைய இறையியலும் அந்த அடிப்படைச் சிந்தனைக் கோட்பாடுகளைக் கொண்டு இறையிய லாக் கத்தைத் தொடங்கியது. இவ்வளர்ச்சியே கத்தோலிக்க இறையி லாக இற்றைவரை ஏற்று கொள்ளப்பட்டது. (scholastic theology)

## 3.4 ஐரோப்பாவில் கிறீஸ்தவம் பேரமைப்பாக வளர்ச்சி

3ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான கொன்சன்ரைன் (Constantine era) யுகத்திலே திருச்சபைக்கு கிடைத்த சுதந்திரத்துடன் திருச்சபை இத்தாலியிலும் மற்றும் ஐரோப் பிய நாடுகளிலும் பிரான்ஸ் இங்கிலாந்து ஜேர்மனி போன்ற நாடுகளிலேயும் வளர்ந்தது. அங்கேயுள்ள பல்கலைக்க ழகங்களிலேயும் இறையியல் ஒரு முக்கிய ஆய்வுகள் நிறைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

அந்த வளர்ச்சி உரோமையின் வழிநடத்தலிலே வளர்ந்து கொண்டு போகும் பொழுது ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்த திருஅவைகளில் இலத்தீன் மொழியில் வார்த்தையும் வழி பாடுகளும் இறையியலாக்கங்களும் வளர்ந்தன. இறை வார்த்தை பரவத் தொடங்கிய பொழுது அப்போஸ்த லர்கள் திருஅவைகளுக்கு எழுதிய கடிதங்கள் ஊடாக சிநதனை வளர்ச்சியும் இறையியலாக்கமும் முன்னேறியது.

இது மாத்திரமல்ல குழுமங்கள் தங்களுடைய வழிபாடுக ளையும் இறைவார்த்தையையும் இயேசு விட்டுச் சென்ற நினைவு விருந்தையும் திருப்பலி விருந்தாக உருவம் கொடுத்து ஒழுங்குபடுத்தி னர். ஆரம்ப நூற்றாண்டுகளில் தொடங்கப்பட்ட ஆசீர்வாதப்பர் சபை யைச் சேர்ந்த துறவிகள் இந்த முயற்சியில் மிக ஆர்வத்துடன் செயற்பட்டனர். இந்த முயற்சிகளின் பயனாகத்தான் நாங்கள் இன்று திருப்பலி விருந்துக்குப் பயன்படுத்தும் உரோமன் திருப்பலி விருந்தின் புத்தகம் (Roman missal) சங்கீதங்களடங்கிய மூன்று நேரச் செபங்கள் தோன்றின.

5ஆம் நூற்றாண்டிலேயே புனித அகுஸ்தீனார் மனம் திரும்பி அதன் பின் மிலான் ஆயராகத் தமது இறையியல் சிந்தனைக ளையும் வெளியிட்டு ஐரோப்பிய திருஅவைகளை ஊக்குவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.5 11ஆம் நூற்றாண்டில் உரோமையிலிருந்து பிரிந்த கீழைத்தேச திருஅவைகள்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இயங்கிய திருஅவைகள் உரோமையின் அதிகார மையத்துவத்தையும் இலத்தீன் மொழியையும் ஏற்று கொள்ள தயங்கின. கொன்ஸ்ரான்ரி நோபிள் - அலெக்ஸ்சான்றியா - அந்தியோகு போன்ற இடங்களில் இயங்கிய திருஅவைகள் உரோமைத் திருஅவையிலிருந்து பிரிந்து கீழைத்தேச பாரம்பரிய சபைகளாகத் தம்மை இனங்கண்டன. (Oriental churches) அத்துடன் அப்போஸ்தலரின் வரிசையில் தோன்றிய பிதாப் பிதாக்களை (patriarchs with apostolic succession) தலைவர்களாகக் கொண்டிருந்தனர். தமது மொழியில் இறைவார்த்தை - வழிபாடுகள் திருஅவை சட்டங்களையும் வாழ்க்கை முறைகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இருந்தும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தை தொடர்ந்து உரோமை பாப்பரசருக்கும் கீழத்தேச திருஅவைகளை வழி நடத்தும் பிதாப் பிதாக்களுக்குமிடையில் ஒற்றுமை முயற்சி கள் தொடருகின்றன.

### 3.6 14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மொழிகளிலே விவிலியம் மொழிபெயர்பபு - மக்கள் புரட்சிகள் எதிர்கொள்ள திரிடென் ரைன் சங்கம்

கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியுமே முன்நிலையில் இருந்தன. அத்தோடு இறைவார்த்தையும் கிறிஸதவ இறையி யலும் இலத்தீன் மொழியிலே இருந்தன. அம்மொழிகளை கற்றறிந்தவர்களே இவைகளில் ஈடுபட்டு இருந்தார்கள். இதன் காரணமாகச் சாதாரண மக்கள் கிறீஸ்தவ நற்செய்தியையும் இறையியலையும் படிக்க முடியவில்லை.

புனித அல்பேட் - தோமஸ் அக்குவைனாஸ் போன்றவர்கள் இம்மொழிகளிலே பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்தனர். இறைவார்த்தையையும் இறையியலையும் எபிரேய கிரேக்க இலத்தீன் மொழிகளிலே எழுதினார்கள். படித்தவர்கள் பாண்டித்தியம் பெற்றவர்கள்தான் அவற்றை அறிந்திருந்த னர். சாதாரண கிறீஸ்தவ மக்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. இதன் விளைவாக தலைவர்களினாலே மக்கள் மதிக்கப்படாமலும் கருத்துப் பரிமாற்றம் ஏதும் இல்லாமலும் நடத்தப்பட்டனர்.

பல்கலைக்கழகங்களிலே இறையியல் ஒரு பாடமாக கற்பிக்க பட்ட பொழுது உரோமை தலைமைத்துவத்திலே வழிநடத்தப்பட்டு வந்தது. திருச்சபையின் விசுவாசத்திற்கும் வழிகாட்டல்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணிக்கமானவர்களே இறையியலை கற்பித்தார்கள் - கற்றார்கள்.

ஆனால் 14ஆம் நூற்றாண்டின் பின்புதான் விவிலியம் இலத்தீன் மொழியில் இருந்து மற்றைய ஐரோப்பிய மொழிகளுக்கு மொழிபெயர்க்க விக்லிவ் (Wycliff) போன்றவர்களினால் முயற்சிகள் துணிவுடன் ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் தாய் மொழிகளில் விவிலியத்தை விளங்கி விழித்தெழுந்த பொழுது புரட்சி ஆரம்பித்தது. திருச்சபையின் வாழ்வைப் பற்றி விசேடமாக அது வழிநடத்தும் முறைகளைப் பற்றி அதன் கட்டளைகள் அமைப்பைப் பற்றிக் காரசாரமாக கலா சாலைகளுக்கு அப்பால் உள்ள பொது மக்களும் உரோமை அதிகார பீடத்தின் வாழ்க்கை முறைகளை விமர்சிக்கத் தொடங்கினார்கள். உரோமைத் திருஅவைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பி சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.

இவைகளுக்குப் பதில் கொடுத்து, தம்மை பெலப்படுத்தும் தேவை உரோமைத் திருஅவைக்கு எழுந்தது. இதற்கா கத்தான் திருஅவைகளின் பிரிவினைகளை கட்டுபடுத்திக் கத்தோலிக்க திரு அவையை பெலப்படுத்த ஒரு முக்கிய சங்கம் - திரிடென்ரைன் சங்கம் கூடியது.

(Council of Trent for Counter-Reformation efforts).

இச்சங்கத்தை தொடர்ந்து, 16, 17, 18ஆம் நுற்றாண்டுகளில் உரோமன் கத்தோலிக்க திருஅவை தன்னை ஒரு மிகப் பெலமான அமைப்பாக அதாவது திருஅவையின் வாழ்வை நெருக்கமாக கண்காணிக்கும் ஒழுங்குகள் சட்டங்களுடன் ஐரோப்பா முழுவதும் கட்டியது **(Counter-reformation churches)** இந்த முயற்சியில் வளர்ந்த குருக்கள் துறவிகள் தான் ஐரோப்பிய காலனித்துவ படைகளுடன் சென்று வெளிநாட்டில் மறைபரப்பும் பணியை மேற்கொண்டனர்.

இதே நூற்றாண்டுகளில் ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளான - இங்கிலாந்து, பிரன்ஸ், ஸ்பானிய, ஒல்லாந்து போர்த்துகேய நாடுகளிலிருந்து படைகள் மற்றைய கண்டங்களுக்குச் சென்றனர். அப்போது கிறிஸ்தவ மதபோதகர்களும் படையி னர் நாட்டை கைப்பற்றுவது போல தாங்களும் அந்நிய மக்களை கிறிஸ்தவத்திற்கு மனம் திருப்பும் நோக்குடன் இணைந்து கொண்டனர்.

**3.7 உரோமன் கத்தோலிக்க திருஅவையில் இறுக்கமாக கட்டப்பட்ட ஆர்வத்துடன் வந்த மறைபோதகர்கள் எவ்வித தமிழ் மக்களை எதிர்நோக்கினர்.**

பிரிவினைகளுக்கு எதிராக இறுக்கமாக உருவாக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய மறைபரப்பாளர்களே ஸ்பானிய போர்த்துக்கல் பிரான்சு காலனித்துவ படைகளுடன் புதிய நாடுகளுக்குச் சென்று திருஅவைகளை தென்அமெரிக்கா - ஆபிரிக்கா - ஆசிய நாடுகளிலும் பரப்பினர். தாங்கள் தங்கள் நாட்டில் அறிந்த அனுபவித்த அதாவது சீர்திருத்தங்களுக்கு எதிராக இறுக்கமாக கட்டமைக்கப்பட்ட திருஅவைகளை அப்படியே எங்கள் நாடுகளிலும் பரப்ப விரும்பினர். சுருங்கக் கூறினால் ஐரோப்பாவில் 16 நூற்றாண்டுகள் வளர்ந்த கிறீஸ்தவ திருஅவைகளை புதிய மண்ணிலே சூழலிலே மறுமாற்று நடுகை (transplantation) செய்ய விரும்பினர்.

இந்நோக்கங்களுடன் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் போர்த்துகேய கிறிஸ்தவ மறைபரப்பாளர் வந்திறங்கிய பொழுது -

தமிழர்களின் நிலை எவ்வாறாக இருந்தது?

தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியா முழுவதும் பரவி இருந்த இந்து சமயத்தையே அதன் சைவ சமய உருவத்தில் பின்பற்றி வாழ்ந்தனர். இந்து - சைவ மதம் கிறிஸ்தவம் - இஸ்லாம் - புத்த சமயங்களைப் போல் விசுவாச நம்பிக்கைக் கோட்பாட்டை ஓர் குறிப்பான ஊற்றிலிருந்து தோன்றி மதக்கோட்பாடுகள் தலைமைத்துவ ஒழுங்குகளுடன் வளர்ந்த மதம் அல்ல. இந்திய மக்கள் இந்து மதத்தின் பல்வேறு பழளைகளை பின்பற்றுகின்றனர். தமிழர்கள் பெரும்பான்மையாக சைவ மதத்தையே பின்பற்றுகின்றனர்.

இந்து சைவ வாழ்கைமுறை (ஒரு மார்க்கம் margha) - கிறிஸ்தவம் தோன்றுவதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவில் தோன்றிய மதச் சிந்தனை வழிபாடுகளை உள்ளடக்கிய ஒரு தனித்துவ வாழ்க்கை முறையாகும். படைப்புகள் அனைத்தையும் ஒன்றாக உள்ளடக்கிச் சிந்திக்கும் முறையிலே பரந்த நோக்குடன் இந்திய இயற்கை வளங்களையும் முன்னோர் ஞானிகளின் போதனைகளையும் பல பண்பாடு கலை தேச வழமைகளையும் உள்ளடக்கியது;

ஆகையால் இந்துக்கள் மற்ற இனத்தவரை தேசத்தவரை தமது மதத்திற்கு மாறும்படி எதிர்பார்ப்பதில்லை. பிற மதத்தவர்கள் விரும்பின் இந்து வாழ்க்கை முறையையும் அதில் பொதிந்திருக்கும் ஞானத்தையும் கற்றுப் பயனடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் ஆலயம் அல்லது கோவில் நீண்ட பரிணாம வளர்ச்சியைக் கொண்டது.

ஆரம்பத்தில் இயற்கை வளங்கள் அனைத்தும் தெய்வீக கொடைகளாகக் கணிக்கப்பட்டு விசேடமாக நீர் ஆறு போன்றவை உயிர் ஓட்டங்களாகவும் வாழ்வின் மறு பிறப்புகள் கலந்தோடும் தெய்வீகமாகவும் கணிக்கப்பட்டன. அதன் பின் இயற்கை, பண்பாடு, கலை, நாகரிகம், அனைத்தும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்து, மனிதனின் வாழ்விற்கும வளர்ச்சிக்கும், உயிரும் உற்சாகமும் கொடுக்கும் ஞானசக்தியாக இருந்தது.

இப்படியாக இறை பிரசன்னத்தை இயற்கையுடனும் இறைவனின் கொடைகளுடனும் சம்பத்தப்படுத்தியவர் ஈற்றில் இறைவன் பிரசன்னத்தை ஓர் இடத்தில் நிருபித்து ஆலயத்தை கட்டினர்.

தமிழர்கள் ***கோவிலைத் தழுவிய குடிகள், குடிகளைத் தழுவிய கோவில்*** என்ற நெறியில் வாழ்ந்தவர்கள். ***திருக்கோயில் இல்லாத ஊர் என்பது, ஊர் அல்ல; அது காடு*** என்று கோவிலறையையும், கோவிலையும், கோவிலில் நடக்கும் வழிபாடுகள் திருவிழாக்களையும் மையப்படுத்தி வாழ்ந்தவர்கள்.

இவ்வளர்ச்சிக்கு ஒத்ததாக இறை பிரசன்னத்தையும் இயற்கை வளங்களில் காடுகள் மலைகள் கடல்களில் கண்டு வணங்கியவர்கள், ஈற்றில் ஆலயங்களை ஊருக்குள்ளேயும், குலத்திற்குள்ளேயும் ஏன், இல்லத்திற்குள்ளேயும் கொண்டு வந்து குல விழாக்களை கொண்டாடினர். வசதியுள்ளவர்கள் வீட்டிலும் ஓர் கோவிலறையை வைத்திருந்தனர். இறைவன் பிரசன்னத்தை அதிகமாக கோவில்களிலும், குறைந்த அளவில் கோவில் அறைகளிலும் ஏற்று கொண்டனர். இதனால் உலகத்திலுள்ள கோவில்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை இந்தியாவிலும் அதிலும் இந்தியாவின் அரைவாசிக்கு மேற்பட்டவை தமிழ் நாட்டிலும்! கோவில்கள் கட்டுவதில் மிகப் பெரிய ஆர்வமுடையோர் தமிழர்!

பூசாரி - பக்தர்கள் உறவு - சாதி வேற்றுமைகளுக்கு இணங்க ஆலயங்களை கட்டினர். வழிபாடுகளில் பூசாரி புனித மூலஸ்தானத்திற்குள் பிவேசித்து சமஸ்கிருதத்தில் செபங்கள் ஓதுபவராகவும், பக்தர்களின் காணிக்கைகளை, வாசலிலிருந்து கொண்டு வந்து ஆசி பெறுபவராகவும் நியமிக்கபட்டார். பக்தர்கள் கோவில் வாசலில் நின்று, இறைவன் பக்கம் நேரில் முகங்கொடுக்க தகுதியற்றவர்களாக செபிக்கவும், தமது காணிக்கைகளை பூசாரியிடம் ஒப்புவித்தும் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.8 இப்படியாக வாழ்ந்த தமிழர் மறைபோதகரின் போதனைக்கு கொடுத்த பதில் என்ன?

16ஆம் நூற்றாண்டில் திரிதெந்தீன் சங்கத்தில் பெலப்படுத்தப் பட்ட திருஅவையின் விசுவாசம் மிகத் தெளிவாக கிறிஸ்தவமே ஒரே ஒரு உண்மையான மதம் என்றும் அதனூடாகத்தான் மனிதர் மீட்பு அடைய முடியும் என்றும் திடமாயிருந்தனர். மற்றைய மதங்கள் மனிதர்களுக்கு மீட்பு அளிக்க முடியாது என்ற நம்பிக்கையுடன் அதாவது திருஅவைக்கு அப்பால் மீட்பு இல்லை (extra ecclesia nulla salus - outside the church no salvation) என்று மறைபரப்பாளர்கள் கூறியதை கேட்டதும் தமிழருக்குள்ளே வியப்பு. மதம் என்று ஒரு அமைப்பை பிரித்து பார்க்காது இனம் மொழி கலை கலாச்சாரம் கோவில் திரு விழாக்கள் சகலத்தையும் தமது வாழ்க்கை முறையாக வாழந்தவர்க்கு அதிசயம்.

இதற்கு தமிழர்கள் கொடுத்த பதில் என்ன?

அதிகமான ஆசிய மக்கள் போன்று தமிழர்களும் மதப்பற்று அடங்கிய வாழ்க்கை முறையையே கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர். ஐரோப்பியர் இப்பேர்ப்பட்ட தமிழர்களை பார்த்து உங்கட்கு இரட்சணியம் வேண்டுமாயின் எங்கள் மதத்தில் - புதிய கிறிஸ்தவ மதத்தில் - சேர வேண்டும் என்றனர். அத்துடன் மறைபரப்பாளர்கள் இப்புதிய கிறிஸ்தவர்களுக்கென்று தாம் ஐரோப்பாவில் அனுபவித்தது போல் ஓர் கூடுமிடத்தையும் கூட்டினர். தமிழர்கள் இந்த இடத்தை தமிழர் அனுபவத்தின் படி ஆலயம் என்று அழைத்தனர்.

இனம் மதம் கலை கலாச்சாரம் என்று பிரிக்காது எல்லாவற்றையும் இந்து - சைவ வாழ்க்கை முறையாக (மார்க்கம்) கடைப் பிடித்து வாழ்ந்தவர்கள் இப்போ மனித இரட்சணியத்திற் கென்று ஒரு புதிய மதம் என்று கேட்டவுடன் அதிலே சேர்ந்துகொள்ள சிலர் விரும்பினர். ஆனால் இப்படி புதிய மதத்தில் சேர்ந்து கிறிஸ்தவ ஆலயத்திற்கு செல்லும் போது பழைய வாழ்க்கை முறைகளை முற்றாக விட்டு விடுவதா? அல்லது என்னத்தை நிறுத்த வேண்டும் என்னத்தை தொடரலாம் என்ற ஐயங்கள் பெரிதாக இருக்கவில்லை.

மறைப்போதகாகள் விதித்த கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர்கள் விசுவசிக்கும்படி கூறியதை ஏற்று புதிய கிறிஸ்தவ நாமத்தில் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ ஆலயங்கட்கு சென்று ஆராதனைகளை பின்பற்றினர். மிகுதி குடும்பத்திலும் சமூகத்திலும் தமிழர்களாகப் பழைய தமிழ் வாழ்க்கை முறையை பின் பற்றினர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.9 தமிழர்களின் மத மாற்றத்தில் தெளிவு பெறாத சிக்கல்கள் முரண்பாடுகள் நீண்ட காலமாக இருந்தன.

தமிழர்கள் பாரம்பரியமாகப் பல்லாயிரம் ஆண்டுகள் கடைப் பிடித்து வந்த வாழ்க்கை முறையும் நல்லொழுக்க பண்புகளும் ஏராளமாக இருந்தன. இறைவன் இனாமாக நல்ல மொழி கலை கலாச்சாரம் அறிவுத்திறன் கடும் உழைப்பு - இப்படியான பண்புகளை கொடுத்திருந்தும், தமிழர் சுய விமர்சனம் செய்ய இயலாதவர்களாக பல குறைகளையும் அடிமைத் தனங்களையும் கொண்டிருக்கின்றன. இன்று நாங்கள் தமிழ் கிறிஸ்தவர்களாக எமது இனத்தின் வரலாற்றை பின்நோக்கிப் பார்க்கும் பொழுது இக்குறைபாடுகளையிட்டு நாம் வெட்கப்படுவோம்.

உதாரணமாக சமூக வாழ்வில் பல முக்கியமான குறை பாடுகள் உண்டு. தமிழர்கள் எப்படி மனிதர்களைக் கணித்தார்கள் - மதித்தார்கள்? எல்லா மனிதரும் ஒரு வகையானவர்களல்ல ஒரே விதமாக கணிக்கபட்டு மதிக்கப்பட வேண்டியவர்களல்ல. பிறப்பிலி ருந்து சாதி ஊர் என்றும் கல்வி தொழில் வருமானம் உடையோர் இல்லாதோர் என்றும் கணிக்கப்படுவர். இது இறைவனால் வகுக்கப்பட்டதென்று பிராமணப் பூசாரிகள் கற்பித்ததை, மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

இக்குறைபாடுகள் கிறிஸ்துவினால் கற்பிக்கப்பட்டவைக ளுக்கும் அவரினால் கொண்டுவரப்பட்ட மனித விடுதலைக்கும் முரணானது ஆகவும் இருந்தன. .

கிறிஸ்தவத்தின் அடிப்படையான இந்த நம்பிக்கையை அதாவது இறைவன் எல்லோரின் தந்தையென்றும் மனிதர்கள் அனைவரும் அவரின் பிள்ளைகளெனவும் ஒருவருக்கொருவர் சமத்துவமான சகோதரர் என்பதையும் தமிழில் விளக்கிக் கூற ஐரோப்பிய மறைபரப்பாளருக்கு முடியாதிருந்தது.

தமிழ் இனத்தின் தன்மையில் அப்பிரிவினைகள் ஆழமாக வேரூண்றி இருக்கின்றன என்றும் அவற்றை முற்றாக மாற்றுவதும் சிக்கலானது என்றும் உணர்ந்தனர்.

இருந்தும் ஆதி மறைபரப்பாளர்கள் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட தமிழர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து கிறிஸ்தவ பெயர்களைச் சூட்டி இலத்தீன் மொழியிலே வழிபாடுகளை நடத்தி ஐரோப்பாவில் இருந்த திருச்சபையைப் போல இங்கேயும் பல நூற்றாண்டுகளாக நடத்தினார்கள்.

இந்த வேற்றுமைக்கு அமைய திருமுழுக்கு இடாப்பில் சாதியும் பதியப்பட்டு வந்தது. ஒவ்வொரு சாதியினருக்கும் சாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமைகளின் அடிப்படையில் ஒரு கோவிலும் அமைப்பதற்கு மறைபரப்பாளர் ஒத்துழைத்தனர்.

இன்னும் சாஸ்திரம் பார்ப்பது - நல்ல நாள் பார்ப்பது - சுபநேரம் தீர்மானிப்பது - இப்படியான வாழ்க்கை வழிமுறை கள் தொடர்ந்தன. தேசவழமை அல்லது பாரம்பரியம் என்று விமர் சிக்காது கேள்வி இன்றி கடைப் பிடித்தார்கள் தமிழ் கிறிஸ்தவர்கள். படிப்படியாகத் தமிழர்கள் குருக்கள் துறவிகளாக இணைந்தனர். ஆனால் அவர்களும் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் நிலவிய குறைபாடுகளை ஏற்று வாழ்ந்தனர்!

ஆகையால் தமிழர்களின் மத மாற்றம் பெரும்பாலும் கோவில் வழிபாடுகள், செபங்கள், அடங்கிய மாற்றமே ஒளிய. சமூக வாழ்வில் இந்துசைவ சமய நாட்டங்களையே கடைப்பிடித்தனர். இவைகளை விளக்க, தணிக்க, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆலய திரு விழாக்களின் பொழுது, சைவ மதத்தின் வாழ்க்கை முறைகளை விமர்சித்து விளக்கி, தமிழ் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை பெலப் படுத்தவும் வாழ்க்கை முறைகளை மாற்றவும், தற்கப்பிரசங்கங்களை ஒழுங்கு செய்து நடாத்தினார். இப் பழக்கம் நீடிக்கவில்லை.

சுருங்கக்கூறின் ஐரோப்பிய திருச்சபைகள் தமிழ் மண்ணிலே, வேரற்ற தன்மையுடன், ஆழமாக இல்லாது, மேலோட்டமாக கிறிஸ்தவ நாமங்களையும், கீதங்களையும், செபங்களையும், கொண்ட அந்நிய அல்லது ஐரோப்பிய மதமாக இந்து - சைவ மக்களால் பார்க்கப்பட்டது

> தமிழர்களின் பிரச்சினைகளை
> மற்றவர்கள் தீர்க்க வேண்டும் அல்லது
> தீர்க்க உதவ வேண்டுமென்ற
> விருப்பத்தை நாம் மீள பரிசீலனை
> செய்ய வேண்டும். நாம் எம்மை
> துணிவாக சுய விமர்சனம் செய்து எமது
> பிழைகளை தவறுகளை ஏற்று
> திருந்தாவிடில், எம்மை ஒரு சக்தியும்
> மீட்க முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 4*

# பழைய வாழ்க்கை முறையையும் புதிய ஆலய ஆராதனைகளையும் சேர்த்து தமிழ்க் கிறிஸ்தவர்களின் சமாளிக்கும் கிறிஸ்தவம்

## 4.1 கிறிஸ்தவத்தை முழுமையாக வாழ முடியாத வேர்களை கொண்ட தமிழர்

இந்து - சைவ வாழ்க்கை முறையிலிருந்து பிரிந்து, தமிழ் கிறிஸ்தவர்கள் எவ்வளவிற்கு கிறிஸ்தவ விசுவாசத்தை, வாழ்க்கை முறை முழுவதிலும் கடைப்பிடிக்க முடியுமென்பது எப்பொழுதும் கேள்வியாகவே இருக்கின்றது.

தமிழரின் இந்து - சைவ வாழ்க்கை முறை, தெய்வீக மத விழுமியங்களையும் உள்ளடக்கிய ஓர் வாழ்க்கை முறை என்பதை அப்போதைய மிசனரிகள் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் எல்லா மதங்களும் கிறீஸ்தவத்தைப்போல, விசுவாச கொள்கையையும் அமைப்பு கட்டுப்பாட்டையும், கொண்ட ஒரு மதமாக கருதி, சைவ வாழ்க்கை முறைகளை விட்டு விலகும்படி வேண்டினர். கோவிலையும் பூசாரியையும் விட்டு கிறிஸ்தவ கோவிலையும் மறைபோதக குருவையும் பின்பற்றினால் போதும் என்றாற்போல் தோன்றியது. அது பிரச்சினையாக தோன்றவில்லை. ஆகையினால் தமிழர்கள் மதம் மாறினர் என்பதன் அர்த்தம் என்ன? அவர்கள் சைவக் கோவிலையும், பூசாரியையும், திருவிழாக்களையும் விட்டு விட்டு, கிறீஸ்தவ ஆலயங்களையும் வழிபாட்டு முறைகளையும் பின்பற்றிக் கொண்டனர் என்பதே. இந்த மாற்றத்தின் வழியாகவே மீட்பு அடையலாமென நம்பினர்.

அத்துடன் மதம் மாறிக் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களுக்கு, கல்வி காருண்ய உதவிகளும் கவர்ச்சியாகக் காத்திருந்தன.

மறைபரப்பாளர் கூறியது, ஓர் தந்திர உபாயமல்ல, அது அன்றைய கிறிஸ்தவத்தின் சந்தேகமற்ற நிலைப்பாடாகவே இருந்தது. அதாவது கிறீஸ்தவத்தின ஊடாக மாத்திரமே மீட்பு (salvation only through the church ) என்ற மத கோட்பாடு.

அந்நிய மொழி பற்றிய பிரச்சினை காரணமாக, மறை பரப்பாளர் கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளைத்தன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு விளக்கிக் கூற முடியவில்லை.

சில தமிழ்ப் பொதுநிலையினரின் உதவியுடன் திரித்துவ சிலுவை அடையாளங்களையும் சிறு செபங்களையும் கற்பித்தனர். திரிதெந்தீன் சங்கத்தின் படிப்பினைகளை கொண்ட சிறிய குறிப்பிடம் எனும் கையேட்டிலிருந்து, சிலவற்றைக் மனப்பாடமாக்க கற்பித்தனர். அத்தோடு மோயீசன் வழியாக இறைவன் கொடுத்த 10 கற்பனை களையும், திரு அவையின் 6 கற்பனைகளையும், வழிபாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் கற்பித்தனர். சுருங்கக் கூறினால், தமிழ்த் திருஅவையை உரோமைத் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் கிளை அமைப்பாகவும், கிறிஸ்தவர்களை அவ் அமைப்பின் அங்கத்தினராகவும் கருதி, படிப்பினைகளுக்கு அமைந்து நடப்பதே மீட்பின் வழி என கற்பித்தனர்.

4.2 ஆலயம் பூசாரி சடங்குகளை மையப்படுத்தி வாழ்ந்த தமிழர் மதம் மாறிய பின்பும் அதே கண்ணோட்டத்தில் கிறிஸ்தவ ஆலய வழிபாடுகளையும் நோக்கினர்.

முன்பு ஆலய வாசலில் நின்று செபித்தவர்கள், தங்கள் காணிக்கைகளை வாசலில் நின்று பூசாரியிடம் ஒப்படைத்தவர், சாதி வேற்றுமைகளை மதித்து நடைமுறை படுத்தியவர்கள், மதமாற்றத்தின் பின், கிறிஸ்தவ ஆலயங்குள்ளே அழைக்கப்பட்டு, மறைபரப்பாளரினாலும் தமிழ் உபதேசிமார்களினாலும், புதிய மதத்தை பற்றிய விளக்கங்களை பெற்றனர்.

செபங்கள் பாட்டுகள் பலிப்பூசைகள் எல்லாம் இலத்தீன் மொழியிலே இருந்தன. இறைவார்த்தை அடங்கிய விவிலியம் தன்னும் இலத்தீன் மொழியிலேதான் இருந்தது. மறைபரப்பாளரினாலே மாத்திரம் வாசிக்கப்பட்டது. சிறுசிறு செபங்கள், பரலோக மந்திரம் அல்லது செபமாலை சொல்லுதல் - இவைகளை மாத்திரம் தமிழிலே செபிக்க விசுவாசிகள் கற்றுக்கொண்டனர்.

இந்து - சைவ பக்தர்கள் மனித வாழ்விற்கு உயிர்ச் சக்தி கொடுக்கும் உணவு வகைகளை காணிக்கையாகக் கோவிலுக்கு எடுத்துச் சென்று பூசாரியாரிடம் ஆலய வாசலில் கொடுப்பர். அவைகளைப் பெற்று, பரிசுத்த மூலஸ்தான பீடத்தில் ஒப்புக் கொடுத்து விட்டு, வெளியில் காத்து நிற்கும் பக்தர்களிடம் திருப்பிக் கொண்டு வந்து கொடுப்பார். அதை பிரசாதமாக ஏற்று, தம்மைச் சேர்ந்த ஏனையோருடன் பகிர்ந்து கொள்வர்.

இந்தப் பின்னணியில்த்தான் தமிழ்க் கிறிஸ்தவர்களும், தமது ஆலயங்கள் கோவில்களையும், அங்கே நடக்கும் திருப்பலியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினர். சைவக் கோவிலிலே பூசாரியார் புனிதமான மூலஸ்தானம் சென்று சமஸ்கிருத மொழியில் செபித்து, காணிக்கைகளை ஒப்புக்கொடுப்பது போல், கிறிஸ்தவ ஆலயத்தினுள்ளும் மறை போதகர் தலையான பீடத்தில் இலத்தீன் மொழியில் திருப்பலியை கொண்டாடுவர். விசுவாசிகள் பார்வையாளராக மாத்திரம் இருந்து, செபமாலை ஓதுவர். காத்திருந்து நற்கருணையைப் பெற்றுக் கொள்ளும் நேரம் வந்ததும், பீடத்தின் முன் செல்வார்கள்.

இப்படியான இறைவணக்கம் செய்வதில் தமிழ் கிறிஸதவர் களுக்கு 300 வருடங்களாக பிரச்சினை இருக்கவில்லை. எதிர்ப்பும் காட்டவில்லை.

ஆனால் 1962-65 நடந்த 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் திருஅவையை பற்றி புதிய விளக்கமும், ஆலயங்களில் கிறிஸ் தவர்கள் கூடி தமிழில் நடாத்தும் வழிபாடுகள், சடங்கு களை பற்றி முன்னேற்றமான விளக்க உரைகளை பெற்றிருக்கின்ற னர். ஆகையினால் வத்திக்கான் சங்கத்தின் பின், கிறிஸ்தவர் கள் தாங்கள், தனியான பக்தர்களல்ல, கிறிஸ்துவின் சிடர் குழுக்கள் என்றும், தாங்கள் கூடுமிடத்தை இந்து - சைவ சகோ தரர் போல் ஆலயம் கோவில் என்று அழைப்பதை மீள்பரிசீலனை செய்திருக்க வேண்டும் - கோவிலை சீடரின் கூடகம் என மாற்றியிருக்கலாம்.

ஏனெனில் ஒரே வார்த்தையினாலே, அதாவது ஆலயம் அல்லது கோவில் என்று அழைத்தாலும், கிறிஸ்தவர்கள் கருதும் உட்பொருள், மிக வேறுபட்டது. இந்த வேறுபாட்டை உணராததினால் பல பிரச்சினைகள் இன்றும் தொடருகின்றன.

சைவ மதக் கோவில்கள் தனி மனிதர்கள், அல்லது குடும் பத்தினரால் கட்டப்பட்டு, அவர்களுக்கே சொந்தமாயின. அவர்க ளினால் பராமரிக்கப்பட்டு நடாத்தப்படும் கோவில்களில் அழைக் கப்பட்ட பிராமணக் குருக்கள் சமஸ்கிருத மொழியில் வழிபாடுகளை நடத்தினர். இந்துக்கள் சமூகமாகத் திரு விழாக்களை ஒழுங்குபடுத்தி ஆடம்பரமாகக் கொண்டாடுவர். பக்தர்களை வழிநடத்துவதில் பூசாரிமாருக்கு அதிகாரம் ஏதும் இருந்ததில்லை. பக்தர்களும் புனித மூலஸதான்திற்குள் பிரவேசிக்காது ஆலய வாசலில் நிற்க, பூசாரியார் மாத்திரம் உட்பிரவேசித்து பலி ஒப்புகொடுப்பார்.

ஆனால் ஆலய சொந்தக்காரர் பராமரிக்கிறவர்களாக பூசாரியிலும் பார்க்க கூடின பொறுப்புள்ளவராக நடந்து கொள்வர்.

இந்த உணர்வும் போக்கும் தமிழ் கிறிஸ்தவர்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து இருக்கின்றது. அத்துடன் மதபோதகர்களின் காலத்தில் சாதிக்கொரு கோவில் என்ற பிரிவினைகளும் இருந்தன. இதன் காரணமாக, சில தமிழ் கிறிஸதவர்கள் இன்றும் குடும்பம், சாதி என்ற அடிப்படையில் மற்றைய கிறிஸ்தவர்களுக்குரிய உரிமைகளை எதிர்க்கின்றனர்.

## 4.3 இந்து ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர்களின் ஆலயங்களுக்கும் வேற்றுமையான பண்புகள்

இப்படி இருக்கிறதென்பதை, நேர காலத்துடன் புரிந்து கொள்ளாதது ஆரம்ப கிறிஸ்தவர்களின் தவறு. ஐரோப்பிய மத போதகர்கள் இந்து - சைவ ஆலயங்களின் நீண்ட சரித்திரத்தையும் பொருளையும் தெரிந்திருக்கவில்லை. ஆகையால் ஆரம்ப தமிழ் கிறிஸ்தவர்கள், தாங்கள் ஆராதனை வழிபாடுகள் நடத்துமிடத்தை, இந்து - சைவர்கள் போல் கிறஸ்தவ ஆலயம் அல்லது கோவில் என்று அழைத்தனர்.

கிறிஸ்தவர்களின் முன்னோடியான இஸ்ரவேல் மக்களின் யூத மதத்தின் ஜெருசலேம் ஆலயம், இறைவனின் இருப்பிடமாக கணிக்கப்பட்டது. இது இந்து - சைவ மக்கள் தமது ஆலயங்களை பற்றி வைத்திருக்கும் கருத்தை ஒத்தது.

ஆனால் கிறிஸ்தவ திரு அவைகள், யூத இயேசுவினால் ஆரம்பமாயிருந்தும், தமது ஜெருசலேம் ஆலயத்தையும் இஸ்ரவேலர் அதற்கு கொடுத்த தனிப்பெரும் முக்கியத்துவத்தையும் உணர்ந் திருந்தும், யூத கிறிஸ்தவர் ஆலயத்தை பற்றி யூதர் வைத்திருந்த கருத்தை தொடர்ந்து வைத்திருக்கவில்லை.

இயேசுவின் விண்ணேற்றத்தின் பின் நடந்த ஆவியாரின் பொழிவை தொடர்ந்து, சீடர்கள் சிறு குழுமங்களாக வீடுகளில் கூடி இயேசுவின் போதனைகளை நினைவு கொள்வதிலும், அவர் தமது பாடுகள் - மரணம் நினைவாக ஏற்படுத்திய விருந்தையும் நினைவு கூர்ந்தனர். தமக்கென்று ஜெருசலேம் ஆலயம் போன்று, புதிய ஆலயத்தை கட்டவுமில்லை நிர்ணயிக்கவுமில்லை, தேவையும் இருக்கவில்லை.

கிறிஸ்தவர்கள் கூடுமிடத்து பின்னணியும் பொருளும் வேறு பட்டது. கிறிஸ்தவம் இஸ்ரவேல் - யூத மக்களின் யூத மதத்திலிருந்து தோன்றியது. இவர்களும் இறைவனின் பிரசன்னத்தை ஆரம்பத்தில் படைப்புக்களின் வியப்பில் அனுபவித்தனர். இருந்தும் தங்களின் விடுதலை பயணத்தில் இறைவன் தம்மோடு இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தனர். ஜெருசலேம் தேவாலயத்தை இறைவனின் இருப்பிடமாக சித்தரித்து, இறைவனுக்கு நன்றி - வணக்கம் செலுத்தும் ஆலயமாக்கிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூத மனிதனாக பிறந்து வளர்ந்த இறைமகன் இயேசுவின் போதனையும் சாதனையும் ஓர் புரட்சிகரமான மதத்தையும் ஆலயங்களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு வந்தது. கிறிஸ்தவர்கள் இறைவனின் பிரசன்னத்தை ஓர் கட்டிடத்திற்குள் அடக்கியவர்களல்ல. இஸ்ரவேலரைப் போல் ஜெருசலேம் ஆரயத்தில் மையப்படுத்தியவர்களல்ல.

கிறிஸ்துவின் சீடர்கள் தாங்கள் கூடுமிடத்தையே வசதிக்கேற்றவாறு தீர்மானித்தனர். அங்கே இறை வார்த்தையை கேட்டு உள்வாங்கவும், கிறிஸ்து மனித மீட்பிற்காக ஒப்பு கொடுத்த பலிவிருந்தை நினைவு கூர்ந்து பங்கேற்கவும், ஒரு சகோதர குழுமமாக குருவுடன் கூடுவர், கொண்டாடுவர். இவ் விடங்கள் கிறிஸ்தவர்களின் அழைப்பில் ஏற்று கொள்ளப்பட்டது.

முதன் முறையாக புனித சின்னப்பர் பர்ணபாஸ் இவர்கள் நடாத்திய குழுவினரே - கிறிஸ்தவர்கள் - என்ற நாமத்தை பெற்றனர். அவர்கள் கூடுமிடம் நிரந்தர தன்மை பெற்றது. இதன் காரணமாக, கூடுகிறவர்கள் சீடர்கள், அல்லது கிறிஸ்தவர்கள் என்றும், அவர்கள் கூடுமிடம் - குழுமத்தின் பெயரையே எடுத்தது. உதாரணமாக - அந்தியோக்க திரு அவை கூடகம் என்று அழைக்கப்படுகின்றது.

இதற்கிணங்க, திரு அவைகள் கூடுமிடத்தையும், முக்கிய ஐரோப்பிய மொழிகளில் திருஅவை என்றே அழைத்தனர். உதாரணமாக - The Church, l'Eglise, la Chiesa, die Kirche... ஆனால் தமிழ் கிறிஸ்தவர்கள் தாங்கள் கூடுமிடத்தை, திருஅவை கூடகம் என்று அழைக்காது, இந்து - சைவ சகோதரர் போல் கோவில் அல்லது ஆலயம் என்றே அழைத்தனர்.

கிறிஸ்தவ அவைகள் அமைப்புகளாக வளர்ச்சி அடைந் பின், பல அவைகளுக்கு பொறுப்பாக ஒரு பிரதம குருவே ஆயர் என்ற பெயரில், தனது மறைமாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் கூடுமிடம் எல்லாவற்றிற்கும் தலைவரானார். பங்கு தந்தை, பூசாரியை போல் அல்லாது, அவ்விடத்தில் ஆயரின் பிரதிநிதியாக அங்கே வாழும் கிறிஸ்தவர் குழுமத்தின் வழிகாட்டியாகவும், ஆலய வழிபாடுகளின் தலைவராகவும் பணிபுரிவார்.

கிறிஸ்தவ ஆலயம் அல்லது கோவிலைப் பற்றி, இந்து - சைவ கண்ணோட்டம் நிலவுவதால், சாதிப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை, வழிபாட்டில் பங்கு பற்றி வாசகங்கள் விசுவாசி மன்றாட்டுகள் சொல்வதற்கான உரிமை மறுக்கப் படுவது... இப்படியான பிரச்சினைகள் எழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையினால் நாங்கள் கூடுமிடங்களை புதிய பெயர் கொண்டு மாற்றாது, புரிந்து கொள்ளுதல் ஆவது, கிறிஸ்தவ கோவில் ஆலயங்களையும், ஆயர், பங்குக் குரு, கிறிஸ்தவர் களின் உரிமைகளை சரியாக புரிந்து நடப்பதே சிறந்தது.

4.4 தமிழ்க் கிறிஸ்தவர்கள் பழைய முறைகளை மாற்றாது சமாளிக்கும் பண்பையே விரும்புகின்றனர்.

தமிழர் ஆதியிலிருந்து வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை வாழ்க்கைக்கு தேவையான சகலத்தையும் மார்கா (margha) இந்து - சைவத்தில் கொண்டிருந்தது. இதிலிருந்து மதம் என்று ஒரு பகுதியை தமிழர் பிரிக்கவில்லை. ஆனால் கிறிஸதவத்தின் தன்மை யும் வருகையும், தமிழர்கள் தமிழராக இருந்து கொண்டு, இந்நோர் மதத்தை பின்பற்றலாம் என்ற நிலைமையை தோற்றுவித்தது.

தமிழ் மக்களின் பரந்த மதத் தன்மை (tamil religiosity) காரணமாக, இனப்பற்று மொழிப்பற்று கலாச்சாரப் பற்று, அத்துடன் புதிய மதத் தேவையையும், சமாளிக்கும் தன்மை ஆகும்! (ability to compromise old ways with new demands).

தமிழ் இந்துக்கள், தமிழ் இஸ்லாமிய சகோதரர் போல் அல்லாது, ஒரே கணவன் ஒரே மனைவி உறவுகளைக் கொண்டவர்களாக இருந்தனர். ஆகையினால் தமிழ் கிறிஸ்தவர்களும் குடும்ப உறவிலும், நாளாந்த குடும்பச் சமூக வாழ்விலும், தமிழ் ஒழுக்க முறைகளைத் தொடர்ந்தனர்.

தமிழ்மொழி இலக்கியம், சங்கீதம் பரத நாட்டியம் போன்ற நல்ல அம்சங்களுடன், பல மூடநம்பிக்கைகளும் கலந்திருந்தாலும், பழக்க வழக்கங்களுக்குத் தமிழ்க் கிறிஸ்தவர்கள் குடும்ப சமூக நிழ்வுகளில் முன்போல முக்கியத்துவம் கொடுத்தனர்.

தமிழர், இந்து - சைவர்களாக சமூக வாழ்வில், மனிதரை சமத்துவ உரிமையுடைய சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளாதது போல, மதம் மாறிய தமிழ்க் கிறிஸ்தவர்களும் சாதி வேறுபாடுகளை, நுணுக்கமாக மிக ஆர்வத்துடனும், ஆவேசத்துடனும், குடும்பத்திலும் சமூகத்திலும் கடைப்பிடித்தனர்.

அத்துடன் உயர்ந்த சாதி என்று தம்மை இனங் காட்டிக் கொண்ட தமிழ்க் கிறிஸ்தவாகள் கோவிலுக்குள் ஏனைய சாதியைச் சேர்ந்த கிறீஸ்தவரை ஏற்றுக் கொள்ளாததால் சாதிக்கொரு ஆலயம் என்று வெவ்வேறு ஆலயங்களைக் கட்ட மறைபரப்பாளர் அனுமதித்தனர்

ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு கோயில் என மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு சாதியாகக் கணிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். சமத்துவ மாக சகோதரத்துவமாகத் திருச்சபை இருக்கவில்லை. தன்னகத்தே வேறுபாடுகளையும், மூடநம்பிக்கைளையும், சகித்துக்கொண்டு, அதேநேரத்திலே, வறியோர்-பணக்காரர், படித்தவர்-படிக்காதவர் என்ற அந்தப் பிரிவினைகளையும், கடைப்பிடித்துக் கொண்டே வந்தார்கள்.

திருமுழுக்கு ஏட்டில் பதியும் பொழுதும் சாதியின் பெயரும் அங்கே குறிப்பிடப்பட்டது.

**இறைவன் எமது பொதுத் தந்தையென்றும், மனிதர்கள் எல்லோரும் அவரின் பிள்ளைகள், சமத்துவ உரிமையுடைய சகோதரர்கள் என்பதையும் இவர்களுக்குத் தெளிவாக விளக்கும் சக்தி மறைபரப்பாளரை தொடர்ந்து வந்த தமிழ்க் குருக்கள் துறவிகளுக்கும் போதியளவு இருக்கவில்லை.**

ஆகையால் தொகையில் மத அமைப்பாக திருஅவைகள் வளர்ந்தாலும், குறைகளை அவதானிக்கும் பொழுது, சீர்திருத்தம் மிக முக்கிய தேவையாயிருந்தது என்பதைச் தலைவர்கள் சிலர் உணர்ந்திருந்தனர். ஆனால் அதை எப்படிச் செய்வது என்று தெரியாது ஏங்கினர். புதிய வழிகளை ஆராய அல்லது உரோமைப் பீடத்திடம் எடுத்து கூற, தமிழ் ஆயர்களுக்குத் துணிவும் சந்தர்ப்பமும் இருக்கவில்லை. ஆயர்கள் உரோமையினால் தெரிவு செய்யப்படும் பொழுது, சாதியில் குறைந்தவர்களென்று கணிக்கப்பட்டோர் மக்களினால் விரும்பபடவில்லை. அதனால் தமிழரின் பழக்க வழக்கங் களைச் சமாளித்து நடப்பதே, தமிழ்க் கிறீஸ்தவத்தின் நடைமுறை யாக நீண்ட காலம் இருந்தது.

இவ்வாறாக தமிழ்க் கிறீஸ்தவர், தம் வாழ்வை ஒரு பக்கத்தில் கிறீஸ்தவ வழிபாடுகளில் பங்கெடுப்பதையும், குடும்ப சமூக வாழ்வைத் தமிழரின் பழைய முறைகளில் வாழ்வதையும், நாம் இன்றைய எமது கணிப்பில் **சமாளிக்கும் கிறீஸ்தவமென்று** அழைப்பதே பொருத்தமாகும்.

அன்றைய கிறீஸ்தவர்களின் விசுவாசத்தைப் பற்றியோ அவர்களின் நேர்மை புனித தன்மையைப் பற்றியோ, இன்று கேள்வி எழுப்புவது சரியல்ல. அன்றைய தமிழ் கிறீஸ்தவர்களின் விசு வாசத்தையும், அவர்களுடைய மீட்பைப் பற்றியும், சந்தேகப்படுவ தாகக் கருதக்கூடாது. அத்தகைய கிறிஸ்தவம் இன்றைய பார்வையில் குறைவான கிறீஸ்தவமாக ஏற்றுக்கொள்ள முடியாதென்பதே எமது கருத்து. நாங்கள் இன்றைய கிறீஸ்தவ அறிவிலே, அன்றைய உலகில் இருந்தது **சமாளிக்கும் கிறீஸ்தவம்** என இன்று கணிக் கின்றோம். ஆகையினால்த்தான் குறைகளை உணர்ந்தவர்களாக சீரான திருத்தம் தேடுகிறோம், முயற்சிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.5 2ஆம் வத்திக்கான் சங்கம் தமிழ்த் திருஅவைகளுக்கும் தலைவர்களுக்கும் புது வழிகளை திறந்துள்ளது

தமிழ்க் கிறீஸ்தவம் ஆரம்பமாகி 400 வருடங்களின் பின் 2ஆம் வத்திக்கான் சங்கம் 1962 - 1965 நடந்தது. இதன் வழியாக எமது திருச்சபைக்குப் புத்துயிர் பெறும் சந்தர்ப்பம் பிறந்தது. முதல் 300 ஆண்டுகளிலும் கிடையாத சந்தர்ப்பமும் ஆவியின் ஊக்குவிப்பும் இறைவன் கிருபையால், எமக்கு எமது காலத்தில் கிடைத்துள்ளன. இதுதான் தமிழக் கிறிஸதவத்திற்கு பாப்பரசர் 23ஆம் அருளப்பரினால் ஆரம்பிக்கப்பட்ட 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பெரிய கொடை. 400 ஆண்டுகள் கடைப்பிடித்து வந்த சமாளிக்கும் கிறிஸ்தவத்தை, முழுமையான கிறீஸ்தவ மன மாற்றத்திற்குச் சீர்திருத்தம் செய்ய, ஆவியாரின் சந்தர்ப்பம் பிறந்திருக்கிறது.

இம்மாபெரும் சங்கத்தில் 20இக்கு மேற்பட்ட தமிழ் ஆயர்கள் கலந்து, அதன் படிப்பினைகளையும் ஏவுதல்களையும் உள்வாங்கினர். இறைவார்த்தை தமிழிலும், வழிபாடுகள் தமிழிலும், தலைமைத்துவம் தமிழராக மாறவும் தொடங்கியது.

ஆனாலும் சங்கத்தின் முற்போக்கான பார்வையையும் உலக திருஅவையின் அறிவுரைகளையும் பின்பற்றி நடக்க, உரோமைத் தலைமைத்துவமும் தமிழ் ஆயர்களின் துணிவும் போதாமல் இருந்தது. வருங்காலத்திலாவது முற்போக்கான வழிகளில் செயற்பட, துணிவு நிறைந்த தலைவர்களை இறைவன் எமக்கு அருளுவாராக.

தமிழ்த் திரு அவைகள் உரோமையின் வழிகாட்டலிலும் சர்வதேச கிறிஸ்தவ அமைப்புகளின் பண உதவியுடனும், தமிழ்ச் சூழலிலே, ஒரு அந்நிய மதமாக செயற்பட்டாலும், கல்வியிலும், விதவைகள், அனாதைகள் வறியோர் மட்டில் மனிதாபிமான இரக்க செயல்களிலும் ஈடுபடும் அமைப்புகளாக விளங்கியிருக்கின்றன. இன்று இந்தியாவில் அன்னை திரேசா பெரும் மதிப்பும் கவனமும் பெற்றிருப்பது அவவுடைய மனித அபிமான நற்செயல்களுக்காகவே. கிறிஸ்தவர்கள் 2.5 வீதமாக இருந்தாலும், அவர்கள் மதிக்கப்படுவது விசேடமாக அவர்கள் செய்யும் அன்பு -இரக்க பணிகளினாலேதான்.

### 4.6 அந்நிய மறைபரப்பாளர்களும் தமிழ் கிறீஸதவர்களும் தமிழ் மொழிக்கு ஆற்றிய சேவைகள் மதிப்புடையன

அந்நிய மறைபரப்பாளர்கள் தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய வாழ்க்கை முறைகள் பண்பாட்டுக்கும் மதிப்பும் கரிசனையும் காட்டினர். அன்றைய கிறிஸ்தவ ம்றைபரப்பாளரின் பார்வையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மதத்தை போதிப்பதும் பரப்புவதுமே ஒரே நோக்கமாக இருந்தது. அதற்கு ஏதுவாகத் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்றனர். இந்த முயற்சியில் ஈடுபட்ட சிலர் தமிழ் மொழியையும், அதில் பொதிந்திருக்கும் இலக்கியங்களையும், கேட்டு மதித்து, அதை இன்னும் மேம்படுத்த பலர் பங்களிப்புச் செய்திருக்கின்றனர்.

இயேசு சபை குரு பெஸ்க்கி, பிற்காலத்தில் வீரமாமுனிவர் என்று அழைக்கப்பட்டவரும் போப் சுவாமிகளும், தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணத்துக்கும் பெரும் சேவை செய்தனர்.

அதைத் தொடர்ந்து ஈழத் தமிழ்க் கிறீஸ்தவர்களும், குருக்களும், தமது அன்றைய கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் கட்டுபாட்டிற்குள்ளும் இருந்து கொண்டு, பல சேவைகளைச் செய்திருக்கின்றனர். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகள், தனிநாயக அடிகள், மரிய சேவியர் அடிகள், தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் பல அரிய சேவைகளைச் செய்திருக் கின்றனர். அதையிட்டு ஈழத் தமிழ் திருஅவை பெருமை கொள்கிறது.

“ பிச்சைகாரனை பின்வாசலுக்கு அழைத்து
மிஞ்சிய உணவைக் கொடுத்து
என்னுடன் பரலோகமிருக்கிற எங்கள் தந்தையே
செபிக்க சொன்னேன். அவன் உங்கள் தந்தை
பரலோகத்தில் இருக்கிறாரா? என் தந்தை வேறு.
நாங்கள் ஒரே தந்தையின் பிள்ளைகளென்றால்,
நீர் என்னை முன் கதவால் அழைத்து
மேசையில் உணவு கொடுத்திருப்பீர்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 5*

# 2 ஆம் வத்திக்கான் சங்கம் கத்தோலிக்க திருஅவை முழுவதையும் புதுப்பிக்க நடந்த புதிய பெந்தக்கோஸ்து

## 5.1 உயிருள்ள அமைப்புகள் எப்பொழுதும் புதுப்பிக்கப் படவேண்டும்

திருஅவை, இறை வெளிபாட்டிலிருந்து தோன்றிய மனித தெய்வீக அமைப்பு. இது உயிருள்ள அமைப்பு என்பதால் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டுமென்பதை உரோமைத் தலைமைப் பீடம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டது. (church must be always reformed). திரு அவைகள் வெறும் மனித அமைப்புக்களாக இருந்துகொண்டு பொருத்தமான பயனுள்ள விதமாக இறைவனுக்கும் மனிதனுக்கும் உகந்த முறையில் இயங்க முடியாது. மாறாக எல்லா உயிரினங்களையும் போல், திருஅவையும் உயிர் ஊட்டித் தன்னைப் புதுப்பிக்க வேண்டும்.

இதைத் தத்துவமாக ஏற்றிருந்தாலும், நீண்ட பல நூற்றாண்டுகளாக, உலகத்தில் நடந்தேறிய பல மாற்றங்களுக்குப் பொருத்தமாகத் திருஅவையின் அமைப்பில் 4ஆம் நூற்றாண்டிலிருந்து மிக மிகச் சில மாற்றங்களே நடந்துள்ளன. திருஅவைச் சங்கங்கள் ஐரோப்பிய ஆயர்களின் சங்கங்களாகவும், விசுவாச தெளிவும் ஒற்றுமையும் இருக்கவேண்டுமென்பதற்காக, விசுவாசக் கோட்பாட்டிலே மாத்திரம் கவனம் செலுத்தி உள்ளன.

ஐரோப்பாவிற்கு வெளியே, 16ஆம் நூற்றாண்டிலிருந்து திரு அவைகள் ஆரம்பிக்கபட்டாலும், அவைகளின் அந்நிய சூழலையும் தேவைகளையும் பற்றி, உரோமைத் தலைமைப் பீடம் சிந்திக்க, தமிழ் ஆயர்களினாலே தூண்டப் படவுமில்லை, மாற்றங்கள் எதுவும் செய்யப் படவுமில்லை.

அன்றைய உலக மனித சமுதாயத்திலிருந்து, இன்றைய உலக சமுதாயம், பலவிதமான முன்னேற்றமான மாற்றங்களை அடைந்திருக்கின்றது. குறிப்பாக விஞ்ஞான உலகத்திலே ஆச்சரியமான கண்டுபிடிப்புகள், காலனித்துவ காலத்திலே ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், சமுதாய அரசியல் மாற்றங்கள பல நடந்திருக்கின்றன.

ஐரோப்பாவை பொறுத்தமட்டில், 1921, 1939இல் இரண்டு உலக மகா யுத்தங்கள் நடைபெற்றதினால், பெரும் அழிவுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப் பலிகளையும் கொடுத்ததினால், ஐரோப்பியரின் சிந்தனை - கண்ணோட்ட பார்வையிலும் மாற்றங்கள் (Paradigm shift) ஏற்பட்டன. இப்படியாகப் பூகோள அரசியல், சுகாதார, சமாதான, ஜனநாயக முயற்சிகளிலும், ஐக்கிய நாடுகள் சபை (United Nations UN) உலக சுகாதார அமைப்பு (World Health Organisation WHO) போன்றன தோன்றின.

இண்டு உலக மகா யுத்தங்களால் அழிவுகளை அடைந்த ஐரோப்பிய கிறீஸதவர்கள் மத்தியிலும் சில புதுப்பித்தல் இயக்கங்களைப் பிறப்பித்தன. விவிலிய இயக்கம், வழிபாட்டு இயக்கம், ஒற்றுமை இயக்கம் பொது நிலையினர் இயக்கம் (biblical, liturgical, ecumenical, laity movements). இம்மாபெரும் மக்கள் இயக்கங்கள், உரோமையின் தலைமை பீடத்திலும் ஓரளவு தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்நிலையில் தான் 23ஆம் அருளப்பர் 2ஆம் வத். சங்கத்தை தொடக்கினார். மேற்கூறிய இயக்கங்களுக்கும் அவைகளின் ஊக்குவிப்பாளராக ஐரோப்பிய திருஅவைகளில் செயற்பட்ட இறையியலாளர்களுக்கும் நல்ல சந்தர்ப்பம் தோன்றியது. சங்கத்தின் உந்து சக்திகளாக இவர்களே செயல்பட்டனர். 2ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்த பின், இவர்களின் மாற்றங்களுக்கான தாக்கத்திற்கான பங்கை (in-flu-ence) வர்ணித்த ஒரு அமெரிக்கர், ஐரோப்பிய றைன் ஆறு இத்தாலியின் தைபர் ஆற்றுக்குள் பாய்ந்ததென (Rhine flows into Tiber) தமது புத்தகத்தில் அழகாக வர்ணித்தார்.

## 5.2 23ஆம் அருளப்பர் திருத்தந்தையாக தெரிவானது திருஅவைகளுக்கு ஓர் புதிய பெந்தக்கோஸ்து!

நீண்ட காலம் பாப்பரசராக இருந்த 12ஆம் பத்திநாதரை தொடர்ந்து, 1958 இல் 23 ஆம் அருளப்பர், பாப்பரசராக தெரியப்பட்டார். வயதில் முதிந்தவர், குறுகிய காலம் தான் பாப்பரசராகப் பணி புரிவார் என்று உலகம் கணித்தது. ஆனால் 1959ஆம் ஆணடிலேயே, மூத்த கருதினால் ரிசெறானுடன் (card. Tisserant) வத்திக்கான் தோட்டத்திலே நடந்து கொண்டிருக்கும் பொழுது, ஆவியின் ஏவுதலினால் துாண்டப்பட்டு, தமது அந்தரங்க நோக்கத்தை கருதினால் ரிசெறானிடம் (card. Tisserant) சடுதியாகச் சொன்னார் - ஒரு புதிய சங்கத்தைக் கூட்டுவோம் இதைக் கேட்ட கருதினால் திகைத்துப் போனார்! ஏன்?

1958ஆம் ஆண்டு ஓர் வயதில் முதிர்ந்த, உலக கீர்த்தி பெறாத ஒரு கருதினால் றொன்கல்லியை (card. Angelo Roncalli), ஆகக் கூடியது 5 வருடங்கள் பாப்பரசராக பணியாற்றத் தேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டோமே, கடந்த 100 வருடங்களுக்கு நடைபெறாத சங்கத்தை எப்படி இவர் நடத்துவார்! என்பதே அவரின் வியப்புக்குக் காரணம்.

ஆனால் திருத்தந்தை ஆம் ஓர் உலகத் திருஅவையின் சங்கம் **(world ecumenical council)** என்றார். இதை 1960 தை 25அம் திகதி, புனித பவுலடியார் மனம் திரும்பிய விழாவை உரோமையிலுள்ள பவுலடியார் சின்னப்பர் பேராலயத்தில் கொண்டாடியபொழுது, உத்தி யோகபூர்வமாகக் கருதினால்களின் முன்னிலையில் அறிவித்தார்.

அவருடைய நோக்கத்திற்கு இந் நாளின் விழாவும் மிகப் பொருத்தமாயிற்று. ஏனெனில் அதற்கு 2 முக்கிய காரணங்கள் இருந்தன.

1) யூதேயாவிலே ஆரம்பிக்கப்பட்ட திருஅவை, பிற இனத்தாரின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் புனித பவுலடிகளின் மனமாற்றமும், அதன் பின் அவர் திருஅவையில் ஏற்படுத்திய மாற்றமும், விசேடமாக கி.பி. 49ஆம் ஆண்டு ஜெருசலேமில் நடந்த முதல் அப்போஸ்தலர் சங்கத்தில் யூத கிறீஸ் தவத்திலிருந்த விருத்தசேதனக் கடமை பிற இனத்தா ருக்கு நீக்கப்பட்டு, கிறீஸ்தவம் உலகத்தில் அனைவரும் ஏற்கக்கூடிய மதமாக **( jewish Christianity opened itself to the non-jews of the world – universal Christianity)** ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2) ஜனவரி 25இல் கிறிஸ்தவ ஒற்றுமைக்காக செபிக்கும் வாரத்தின் முடிவு (octave of prayer for Christian unity). கூடவிருக்கும் சங்கம் பாப்பரசரின் நோக்கில் கிறீஸ்தவ ஒற்றுமையை ஊக்குவிக்க வேண்டும் என விரும்பினார்.

ஆகையினால் உலகளாவிய ஆயர்களின் சங்கமாகவும், கிறிஸ்தவ ஒற்றுமையை ஊக்குவிக்கும் சங்கமாகவுமே இச்சங்கம் கூட்டப்பட்டது

கி.பி. 49ஆம் ஆண்டில் ஜெருசலேமில் நடந்தேறிய முதல் சங்கத்தின் பின் 20 சங்கங்கள் நடந்தேறி இருக்கின்றன. இவைகள் அனேகமாகத் திருஅவையின் விசுவாசத்திற்கும் ஒழுங்கிற்கும் முரணான பிரச்சினைகளைத் தீர்க்க, ஐரோப்பியத் திருஅவை ஆயர்களின் சங்கங்களாகவே இருந்தன.

ஆனால் மூன்று வருட ஆயத்தத்தின் பின், 1962ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி இச்சங்கத்தை 2500 உலக ஆயர்கள் இறையியலாளர் பங்கெடுக்க ஆடம்பரமாகத் திறந்து வைத்ததை, நான் நேரடியாக கண்டு மகிழ்ந்தேன். இச்சங்கம் 1965 டிசெ. 8 இல் முடியும் வரை, சங்கத்தின் நடவடிக்கைகளை ஆர்வத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மையாக அவதானிக்கும் பாக்கியத்தை இறைவனிடமிருந்து பெற்றேன்.

**5.3 திருஅவைகளை, அவைகளின் சூழ்நிலைக்கு ஏற்ப, சீரதிருத்தம் செய்ய, இச்சங்கம் வழி திறந்தது.**

இச்சங்கமே ஐரோப்பிய கிறீஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல; ஆசிய ஆபிரிக்க தென் அமெரிக்க நாட்டிலுள்ள இளம் கிறிஸ்தவ திருஅவைகளுக்கும் கிடைத்த பெரும் கொடையாகும்.

2ஆம் உலக யுத்தத்தை (1939-44) தொடர்ந்து, ஐரோப்பிய மக்களும், அவர்களின் திருஅவைகளும் பல பின் அடைவுகளையும் அழிவுகளையும் தாண்டி, மீளவும் எழுந்து நிற்க பல முயற்சிகள் எடுக்கப்பட்ட காலம். ஐரோப்பிய திருஅவைகளுக்குள்ளும் 4 புதுப்பித் தல் இயக்கங்கள் தோன்றியிருந்தன. அவைகள் விவிலிய, வழிபாட்டு, பொது நிலையினர், கிறீஸ்தவ ஒற்றுமை இயக்கங்களாகும் (biblical, liturgical, lay, ecumenical renewal movements) இவைகளின் ஊக்குவிப்பாளராகச் செயற்பட்ட இறையியலாளர்களும் ஆயர்களும் இச்சங்கத்திற்கு முந்திய ஆண்டுகளில் பல செயற்குழுக் கூட்டங் களைக் கூட்டி பல ஏடுகளை தயாரித்தனர்.

ஆனால் ஐரோப்பியர் அல்லாதவர்களின் திரு அவைகளுக்கு இச்சங்கம் மறு பிறப்பிற்கான சந்தர்ப்பமாயிற்று.( Rebirth of churches) 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மிசனரிகள் தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளில், மறை பரப்பு பணி (missionary activity) என்ற தலைப்பில் மேற் கொண்ட முயற்சிகள் ஐரோப்பிய சூழலில் வளர்ந்த திரு அவையை அப்படியே அந்நிய சூழலிலும் மாற்று நடுகை செய்தனர் (transplantation). இப்புதிய கண்டங்களின் பண்பாடு மதங்கள் அனைத்தும் மனித மீட்புடன் தொடர்பில்லாத வைகளாகவே கருதப்பட்டன.

தென் அமெரிக்க நாடுகளுக்கு, ஸ்பானிய போர்த்துக்கேய காலனித்துவத்துடன் கிறிஸ்தவம் வந்தது. ஆனால் அதன் அருகிலே வசிக்கும் வட அமெரிக்க செல்வந்தரால் தென் அமெரிக்க நாடு கள் தொடர்ந்தும் கொள்ளை அடிக்கப்பட்டு வந்தது.

அதேபோல், ஆபிரிக்க நாட்டு மக்களும், பல நூற்றாண்டுக ளாக அடிமைகளாக விலை போனவர்கள் காலனித்துவத்திலும் கொள்ளையடிக்கப்பட்டவர்கள். அடிப்படை மனித வாழ்விற்குரிய வசதிகளின்றித் தவித்தவர்கள். இங்கே ஆரம்பிக்கப்பட்ட திருஅவை களும், அந்நிய அமைப்புகளாக, சில இரக்க மனிதபிமான உதவி களை மாத்திரம் செய்தார்களே ஒழிய, மக்களுக்கேற்ற வாழ்வைக் கொடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவைப் பொறுத்த மட்டில் அரும் பெரும் மதங்களையும் நாகரீகங்களையும் கொண்டிருந்தும், 16ஆம் நூற்றாண்டிற்கு பின் ஆரம்பிக்கப்பட்ட கிறீஸ்தவ அவைகள் ஐரோப்பிய அந்நிய அமைப்புகளாகவே இருந்துவந்தன.

ஆகையினால் ஐரோப்பிய திருஅவைகளுக்கு மாத்திரமல்ல, 16ஆம் நூற்றாண்டிற்கு பின் ஆரம்பிக்க பட்ட திரு அவைகள் அனைத்திற்கும், 2ஆம் வத்திக்கான் சங்கம், புதுப்பித்தலுக்கு ஓர் அரும் பெரும் ஆவியின் கொடையாயிற்று.

## 5.4 காலத்தின் அறிகுறிகளை புரிந்து, திருஅவையை நவீனப் படுத்துவதற்காகவே இச்சங்கம் கூடியது.

இன்னும் இச்சங்கமோ வழமை போல் அல்லாது, இரண்டு விதத்தில் வேறு பட்டிருந்தது. 23ஆம் அருளப்பர் இச்சங்க ஆயத்த நிலையின் போதே அடிக்கடி விடுத்த அழைப்பு என்னவென்றால் - காலத்தின் அறிகுறிகளை வாசித்து, வியாக்கியானம் செய்து, திருஅவையை காலத்திற்கும், பொருத்தமாக நவீனப்படுத்துவது (aggiornamnto = read & interpret signs of the times and update the church accordingly)

உலகத்தின் எல்லாக் கண்டங்களிலிருந்தும் இரண்டாயிரத்து முந்நூறுகளுக்கு மேலான ஆயர்களும் நூற்றுக்கணக்கான இறை யியலாளரும் பங்கெடுத்த உலகத் திருஅவையின் முதல் கூட்டமாக இது அமைந்தது. ஆகையினால் இச்சங்கத்தின் ஏடுகள் உலகத்தின் எல்லா அவைகளுக்கும், எமது தமிழ்த் திருஅவைகளுக்கும், மிக முக்கியமானவை.

இக்காரணங்களினால் 2ஆம் வத்திக்கான் சங்கம் இன்றைய உலகைப் புதுப்பிக்க நிகழ்ந்த ஒரு புதிய பெந்தக் கோஸ்தாகவும், புனித 23ஆம் அருளப்பர் உலகத் திருச்சபையை புதுப்பிக்க வந்த தூதுவராகவும் போற்றப்படுகின்றன.

## 5.5 2ஆம் வத்திக்கான் சங்கம்! திருஅவையின் சரித்திரத்தில் 21ஆவது சங்கம் ஆனால் எமது காலத்திற்கேற்ற மாற்றத்தைடி - திருப்பத்தை ஊக்குவிக்கும் முதலாவது சங்கம்!

திருஅவை முதல் 15 நூற்றாண்டுகளுக்குப் பின் திரிதெந்தீன் சங்கத்திலே இறுக்கமாக கட்டி அமைக்கப்பட்ட காலத்தை தொடர்ந்தே, தமிழ்க் கிறீஸ்தவம் இந்தியாவிலும், இலங்கையிலும் தொடங்கியதை மேலே கூறியிருந்தோம். கிறீஸ்தவம் ஆரம்பமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 நூற்றாண்டுகளின் பின், இம்மாபெரும் 2ஆம் வத்திக்கான் சங்கமே உலகளாவிய திருஅவையின் ஆயர்களின் சங்கமாயிற்று.

தென் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாட்டவர்கள், சங்கத்தின் ஆயத்த குழுக்களில் பங்கெடுக்காவிட்டாலும், தயாரிக்கப்பட்ட ஏடுகள், போதிய அளவு தூரப் பார்வையுடனும், பரந்த உலகின் பார்வையுடனும், தயாரிக்கப்பட்டு இருந்தன.

எல்லோர்க்கும், அதாவது பழைமை வாய்ந்த ஐரோப்பிய திருஅவைகளுக்கும், மற்றைய கண்டங்களில் சென்றடைந்த நூற்றாண்டுகளில் தோன்றிய இளம் திருஅவைகளுக்கும், மாறியிருக்கும் உலகத்தை உற்று நோக்கி, ஆராய்ந்து, பல தூர நோக்குடைய பார்வைகளையும், சூழலுக்கேற்ற மாற்றங்களையும், ஊக்குவிப்புக்கான சிந்தனைகளையும், கொடுத்திருந்தது. ஆகையால் சங்கம் நடந்த பொழுது ஐரேப்பியர் அல்லாத இளம்திரு அவைகளின் ஆயர்களும் தமது கருத்துக்களை, திருத்தங்களை எழுத்து மூலம் செய்ய முடிந்தது. (சங்கம் உத்தியோக பூர்வமாக இலத்தீன் மொழியில் நடைபெற்றது. ஆனால் எழுத்து மூலம் வேறு மொழிகளிலும் கருத்து தெரிவிக்கும் வசதியிருந்தது)

அத்துடன் சங்கத்தின் ஆரம்பத்திலேயே, பரந்த நோக்குடன், சங்கபிதாக்கள் மனுக்குலம் முழுவதற்கும் ஒரு நற்செய்தியை வெளியிட்டனர். *மனுக்குலத்திற்கு செய்தி* என்ற தலைப்பில் சங்கத்தின் 3 நோக்கங்களாக - நிறை வாழ்வு, அன்பு, அமைதி - என்பவற்றை தெளிவாக்கினர்

நான்கு வருடங்களாக, ஒவ்வொரு ஆண்டும் 10 வாரங்களுக்கு, வத்திக்கான் பேராலயத்தில் நடந்த சங்கக் கூட்டங்களில் ஏறத்தாழ 2400 ஆயர்களும் 100க்கு மேற்பட்ட இறையியலாளர்களும், பல பிற மத பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இடைக்காலங்களில் ஆயத்த வேலைகள் பல மட்டங்களில் உலகளாவிய ரீதியில் நடந்தன.

இச்சங்கத்தினால் வெளியிடப்பட்ட 16 ஏடுகளும் சரித்திர முக்கியத்துவமான முறையில் பல திசைகளிலுமிருந்த சேர்க்கப்பட்ட ஆராய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, சங்கக் கூட்டங்களில் பகுதி பகுதியாக விவாதிக்கப்பட்டு, 95 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளினால் முடிவு செய்யப்பட்டன..

உடனடியாக இந்த ஏடுகள் அனைத்தும் ஆர்வத்துடன் இலத்தீன் மொழியிலிருந்து, தமிழ் உட்பட, எல்லா தாய் மொழிகளிலேயும் வெளியாயின. ஆகையினால் இந்த முடிவுகளை, திரு அவைகள் அலட்சியப்படுத்த முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 6*

# சங்கத்தின் முன்னேற்றமான முடிவுகளும் தமிழ்த் திருஅவைகளின் புதிய பயணமும்.

6.1 தமிழ்த் திருஅவைகள், உரோமைத் திருஅவையின் கிளைகளாகப் பணிவுடன் நீண்ட காலம் வளர்ந்தன.

மேலே 4ஆவது அத்தியாயத்தில் விளக்கியது போல, 16ஆம் 17ஆம் நூற்றாண்டில் புரட்சிகள் சீர்திருத்தங்களுக்கு எதிராக பாதுகாப்பாகக் கட்டிஅமைக்கப்பட்ட திரு அவைகளிலிருந்தே (counter-reformation churches) ஐரோப்பிய மறைபரப்பாளர்கள், காலனித்துவ போர்த்துகேயருடன் இந்தியா, இலங்கை வந்தனர். தாங்கள் பிறந்து வளர்ந்து அனுபவித்த கிறிஸ்தவ திருஅவைகளையே, எங்கள் மண்ணிலும் அப்படியே மீள்-நடுகை (transplantation) செய்தார்கள்.

தமிழ்க் கிறிஸ்தவர்கள் தமது புதிய மதத்தைச் சரிவர முழுமையாக விளங்கிக் கொள்ளவில்லை. முன்னூறு வருடங்களுக்கு மேலாகத் தமிழரின் - சமாளிக்கும் கிறிஸ்தவம் - உரோமைத் தலைமைப் பீடத்தின் வழி காட்டலிலும் மறைபரப்பாளரின் வழிகாட்டலிலும் வளர்ந்தன. அந்நிய தமிழ்ச் சூழலுக்கேற்ற மாற்றங்கள் எதுவும் எம்மிடமிருந்து கோரப் படவுமில்லை; உரோமைத் தலைமை பீடமும் அவைகள் பற்றி சிந்திக்கவுமில்லை.

6.2 2ஆம் வத்திக்கான் சங்கத்துடன் தமிழ்த் திருஅவைகளுக்கு இன்னோர் ஆரம்பம்!

கிறிஸ்தவ அவைகளின் வரலாற்றில் நிச்சயம் பொன்னால் எழுதப்படும் 2ஆம் வததிக்கான் சங்கம் 1965ஆம் ஆண்டு மார்கழி 8ஆம் திகதி சிறப்பாக நடந்து முடிந்தது. ஒரு அமெரிக்க கருதினால் கூறினார் - சங்கம் முடிந்து விட்டது, சங்கம் தொடங்கிற்று! அதாவது சங்கம் புரட்சிகரமான முடிவுகளை எடுத்திருக்கிறது. ஆனால் அவைகளை செயற் படுத்தும் பொறுப்பு தொடங்கிற்று!

நிச்சயமாக சங்கத்தின் முக்கிய மாற்றங்களை செயற்படுத்துவது இலேசான காரியமல்ல. அதற்குரிய கால அவகாசம் வேண்டும். உரோமை அதிகாரிகளின் ஊக்குவிப்பும் ஒத்துழைப்பம் முக்கியம். எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களின் புரிந்துணர்வும் ஆர்வமும் இன்றி அமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்குடன் சம்மதம் கொடுத்த சங்கப்பிதாக்களும், ஏடுகளை தயாரித்த முற்போக்கான இறையியலாளரும் திருஅவைகளின் வருங்காலம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் சந்தோசமாக வீடு திரும்பினர்.

ஆனால் சங்கஏடுகளுக்கு எதிர்த்து வாக்களித்தவர்கள், பழைய பழக்க வழக்கங்களை முக்கியபடுத்துகின்றவர்கள் பழமைவாதிகள் பாரம்பரியவாதிகள் (**conservatives & traditionalists**) செயற்படுத்தும் அதிகாரிகளாக வத்திகானிலே தங்கியிருந்தனர்!

அத்துடன் சங்கத்தின் பின் உரோமையில் பாப்பரசர்களாக வந்தவர்கள் எல்லோரும் சங்கத்தின் முற்போக்கான ஆலோசனை களை அமுல்படுத்துவதற்கு சங்கத்தின் துணிவான பார்வையும் ஆர்வமும் கொண்டிருக்கவில்லை. அதற்கிணைய தமிழ்த் திருஅவை களின் தலைவர்களாக உரோமைக்குப் பிரமாணிக்கமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டோரும் தலைமை பீடத்திற்கிணங்க, பிரச்சினை இல்லாத சமாளிக்கும் போக்கையே கடைப்பிடித்தனர்.

## 6.3 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஏவுதல்களுக்கு பாப்பரசர் பிரான்சீசின் துணிச்சலான ஊக்குவிப்பு.

இப்போது திருஅவையை வழிநடத்தும் பாப்பரசர் பிரான்சீஸ், சங்கத்தை ஆரம்பித்த பாப்பரசர் 23ஆம் அருளப்பர் போன்று, தூரப் பார்வையுடன், காலத்தின் அறிகுறிகளை கணித்து, துணிவாகத் திருஅவையைச் சீர் திருத்த வேண்டுமென்று செயற்படுகின்றார்.

எமது கடந்த கால சரித்திரத்தையும், நிகழ் கால வருங்கால சவால்களையும் ஆராய்ந்து, புதுப்பித்தலுக்கு வழி தேடுவதே எமது நோக்கமாக இருப்பதன் காரணத்தினால், பாப்பரசர் பிரான்சீசின் போக்கு, எமக்கும் எமது ஆதங்கத்திற்கும் பெரும் ஊக்கத்தைத் தருகின்றது.

எமது நோக்கத்தை அடைய, நாம் ஊற்றிற்கு சென்று, பிரமாணிக்கமாக இயேசு ஆரம்பித்த இறையரசை, தமிழர் மத்தியிலும், வளர்க்க செயல்படுவோமாக. கிறிஸ்துவின் திருஅவை, ஒளியாகவும் உப்பாகவும் தமிழர் மத்தியில் பிரசன்னமாயிருந்து, எம்மில் வேரூன்றி யிருக்கும் பாவ அடிமைத்தனங்களிலிருந்து எம்மை விடுவித்து, இறையரசை பரப்புவதாக. இதுவே எமது உயர்ந்த நோக்கமாக எப்போதும் இருக்க வேண்டும்.

2ஆம் வத்திக்கான் சங்கம் தனது ஏடுகளில் கிறிஸ் தவத்திற்குத் தேவையான புதிய பார்வையையும், வழிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி இருக்கின்றது; உலகத்தைப் பற்றியும், மனிதரைப் பற்றியும், மதங்களைப் பற்றியும், திருஅவை தன்னைப் பற்றியும், மறுமலர்ச் சிக்கான புதிய விளக்கம், சிந்தனைகள், வழிகளை பிறப்பித்து இருக்கிறது. அதன் ஏடுகள் திருச்சபைக்கு ஒரு புதிய முகத்தையும், ஒரு புரட்சியான நோக்கையும் உள்ளடக்கத்தையும், ஒரு புதிய பயணத்தையும், ஆரம்பித்து வைததிருக்கின்றன. விசேடமாக தமிழ்த் திருஅவைகளின் சூழலிலும் அதன் மத கலாச்சார சவால்கள் மத்தியிலும் இவைகள் வீண் போகக்கூடாது.

இந்தச் சங்கம் முன்நடந்த சங்கங்களைப் போல பிழையான போதனைகளைக் கண்டிக்காவிட்டாலும், புதிய இறையியல் கொள்கைகளைப் பிரகடனம் செய்யாவிட்டாலும், அதாவது கிறிஸ் துவைப் பற்றி புதிய இறையியல் கோட்பாடுகள் படிப்பினைகளை வெளிப்படுத்தாவிட்டாலும், அது தன்னுடைய 16 ஏடுகளிலேயும் கொடுத்திருக்கும் ஆழமான சிந்தனைகளும் பார்வைகளும், வரும் காலத்திற்கு ஏற்றவாறு, புரட்சிகரமான சிந்தனைகளாக அங்கே கொண்டுவரப் பட்டிருக்கின்றன. அவைகள் ஒரு புதிய காலத்தின் ஆரம்பத்தைத் தொடங்குவதற்கு மிகப் பொருத்தமாக அமைகின்றன.

இச்சங்கத்தை கூட்டிய பாப்பரசர் 23ஆம் அருளப்பர் கொண்டிருந்த கனவிற்கு இணங்க, சங்கம் திருஅவைகளின் ஊற்றிற்கு சென்று ( going to the origins of Christianity), இன்றைய திருஅவைகளை புதுப்பிக்கவும், இன்றைய உலகிற்கு பொருத்தமான முறையில் செயற்படவும் காட்டிய வழிமுறைகள், எமக்கு உறுதியை யும் மனத்திடனையும் துணிவையும் கொடுத்திருக்கின்றன. இத் துணிவே பல சவால்கள் மத்தியிலும், திருஅவை தலைவர்களுடன் சங்க நோக்கத்திற்காக வாதாடுவதிலும் என்னை பெலப்படுத்தியது.

இற்றைவரையும் 19 நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் மாத்திரம் வளர்ந்த திருச்சபையின் ஆயர்களே, 16ஆம் நூற்றாண்டிற்கு பின் தென்அமெரிக்காவிலும், ஆபிரிக்காவி லும், ஆசியாவிலும், தோன்றிய திரு அவைகளை தங்கள் பார்வையில் வழி நடத்தினர். ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் இந்தக் கண்டங்களின் பிரச்சினைகளின் மத்தியிலே, புதிய பயணங்களைத் துணிவுடன் ஆரம்பிக்க தூய ஆவியானவர் சுதேசிய ஆயர்களையும் குருக்கள் துறவியர் இறையியலாளர்களையும் கொடுத்து வருகின்றார்.

### 6.4 வத்திக்கான் சங்கம் ஆசிய மதங்களையும், பண்பாடு களையும், புதிய கண்ணோட்டத்தில் துணிவுடன் நோக்கியது

ஆசியாவிலே விசேடமாக திருஅவைகள் சிறுபான்மையாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மதங்கள் பல கலை, கலாசாரங்கள் நிறைந்த பண்பாட்டு சூழலிலே இருக்கின்றன. இதனால் 2ஆம் வத்திக்கான் சங்கம் கொடுத்த சிந்தனைகள், ஆசியாவின் இளம் திருஅவைகளுக்கு ஒரு புதிய பிறப்பை கொடுக்கும் பெந்தக்கோஸ்தாக இருக்கின்றது.

மனிதரின் மறுபிறப்பைப் போதிக்கும் இந்து, புத்த மதங்களைக் கொண்ட இக்கண்டத்திலே, மனித மறுபிறப்பை பற்றி அல்ல, எமது உலகின் யதார்த்தங்களான மதங்கள் கலை கலாசாரங்கள் பண்பாடு அனைத்தையும் நேர்மையாகக் கணித்து, திருஅவைகளின் பார்வையையும், புதிய சவால்களைச் சந்திக்க வேண்டிய தேவையையும், அதற்கான ஒரு பயணத்தைத் தொடங்க வேண்டிய தேவையையும் சங்கம் உணர்த்தியது. ஆகையினால் இது ஆசியா வில் இருக்கும் சகல திரு அவைகளுக்கும் ஒரு திருப்பு முனை - அதாவது, இறையரசை ஆயத்தபடுத்த, திசைகளை மாற்றி பயணத்தை தொடர வேண்டிய ஒரு கட்டமாக அமைகின்றது.

தமிழக் கிறிஸ்தவத்தைச் சீர்திருத்துவதென்பது, எம் எல்லோருக்கும் - மக்களுக்கும் தலைவர்களுக்கும் - பரிசுத்த ஆவியாரின் அழைப்பு. சவால்கள் நிறைந்தது, மனித பெலத்தால் கண்டடைய முடியாது. இறைவன் எம்மோடு இருக்கின்றார், என்ற நம்பிக்கையில் மாத்திரம் நோக்கத்தை அடைய முடியும்.

நீண்ட காலமாகத் தமிழ்க் கிறீஸ்தவர்கள் வீட்டிலும் சமூகத் திலும் பின்பற்றிய சில முறைகளை மாற்றி அமைக்கும்படி வேண்டப் படுகின்றனர். மனிதர்கள் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் எமது சகோதரரென்று ஏற்றுகொள்ளபட வேண்டும். அதாவது சமா ளிக்கும் கிறீஸ்தவம் மாறி, கிறீஸ்தவ விசுவாசத்திலே வாழத் துணிய வேண்டும். அத்துடன் நாம் மற்றைய மதங்களுக்கு எதிரானவர்களோ, மேலாகவோ அல்ல என்பதை நாங்களும் புரிந்து, எமது பிற இன மத சகோதரர்களும் அப்படி எம்மைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும்.

அப்போது தான் தமிழ் மக்கள் மத்தியில் நாம் ஒளியாகவும் உப்பாகவும் செயற்படலாம். மனிதர்களினால் உருவாக்கப்படும் சமயங் களில் தவறுகள் தோன்றுவது சர்வ சாதாரணம். எமது கிறீஸதவத்தி லும் தவறுகள் இருக்கின்றன. அதற்காகவே எப்போதும் நாம் எம்மை, எமது கால பெரியோர்களின் வழிகாட்டலில் புதுப்பிக்க வேண்டும். இராம சாமி பெரியாரின் - சுய மரியாதை இயக்கத்தை ஓர் உதாரணமாகக்ச் சுட்டி காட்ட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.5 தமிழ் நாட்டில் இராமசாமி பெரியாரின் - சுய மரியாதை இயக்கம்

தமிழர்கள் மத்தியில் பல விதமான குறைகள் இருக்கின்றன. அவைகளில் மிக முக்கியானதொன்று எம் மத்தியில் நீண்ட காலமாக பரம்பரையாக, மதத் தலைவர்களின் ஊக்குவிப்புடன் தொடரும் பணம் பதவி சாதி வேற்றுமைகள். இவைகளை மாற்ற சமூக தலைவர்கள் முயற்சிக்கின்றனர். மற்றைய தலைவர்களும் இதற்காகவே நான் தமிழ் நாட்டில் இராமசாமி பெரியாரின் சுய மரியாதை இயக்கத்துடன் சென்னையில் அதன் தலைவர் வீரமணி ஐயருடன் தொடர்பு கொண்டேன்.

தமிழர் மத்தியில் இருக்கும் அநீதியான சாதி வேறு பாடுகளை எதிர்த்து, 1960ஆம் ஆண்டுகளில் பிராமண குடும்பத்தை சேர்ந்த இராமசாமி பெரியார், புரட்சிகரமான முறையில் சுய மரியாதை (self-respect) இயக்கத்தை ஆரம்பித்தார். பிராமண குருக்கள் இறைவனின் பெயரால் சாதி வேற்றுமையைத் திணிப்பதை எதிர்த்தார். அவ்விதமாக இறைவன் இருக்க முடியாது என்று வாதாடினார். 2010 ஆண்டிலிருந்து நானும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து வருகிறேன். வீரமணி ஐயர் தலைமையில் ஜேர்மன் நாட்டில் கொலோன் பல்கலைக்கழகத்தில் *சுய மரியாதை இயக்கம்* தங்கள் சர்வதேச மாநாட்டை நடத்தினர். நான் *பெரியாரும் மனிதமும் (Periyar and Humanity)* என்ற தலைப்பில் உரையாற்றி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கபட்டேன்.

பெரியாரும், அவரின் தொண்டர்களும் சாதி வேற்றுமை பாராட்டும் இறைவனையோ மதங்களையோ மதிப்பதில்லை. இருந்தும் நான் இறைவனையும், மதத்தையும், சேர்ந்தவன் நான் அவர்கள் மத்தியில் தோன்றி விளக்கியது என்ன? மனிதனை மனிதனாக வாழவிடாது, மதத்தின் பெயராலும், இறைவனின் நாமத்தாலும் அநீதியை மனிதர் மேல் திணிப்பது கொடும் பாவம்! அநீதியை அங்கீகரிக்கும் இறைவனோ மதமோ இருக்க முடியாது என்பதே பெரியாரின் கருத்து. ஆகையினால் இறைவனையும் மதத்தையும் சரிவரப் புரிந்து கொண்டால், நாம் எல்லோரும், எல்லா மதத்தை சேர்ந்தவர்களும் அநீதிகளை வன்மையாகக் கண்டித்து அதற்கெதிராகப் போராட முடியும்.

## 6.6 மதத்தை சேர்நத நானும், சீர்திருத்தத்தின் ஒரு கருவியாகி மற்றவருடன் இணைந்து செயற்பட முயற்சிக்கின்றேன்.

2ஆம் வத். சங். நிகழ்வுகளை, எனது மாணவ காலத்தில் 11.10.1962 ஆரம்பத்திலிருந்தே 8.12.1965 முடிவு வரை நேரடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கப் பாக்கியம் பெற்றேன். அதன் பின் குருவாகவும், இறையியல் பேராசிரியராகவும், திருஅவை இயலிலே எனது ஆராய்ச்சிகளைச் செய்து 10 ஆண்டுகள் கண்டி குருத்துவ கல்லூரி யிலும், 10 ஆண்டுகள் யாழ் சவேரியார் குருத்துவ கல்லூரியிலும் திருஅவையியலின் பேராசிரியராகவும், 10 வருடங்கள் ஆசிய ஆயர் சங்கங்களின் இறையியல் ஆலோசகராகவும், பணியாற்றினேன். இக்காலங்களில் பல ஆசியத் திருஅவைகளையும் நேரடியாகத் தரிசித்து எனது 2ஆம் வத். சங்க சிந்தனைகளை பகிர்ந்து கொண்டேன். நான் கற்றதை, அறிந்ததை, ஆராய்ந்து என் கற்பித்தல் பணியையும் இனங்கள், மறைகளுக்கு, இடையிலான உறவை வளர்க்கும் பணியையும் செய்து வந்துள்ளேன். இன்னும் லண்டன், பிராங்பேட், முன்ஸ்ரர், பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றி, பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வரைந்த பின், இப்போது எனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அனுபவ அறிவு, அல்லது பட்டறிவு எனும் சிந்தனைகளில் ஈடுபட்டுள்ளேன். பட்டறிவு, நாம் முன்பு பெற்றுக் கொண்ட அறிவுடனே ஆராய்ச்சியுடனே முரண்படாது, ஆனால் சிறப்பித்து மனித சமுதாயத்திற்கு பயனுள்ளதாக்கும்.

ஆகையினால் தான் எனது கணிப்பில் 50 ஆண்டுகளுக்கு முன் 2ஆம் வத். சங்கம் முடிந்தது; 20க்கு மேற்பட்ட தமிழ் ஆயர்கள் பங்கெடுத்தனர்; சங்கம் கற்பித்த சிலவற்றை உணர்ச்சியுடன் அரவணைத்தோம்; பல மாற்றங்கள் செய்யப் பட்டிருக்கின்றன; ஆனால் இன்னும் எத்தனையோ முக்கியமானவை, மற்றவருடனும் இணைந்து துணிவுடன் சீர்திருத்தம் வேண்டிக் காத்திருக்கின்றன.

சுய நிர்ணய, தேசிய, தனி நாடு, என்று
உலகம், ஐ.நா. ஏற்றுக்கொள்ளும் மனித
சம உரிமைகளுக்காக போராடுகின்றோம்.
நல்லது! ஆனால், இப்போராட்டத்தை
எமது சொந்த வார்த்தையாலும்,
நடத்தையாலும் உள் வீட்டில் அநீதியான
வேறுபாடுகளினாலும்
பெலவீனப்படுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 7*

# 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஏவுதல்களுக்கு தமிழ்த் திருஅவைகளின் வரவேற்பு

## 7.1 தமிழ் ஆயர்கள் தமது பங்கெடுப்புக்கு மேலாக, பொருத்தமான அறிவுரைகளைப் பெற்றனர்.

2300 ஆயர்களுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றிய சங்கத்தில் 30க்கு குறைவான ஆயர்களே தமிழ் நாட்டிலும் இலங்கையிலுமிருந்து பங்குபற்றினர். அவர்களுள் 16 ஆயர்களே தமிழர். ஏனையோர் ஐரோப்பியர். சங்கத்தில் பேசப்பட்ட உத்தியோக மொழி இலத்தீனாக இருந்ததின் காரணமாக, தமிழ் ஆயர்கள் பலர், தங்கள் கருத்து களை எழுத்து மூலமே சமர்ப்பித்தனர். இருந்தும் சங்கத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட 16 ஏடுகளும், தமிழ் கிறிஸ்தவர்களுக்கும், அவை களுக்கும், மிகப் பெறுமதியான முக்கிய அறிவுரைகளை வழங்கியிருக்கின்றன.

உதாரணமாக, ஜேர்மன் சர்வதிகாரி கிற்லர், யூதர் எல்லோரையும் இயேசுவின் கொலையாளராக குற்றஞ்சாட்டி, தனது யூத இன அழிவை நீதிப்படுத்தினார். இதனால் ஐரோப்பிய ஆயர்கள், 2ஆம் உலகப் போரில் கொடூரமாகக் கொல்லப்பட்ட யூதர்களையும் அழிவுகளையும் நினைத்து, கிறீஸ்தவ - யூத இனத்துடனான உறவைப் புதுப்பிக்க விரும்பினர்.

இதுபற்றிய ஏட்டை கருதினால் அகுஸதீன் பேயா(Augustine Bea) முன் மொழிந்த பொழுது, *கிறீஸ்தவமல்லாத மற்றைய சமயங்களோடும் திருச்சபைக்குள்ள உறவு புதுப்பிக்கபட வேண்டுமென்று சங்கப் பிதாக்கள் விரும்பினர். இவ்வாறே, இன்னோர் புதிய ஏடு - கிறிஸதவத்திற்கும் மற்றவர்களுக்கும் இடையில் தொடர்பு* (nostra aetatae – our age/times) என்ற தலைப்பில் ஒரு முக்கிய ஏடாக நிறைவேற்றப்பட்டது. இவ்வேடு, தமிழ் கிறிஸதவத்தின் சூழலிலிருக்கும் பிரச்சினைகள் சால்களுக்கு முகங் கொடுக்க தமிழ் திருஅவை களுக்கு மிக முக்கியமானதாக அமைகின்றது.

## 7.2 தமிழ்க் கிறிஸ்தவர்களும் பொதுவான ஆர்வத்துடன் சங்க ஏவுதல்களை வரவேற்றனர்

சங்கம் முடிந்து நாடு திரும்பியதும் ஆயர்களின் ஏவுதலிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டலிலும் பல முயற்சிகள் ஆர்வத்துடன் முன்னெடுக்கப்பட்டன. விவிலியம், சங்க ஏடுகள் வழிபாடுகள் தமிழில் மொழி ஆக்கம் செய்யபட்டன; பாடல்கள், பல இயற்றப்பட்டன. அருட்திரு அமலோற் பவதாஸ், எட்வேட் பிரான்சிஸ் போன்றவர்களின் ஊக்கத்துடன் விவிலியம், வழிபாட்டு, மறைக் கல்வி, மறை ஆசிரியர்கள், இத்தகைய பல முயற்சிகள் அவைக்கான மையங்களினால் நடத்தப் பட்டன. தென் இந்தியாவிலும், இலங்கையிலும், இருக்கும் தமிழ் கிறீஸ்தவர்களும் திருஅவைகளும் மகிழ்ச்சியுடன் பயனடைந்தனர். கூட்டம் கூட்டமாகக் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் விழிப்புணர்வுக் கூட்டங்களில் பங்கு பற்றி பயனடைந்தனர்.

*(என்னைப் பொறுத்த மட்டில், நான் பெற்ற இறையருளின் கொடையாக 1976ஆம் ஆண்டு தொட்டு 1996ஆம் ஆண்டுவரை இலங்கையிலும், ஆசிய நாடுகளிலும், ஓர் ஆசிய இறை யியலாளராகப் பல கூட்டங்களில் பங்கு பற்றி உதவி செய்தேன். அத்தோடு உரோமையில் 1975, 1987 ஆண்டுகளில் நடந்தேறிய ஆயர் மன்றங்களின் போதும் (Bishops' Synods on evangelisation & Culture, Laity) உரோமையில் தங்கியிருந்து ஆசிய ஆயர்களுக்கு ஊக்குவிப்புப் பணி புரிந்தேன்.)*

### 7.3 திருஅவைகள் பண்பாட்டு மயமாக்குதலை மிக ஆர்வத்துடன் வரவேற்றனர்

இதில் அதிசயமில்லை. மொழி கலை கலாசாரத்தில் அள வில்லா பற்றுடைய தமிழருக்கு, சங்கம் ஊக்கப்படுத்திய பண்பாட்டு மயமாக்குதல், பெருமகிழ்ச்சியை ஊட்டிற்று. நட்டுவக்காரனுக்கு நொட்டியா காட்ட வேண்டுமென்பர். பல நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவமும் அதன் திருஅவைகளும் தமிழர் மத்தியில் அந்நிய ஐரோப்பிய மதமாக பிற சமயத்தவரால் கருதப்பட்டது மாத்திரமல்ல, தமிழ் கிறீஸ்தவர்களும் தங்கள் வழிபாடுகளிலும், தலைமைத்துவத்திலும், இதை உண்ர்ந்தனர். ஆகையினால் நீண்ட காலத்தாகம் தீர, ஆயர் குருக்கள் மாத்திரமல்ல, அநேக பொதுநிலையினரும் ஆர்வத்துடன் செயலில் ஈடு பட்டனர்.

### 7.4 தமிழிலே இறை வார்த்தை

முதலாவதாக எமது வேதாகமம் தமிழிலே மொழிபெயர்க்கப் பட்டு, இறைவனின் வார்த்தை தமிழிலே வாசிக்கப்பட ஆரம்பித்தது. வழிபாடுகளில் மாத்திரமல்ல வீடுகளிலேயும், சகல சந்தர்ப்பங்களி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயும், வேதாகமத்தை மக்கள் தமிழிலே வாசித்துச் சிந்தித்துப் பயன் பெறக்கூடியதாக இருந்தது. அந்த வேதாகமத்தைத் தங்களுடைய சூழலுக்கு ஏற்ப, அதாவது சூழலின் சவால்களுக்கு ஏற்ப ஓரளவிற்கு வியாக்கியானம் செய்யக்கூடியதாக நிலைமை மாறி இருந்தது.

## 7.5 தமிழிலே வழிபாடுகள்

அது மாத்திரமல்ல திருப்பலிப்பூசை தமிழிலே கொண்டாடுவதற்கு வழிவகுக்கப்பட்டது. இலத்தீனிலே செபங்களைச் சொல்லுவதையும், இலத்தீன் பாடல்களையும் நிறுத்தி, முழுமையாகத் தமிழிலே செபிக்கவும், பாடவும் வழிவகுப்பட்டது. இவைகளைப் போதியளவு கட்டுப்பாட்டுடன் செய்வதற்கு தமிழ் நாட்டிலேயும் இலங்கையிலும் வழிபாட்டு, இறையியல், வேதாகம மையங்களை நிறுவி அவைகளூடாக பண்பாட்டு மயமாக்குதலை வழிநடத்தி ஊக்குவித்தனர்.

## 7.6 மாற்றங்களை ஊக்கப்படுத்த, ஒழுங்குபடுத்த, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மையங்கள்

மொழியில் மாத்திரமல்ல வழிபாட்டு சைகை காட்டு விதங்களிலும் அலங்கார முறைகளிலும் தமிழருடைய பாரம்பரிய முறைகளுக்கு வழி வகுக்கப்பட்டது.

வழிபாட்டு ஆரம்பத்தில் தமிழ் முறைப்படி ஆயர் குருக்களை மாலையிட்டு ஆராத்தி எடுத்து, பொட்டு வைத்து வரவேற்பது, கைகோர்த்துத் தலை வணங்கும் முறை, சமாதானத்தை கைகோர்த்து தலை குனிந்து பரிமாறிக் கொள்வது, தரையில் இருந்து பலிகளை நடத்துவது, தூபம் காட்டுவது, ஒருவரை ஒருவர் அரவணைப்பது என்பன, தமிழ் முறையின்படி செயற்படத் தொடங்கின.

அத்தோடு தமிழருடைய பண்டிகைகள் தைப்பொங்கல் போன்றவை எங்களுடைய வழிபாடுகளிலும் இடம்பெற்றன. எது எது எங்களுடைய கலை கலாசாரத்திலே நன்மையென்று மக்களுக்கு நல்லதாகத் தோன்றினதோ, அவைகளை எங்களுடைய கிறீஸ்தவ வழிபாட்டிற்குள் கொண்டுவருவது தமிழ் கத்தோலிக்கத் தலைமைத்துவத்தின் முயற்சியாக இருந்தது. இந்தத் தலைவர்களின் முயற்சிகளை மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பயன்பெற்றனர்.

இந்த முயற்சிகள் தமிழ்த் திருஅவைகளில் மக்களையும் வழிபாடுகள் நடத்தும் குருக்களையும் ஒருவரோடு ஒருவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து. நெருக்கமாக எங்களுடைய மன்றாட்டுக்களையும் பணிகளையும் கூட்டுப்பலிகளாக, கூட்டுச் செபங்களாக மாற்றியுள் ளன. இதனால் வத்திக்கான் சங்கத்தில் தெளிவாக்கபட்ட பொதுநிலையினரின் பொதுக்குருத்துவம் (common priesthood of the faithful) என்பது நடை முறையில் வந்தது.

ஆகையினால் குருக்கள் வழிபாடுகள் நடத்தும் பொழுது, மக்களை மறந்து, தம்இச்சைப்படி தனியாக நடக்கக் கூடாது; திருநிலைப் படுத்தப்பட்டவர்களும், திருமுழுக்கினால் குருத்துவ, அரச, தீர்க்க தரிசன பணிக்கான அடையாளங்களை பெற்ற மக்களும் இணைந்தே பலி விருந்தில் பங்கேற்கின்றனர்.

இப்படியாக மொழியிலும், தமிழ் அடையாளங்களாலும் எங்களுடைய இறைவணக்கமும், வழிபாடுகளும் தமிழ்ப் பண்பாட்டு மயமாக்கப்பட்டு, செழிப்பாகப் பயனுள்ளவையாக மாறியிருக்கின்றன. விசேடமாக எமது கிறீஸதவத்திலும் திருஅவைகளினதும் ஐரோப்பிய முகம் குறைந்து, தமிழ் உருவம் தெளிவாகின்றது.

ஆனால் மேற்கூறிய நல்ல மாற்றங்கள், 2ஆம் வத். சங்கம் எமது திருஅவைகளுக்கு காட்டிய ஆழமான சீர்திருத்த வழிகள் பலவற்றை, இன்னும் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. பண்பாட்டு மயமாக்குதல்; என்ற தலைப்பில் நாம் தமிழ்ப் பண்பாட்டின் சில பகுதிகளையே, அதாவது வழிபாட்டின் மொழி, சங்கீதம், சைக்கினைகள், போன்ற சிலவற்றை மாற்றியிருக்கிறோம். ஆனால் பண்பாடு (culture) என்ற வார்த்தையைச் சங்கம் விளக்கும் பொழுது, பண்பாட்டின் வழியாகத்தான், அதாவது இயற்கைப் பொருள்களையும், ஆற்றல்களையும், சூழலையும் வளமுறச் செய்வதன் வழியாகத் தான், மனிதா் உண்மையான, முழுமையான, மனிதப் பண்பை அடைய முடியும் என்று விளக்கியது. இந்நோக்கத்தை தெளிவுபடுத்த 1975ஆம் ஆண்டில், - நற்செய்தி பரப்புதலும் பண்பாடும் - (**Evangelisation and Culture**) என்ற தலைப்பில் ஆயா் மன்றத்தை (Bishops Synod) நடாத்தியது. இதன் பொழுது, உலக ஆயர்களின் கருத்து பரிமாற்றங்களை ஊடகவியலாளராக அவதானிக்கும் பாக்கியம் பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அத்தியாயம் 8*

# தமிழ் வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.

### 8.1 வத்திக்கானின் சந்தேகமும் பண்பாட்டு மயமாக்குதலுக்கு 3 வருட அனுபவ அனுமதியும்

ஆரம்பத்தில் சங்கம் ஐரோப்பியர் அல்லாத கிறிஸ்தவர்களின் இனப் பண்பாட்டு வேற்றுமைகளை புரிந்து செய்த மாற்றங்களையிட்டு மகிழ்ச்சியுடன் வரவேற்றோம். ஆனால் பண்பாட்டு மயமாக்குதலில் அபாயமான அல்லது கிறிஸ்தவ விசுவாச கோட்பாடுகளுக்கு முரணானவைகளும், தமிழ் கிறீஸ்தவத்தினுள் கலந்து விடுமோ என்ற சந்தேகம் எம்மில் சிலருக்கும், வத்திக்கான் அதிகாரிகள் பலருக்கும் ஏற்பட்டது.

வரலாற்றிலே பல நூற்றாண்டுகட்கு முன்பே, சீனாவிற்கு மறைபரப்பாளராகச் சென்ற மத்தேயோ றிச்சி (Mateo Ricci) என்ற இயேசு சபைக் குரு, சீனத்திய சூழலுக்கொப்ப சில மாற்றங்களை செய்ய முயன்றார். ஆனால் அம்முயற்சிகள் உரோமை தலைமை பீடத்தினால் ஆபத்தானவை என தடை செய்யப்பட்டன. ஆகை யினால் இம்முறை உரோமைத் தலைமைத்துவம், இந்த மாற்றங்களை மிக உன்னிப்பாகக் கரிசனையுடன் கவனித்தது. தமிழ்க் கிறிஸ் தவத்தின் முயற்சிகளை சந்தேகக் கண்களுடன் பார்த்து வந்தது. மாறுபட்ட மதக்கொள்கைகள் கலந்துவிடும் (Syncretism) என்ற சந்தேகத்தின் காரணமாக, தமிழ் ஆயர்களினால் பிரேரிக்கப்பட்ட மாற்றங்களை மூன்று வருடங்கள் மாத்திரம் - ஒரு அனுபவகாலம் - (experimental years) என்று சொல்லி, உத்தரவு கொடுத்தது. பின்னர் தமிழ் ஆயர்களின் பொறுப்பில் அம்மாற்றங்களை விட்டது.

அதன் காரணமாகத் தமிழ்த் திருஅவைகள் தங்களுடைய வழிபாடுகள் கொண்டாட்டங்களில், திருவிழாக்களில், தமிழில் இறை வார்த்தையையும், தமிழ் சங்கீதம், அடையாளங்களுடனும் ஆர்வத் துடனும் செய்தனர்.

இருந்தும் 2 ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு, பண்பாட்டு மயமாக்குதல் எவ்விதமாக, எவ்வளவிற்கு எமது மற்றைய முக்கிய பணிகளைப் பின்தள்ளி விட்டன என்ற வினாவை எழுப்புவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சீர்திருத்த முயற்சிக்கு முக்கியம். எவ்வளவிற்கு எம்முடைய சூழ லில் தமிழ்த் திருஅவைகளை ஓர் உண்மையான கிறிஸ்துவின் ஒளியாக அல்லது உப்பாக மக்களின் மத்தியிலே செயற்படு கின்றதைப் பின்தள்ளி விட்டன.

## 8.2 பண்பாட்டு மயமாக்குதலின் போர்வையில் நடந்ததென்ன?

2ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு, நாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாவற்றையும் இன்றையத் தேவைகளின் பார்வையில் நியாயப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

தமிழ் மொழியிலேயும், வழிபாட்டு முறைகளிலேயும் நடந்த மாற்றங்களை மேலே வரவேற்றோம். ஆனால் கிறிஸ்தவத்திற்கென்று, அதன் தனித்துவ நற்செய்தி அடிப்படையிலும், அது ஓர் உலக மறையாக வளர்து வந்த நிகழ்வுகளையும், மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

பெரும்பான்மையான சைவமதத் தமிழர்களின் ஆலயங்க ளுக்கும் கிறிஸ்துவ ஆலயங்களுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை மேலே 4.5, 4.6ல் விளக்கியிருந்தேன். கிறிஸ்தவ ஆலயங்கள் இறைவனால் கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தியவைகளை, விவிலிய வார்த்தையில் கேட்டு விளக்கத்துடன் உள்வாஙகவும், பாஸ்க்கா மறைபொருளை உரிய வணக்கத்துடன், குருவும் மக்களும் கூட்டாக கொண்டாடி பகிர்வதற்காகவுமே அமைக்கப்படுகின்றது.

ஆலயங்களுக்குள்ளேயே நடக்கும் சடங்குகளை, செபங்கள் பாடல்களை நன்றாகத் தமிழ் மொழியிலேயும், விசேடசமாக பக்கவாத்தியங்களுடனும் வளமூட்டி செய்கின்றோம். பக்க வாத்தி யங்களின் பகுதியையும், வரவேற்பு, நன்றி கூறும் சடங்குகளையும் மிகைப்படுத்தலாகாது. சயிக்கினைகளைத் தமிழ் முறைப்படி மாற்றியிருக்கின்றோம். மாலை போட்டு, பொன்னாடை போர்த்து, பொட்டிட்டு, நடன வரவேற்புடன் அழகாகச் செய்கின்றோம். ஆனால் இவைகள் அதிக நேரத்தையும் கவனத்தையும் ஈர்த்து, கிறிஸ்தவத் தின் மையப்பொருளான இறைவார்த்தையின் முக்கியத்துவத்தையும் திருப்பலியின் முக்கியத்துவத்தையும் சற்றுப் பின்தள்ளி இருக்கின்றது.

சுருங்கக் கூறினால் - வழிபாட்டின் பொருளையும் பங்குபற்று வோரின் நலனையும் பிரதானமாகக் கருதி நடத்தப்படும் வழிபாட்டிற்கு பொறுப்பாக தலைமை வகிப்பது குருவே; உதவியாளர்கள் ஒவ்வொருவரும் தன்னிச்சையாக தனது பாகத்தை மாத்திரம மிகைப்படுத்துவது தவறு.

வழிபாடுகளை ஒழுங்கு படுத்துவதிற்கென்று மறைமாவட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உரோமை அதிகார பீடத்தி னால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குகளை மாத்திரம் அணுவணுவாக கடைப்பிடித்தால் போதாது. எமது நலன் கருதி பண்பாட்டு மயமாக்குதலை, தமிழ் தலைவர்கள் பொறுப்பில் விட்டிருக்கிறார்கள். அதனால் வழிபாட்டை ஆயத்தம் செயபவர்கள, தங்கள் பொறுப்புகளை உரிய முறையில், வழிபாட்டின் மையப் பொருளை மழுங்கடிக்க விடாது இணைக்க வேண்டும்.

இவைகளைத் தெளிவுபடுத்த, இயேசுவின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை பற்றி சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

## 8.3 போதகர் இயேசு, சினத்துடன் சீறி, ஆலயப் பெருவிழா ஆயத்தங்களைச் சிதறடிக்கின்றார் (யோவான் 2: 13-22)

யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்த தால் இயேசு எருசலேமிற்குச் சென்றார்.

இறைவன் யூதமக்களை அடிமைத்தனங்களிலிருந்து விடுதலைக்கு நீண்ட பயணத்தினூடாக இட்டுச் சென்றார்.

வனாந்திரத்தினூடான விடுதலைப் பயணத்தின்போது பல அற்புதங்களையும் படிப்பினைகளையும் கொடுத்து, அம்மக்களைத் தம் மக்களாகவும், தாமே உண்மையான கடவுளென்றும் மீண்டும் மீண்டும் கற்பித்தார். பொய்த் தேவர்களையும் விக்கிரக ஆராதனைகளையும் கடுமையாகக் கண்டித்தார்.

இஸ்ரவேலர் உண்மையான ஒரே கடவுளை வழிபடவும், தமது அற்புதங்கள் நிறைந்த விடுதலை நிகழ்வுகளை நினைவுகூரவும், விழாக்கொண்டாடவும் எருசலேமில் ஆலயம் அமைத்தார்கள். அங்கு விடுதலை நினைவுகூரும் விழாவைப் பாஸ்கா விழாவாகக் கொண்டாடினர்.

ஆனால் இவ்விழாவின் சடங்குகள் பலவித மாற்றங்களைப் படிப்படியாகக் கண்டன. இதன் காரணமாக விடுதலை விழாவின் மையப் பொருள் மழுங்கடிக்கபட்டது.

இயேசு, இவற்றைக் கண்டித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய மேசைகளைப் புரட்டிப் பணப் பெட்டிகளையும் தூக்கி எறிந்து உரத்த குரலில் - புனிதமான என் தந்தையின் இல்லத்தை மாசுபடுத்தாதீர்! என்றார்.

இயேசு ஜெருசலேம் தேவாலயத்தின் உள்ளே ஏன் இவ்வளவு சினங்கொண்டார்? ஏன் சிதறடித்தார்? ஏன் அட்டகாசம் பண்ணினார்? என்ற கேள்விகளை நாம் பார்க்கும்பொழுது, பல பொருத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள் எழுகின்றன.

இரக்கம் நிறைந்த இறைவனின் மகன் இயேசு, அன்பு நிறைந்த அந்த இயேசு, ஏழைகள் மட்டிலே, துன்பப்படுப வர்கள் மட்டிலே, பார்வையற்றவர்கள், பேசமுடியாதவர்கள், பலவிதமான உபத்திரங்களுக்கு உள்ளாகி வேதனைப்படு கிறவர்களுக்கு ஆறுதல் கொடுப்பவர்; அவர்களைக் குணமாக்கினவர். இரக்கம் காட்டியவர். அன்பு செய்தவர். அத்தகைய ஒரு இயேசு, இந்த ஜெருசலேம் தேவாலயத் திற்குள்ளே, இவ்வளவு சினங்கொண்டு எல்லாவற்றையும் சிதறடித்து, மேசைகளைப் புரட்டி எறிந்து, மக்களைத் துரத்தி ஏன் இவ்வளவு அட்டகாசம் பண்ணினார்?

இதற்குள் ஆழமான கருத்தொன்று இருக்கின்றது. என்ன வென்றால் இஸ்ரவேல் மக்கள் எகிப்தியரின் அடிமைத்த னத்திலிருந்து இறைவனால் விடுவிக்கப்பட்டார்கள். விடுதலை அளிக்கும் இறைவன் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்து, அவர்களை விடுதலைப் பயணத்திலே மோயீசனின் தலைமைத்துவத்திலே நடத்திச் சென்றார்.

அந்த விடுதலையடைந்த யூத சமூகம், ஜெருசலேம் தேவாலயத்தை தமது விடுதலையின் நினைவாகக் பெருமையுடன் கட்டியெழுப்பி, அந்த ஜெருசலேம் தேவாலயத்தில்தான், தங்களை மீட்ட இறைவன் இருக்கின்றார், என்ற உன்னத சிந்தனையுடன், வாழ்ந்தார்கள். யூதமக்கள் அனைவருக்கும் ஜெருசலேம் தேவாலயம், இந்த உலகத்திலே இறைவனின் பிரசன்னம் என்றாற்போல அவர்கள் அங்கே கூடுவார்கள். தங்களுடைய பெரிய விடுதலையை நினைவு கூருவதற்கு, பாஸ்கா விழாவை மிகப்பெரும் விழாவாகக் கொண்டாடுவார்கள். இதுதான் யூதர்களுடைய மிகமிகப் பெரிய விழா.

அப்படியான ஒரு விழாவிற்குத்தான், ஒவ்வொரு வருடமும், இயேசுவும் பெற்றோர் உறவினருடன் சென்று வந்தவர். இவ்வருடமும் அங்கே வளமைபோல் செல்கின்றார். ஆனால் கடந்த காலத்தில் அவ்வாலயத்திற்குள் நடப்பனவற்றை கூர்மையாக அவதானித்து, தலைவர்களுடனும் விவாதித்த வர், இவ்வருடம் தமது பாஸக்கா நிகழ்வுக்கு முன்பதாக யூத மக்களின் மிகப் புனிதமான ஆலயத்தை பற்றிய உண்மையை விளக்கும் நோக்கத்துடன் செல்லுகின்றார்.

புனிதமான நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு திருவிழா, புனிதமாக மீட்கப்பட்ட மக்கள் நினைவாகக் கட்டப்பட்ட ஒரு தேவாலயம்! இந்தப் பெரிய பரந்த தேவாலயத்திற்குள்ளே நடக்கும் அந்த நன்றிப் பாஸ்கா விழாவை மக்கள் கொண்டாட வருகின்றார்கள். ஆனால் பல ஆண்டுகளின் பின் அந்தத் திருவிழாவின் கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி, நோக்கங்கள் மறைந்து, அவர்கள் அங்கு செய்யவேண்டிய நன்றி உணர்வுகளைத் தெரிவிக்காது, அல்லது நன்றிப் பலிகளைச் செலுத்தாது, அவர்கள் அந்தத் திருவிழாவை வேறொரு பண்டிகை யாக மாற்றி, அங்கே கடைகளை நிறுவி, பல வித விற்பனை செய்து, பணம் பரிமாறி,அதாவது சந்தைகளைப் பெருக்கி, பிழையான வழியிலே நடந்துகொண்டிருந்தார்கள். ஆகையினால்தான் இயேசு தெய்வீக துணிவுடன், கையிற்றைப் பின்னி அவர்கள் எல்லோரையும் அடித்து விரட்டி, அட்டகாசம் செய்து, மேசைகளை விழுத்தி, - **புனிதமான என் தந்தையின் இல்லத்தை மாசுபடுத்தாதீர்கள்** -என்று கூறுகின்றார்.

இயேசு சினங்கொண்டு சாட்டை பின்னி மக்களைச் சிதறடித்த இந்தச் சம்பவத்தின் பின்னணியிலே, இன்றைய இறை மக்களாகிய நாங்கள், ஆயர்கள் குருக்கள் துறவிகள் வழிபாடு நடத்துபவர்கள் ஆலயத்தைப் பராமரிப்பவர் ஆகிய அனைவரும், பல கேள்விகளை எழுப்பவேண்டி இருக்கின்றது.

இன்றைக்கு இயேசு எங்கள் மத்தியிலே தோன்றுவாராக இருந்தால், தம்முடைய சீடர்கள், எப்படி ஆலயத்தை அமைக் கின்றார்கள், என்ன நோக்கத்திற்காக செய்கின்றார்கள் என்றும், அங்கே நடந்தேறும் சீடர்களின் கூட்டங்கள், குருக்கள் தலைமையில் நடைபெறும் வழிபாடுகள், திரு விழாக்கள் அவற்றின் வடிவங்களைப் பற்றி, அவைகளை தீர்மானிக்கும் நோக்கங்களை பற்றி, இயேசு என்னத்தைக் கூறுவார்.

கிறிஸ்தவ ஆலயங்களின் பொருளென்ன? நோக்கமென்ன? யூத மக்களின் ஜெருசலேம் ஆலயத்தை, உரிமையுடன் - **என் பிதாவின் வீடு** - என்று அழைத்த இயேசு, தன்னுடைய இன்றைய சீடர்களின் ஆலயத்தை பற்றி என்ன கூறுவார்?

எங்கள் வழியாகவும் உண்மையாகவும் வாழ்வாகவும் மனுவுரு எடுத்து வந்த இறைமகன் இயேசு, மனித வாழ்விற்கும் மரணத்திற்கும் இடையிலேயுள்ள தொடர்பை விளக்கி, எங்களுக்கு மரணத்திற் கப்பால் நித்தியவாழ்வு உண்டென்றும், அந்தத் திசையிலே பயணம் செய்ய எங்களுக்கு ஏதுவாக வழிகாட்டியாக, இரண்டு முக்கிய காரியங்களை செய்தார். இறைவனுடைய நற்செய்தியை வார்த்தை யாகக் கொடுத்து, அதை வாழ்வில் கடைப்பிடிக்க சக்தியாக தமது பலி விருந்தான நற்கருணையையும் கொடுத்தார். ஆகையால் இன்று தமது சீடர்கள் தமது வாழ்க்கைக்காக, ஆலயங்களை கட்டி நடத்தும் பொழுது, அவைகளின் நோக்கம், நடைமுறைகள் எப்படியாய் இருக்க வேண்டும்?

தமிழர்களின் பண்பாட்டிலே ஒரு மதசார்பான உணர்வு உண்டென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து - சைவ பின்னணியின் காரணமாக, எப்படி ஆலயங்கள் கட்டப் படுவது, பராமரிக்கப்படுவது, உரிமைகள் கோருவது இவைகளை மேலே சுருக்கமாக கூறியிருக்கிறேன். பாரம்பரிய பழக்கவழக்கங்கள் சிந்தனை முறைகளிலிருந்து மாறுவது தமிழ் கறிஸ்தவர்களுக்கு கடினம். ஆனால் கிறிஸதவ சாரம்சத்திற்கேற்ப எமது ஆலயங்களைப் பற்றிய பார்வையும் அணுகுமுறையும மாற்றம் வேண்டி நிற்கினறது.

இந்த இயேசு, இன்றைக்கு நாங்கள் நடத்திக்கொண்டிருக்கும் எங்களுடைய ஆலய வைபவங்களைப் பற்றி - எங்களுடைய ஆலயத் திருவிழாக்களைக் கொண்டாடும் முறைகளைப் பற்றி அவர் எதைக் கூறுவார்.

நாங்கள் பல பல மாற்றங்களைச் செய்து முன்னேறி யிருக்கின்றோம். 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின்பு எங்களுடைய வழிபாடுகள் - வார்த்தை வழிபாடும் நற்கருணை விருந்தும் - தமிழிலே முழுமையாக நடைபெறுகின்றன. மக்கள் விளங்கக்கூடிய விதமாக நடைபெறுகின்றன. மக்களுடைய பங்குபற்றுதலுடன் நடைபெறுகின்றன. மக்களும் குருவும் சேர்ந்து கூட்டுப்பலியாக ஒப்புக்கொடுக்கின்றோம். நல்லது. அதற்கு உகந்த பாடல்களைத் தமிழிலே அழகாகப் பாடுகின்றோம் எங்களுடைய கலை கலாசாரத் திற்கு அமைய அதற்கு இசைய நாங்கள் எத்தனையோ அழகான காரியங்களைச் செய்கின்றோம்.

ஆனால் அவைகள் மத்தியிலும் நாங்கள் ஒரு வினாவை எழுப்ப வேண்டும். நாங்கள் செய்து கொண்டிருக்கும் இந்த மாற்றங்கள், எங்கள் கரிசனைகள் சிலவேளைகளிலே எங்கள் வழிபாட்டின் மையப்பொருளாகிய வார்த்தையையும் அந்த நற் கருணைப் பகிர்வையும் மழுங்கடிப்பதாக இருக்கின்றனவா என்பதைக் கேட்க வேண்டும். சிலவேளைகளில் நாங்கள் பண்பாட்டு மயமாக் குதல் என்ற போர்வையில் அளவுக்கு மிஞ்சிய விதமாக எங்களு டைய கவனத்தை கரிசனையை - பாத்திரங்களிலேயும் அதற்குக் கீழுள்ள அலங்காரங்களிலும் பக்க வாத்தியங்களிலேயும் கமராக் களிலேயும் செலவழித்துவிட்டு, அந்த மையப்பொருளான ஆண்ட வருடைய வார்த்தைக்கும் நற்கருணைக்கும் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுகின்றோம். ஆகையினால்தான் நாங்களும் கவனமாக இருக்கவேண்டும்.

எங்களுடைய திருச்சபையின் சாராம்சத்தை - கிறீஸ்து கொண்டு வந்த அந்த இரண்டு செல்வங்களையும், அதாவது அவருடைய வார்த்தையையும் அவர் எங்களுக்காக அர்ப்பணித்த அந்த உடல் இரத்தத்தையும் - நாங்கள் மழுங்கடிக்காது, எங்களுடைய வழிபாடுகளை வழிபாடுகளாக இறைவனை மைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கொண்ட வழிபாடுகளாக, பொருட்களில் அல்ல அலங்காரஙகளில் அல்ல பக்கவாத்தியங்களில் அல்ல, மாலைகள் பொன்னாடைகள் சுற்றுப்பிரகாரங்களில் அல்ல, அவைகளுக்கு அளவளவாக இடங்கொடுத்து, மையப்பொருளைத்தான் சிறப்பிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் உரிய நேரம் கொடுத்து இறைவனின் செய்தியைத் தெளிவாக மக்களுக்குப் பகிர்ந்துகொள்ள வேண்டும், நற்கருணை விருந்தையும், பயபக்தியுடன் அதற்குரிய வணக்கத்துடன் செய்ய நாங்கள் முன்வரவேண்டும்.

ஆகையினால் தான் இன்று எங்களுடைய கோவிலில் பெருநாள் திருவிழாக்களில் எத்தனையோ விதமான சடங்குகள் வைபவங்கள் கொண்டாட்டங்கள் நடக்கின்ற வேளையில் நாமும் அவைகளையிட்டு கேள்வி எழுப்புகின்றோம்.

இந்தத் திருவிழாக்கள் எங்களுடைய தமிழ் மக்களுடைய தமிழ்ப்பண்பாட்டு மயத்திலே அது ஒரு பெருவிழாவாக, மக்களின் ஒரு விழாவாக, இறைவனை மையமாகக் கொண்டு அல்லாமல், குருக்களையும் மக்களையும் போற்றும் விழாவாக, அவர்களுக் குள்ளே பண்டமாற்றம் செய்யும் வியாபார விழாக்களாக மாறாதிருக்க நாங்கள் மிகவும் கவனமாயிருந்து எத்தனையோ கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து தவிர்க்க வேண்டியவைகளைத் தவிர்த்து முக்கியமானவைகளை சமநிலைக்குக் கொண்டு வந்து திருவிழாக்களை நாங்கள் திருவிழாக்களாகக் கொண்டாட வேண்டும்.

நாங்கள் ஏதோ மதுபானம் குடித்தவர்கள் நேராக நடக்க முடியாது அங்குமிங்கும் தள்ளாடிச் செல்வதுபோல, சில வேளைகளில் சென்று கொண்டிருக்கலாம் எங்களுடைய வரலாற்றிலே. ஆனால் ஒரு குடிகாரன் என்னவிதமாகத் தள்ளாடினாலும் முன்சென்று பின்வந்து நடைபோட்டு தள்ளாடினாலும், அவன் தன்னுடைய திசையை இழக்காது தனது வீடு, குடும்பம் இருக்கும் திசைநோக்கிச் செல்வது போன்று, மக்களும் தமது வாழ்க்கையின் இலட்சியத்தை நோக்கி, சரியான திசைநோக்கிச் செல்லவேண்டும்.

இவ்வுலக சமூக அரசியல் வாழ்விலும், மனிதன் தனித்துவமாக, மதிப்புடன் உரிமைகளுடன் தனது உண்மையான மதிப்பிலே வாழவேண்டும் என்ற தாகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். தன்னலத்திற்காக அல்ல, எங்களுடைய இனத்தின் உண்மையான விடுதலைக்காக. உண்மையான நீதியுடன் வாழவே நாங்கள் விரும்புகின்றோம். ஆகையினால் நாங்கள் என்னதான் நடந்தாலும் எந்த ஆரியர்தான் கூத்தாடினாலும், எங்களுடைய காரியத்திலேயே கண்ணாயிருக்க வேண்டும். ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு என்று எமது மூதாதையர் கூறினபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைப் பற்றிய காரியத்திலே நாங்கள் கண்ணாயிருக்க வேண்டும்.

8.4 பண்பாட்டு மயமாக்குதலை மிகைப்படுத்தி, வாழ்வின் மற்றைய கடமைகளைக் கைவிட்டு விட்டோமா?

சங்கத்தின் இரு முக்கிய அறிவுரைகளைத் தமிழக் கிறீஸ்த வர்களும் திருஅவைகளும் போதிய ஆர்வத்துடன் வரவேற்கவில்லை

2ஆம் வத்திக்கான் சங்கம் மற்றைய சங்கங்கள் போல் அல்லாது, முதற் தடவையாக முழு உலகத் திரு அவையின் கூட்டமாக, தனது கவனத்தை, பரந்த தூர நோக்குடன் புதிய உலகின் மத கலாசார சமூக அநீதிகள் அனைத்தையும் உற்று நோக்கியது. இதன் காரணமாக எல்லா ஏடுகளும், விசேடமாக திருஅவை பற்றிய - மக்களின் ஒளி (lumen gentium) இன்றைய உலகில் திரு அவை (gaudium et spes), பிற மதங்களுடன் உறவு

*இன்றைய உலகில்* (nostra aetatae) ஏடுகள், விசேடமாக பல மதங்களின் தாயக மான ஆசியாவிற்கு, மிக பொருத்தமான, பிறமத, சமூக பிரச்சி னைகளையும் உணர்ந்து, இவ்வேடுகள் வழியாக அறிவுரைகளை வழங்கியது.

இருந்தும் சங்கத்தினால் தூர நோக்குடனும், எமது சூழலுக்கேற்ற பொருத்தமான அறிவுரைகளை ஏராளமாக வழங்கியிருந்தும், தமிழ்த் திருஅவைகள ஏன் அவைகளை வரவேற்று பயன்படுத்தவில்லை? இன்றும் சரியாக வரவேற்ப தாயில்லை. காரணம் என்னவென்று ஆராய்ந்தால் ஒன்று தெளிவாகின்றது.

8.5 உலக சூழலின் சோகம் நிறைந்த யதார்த்தங்களுக்கும் உண்மைகளுக்கும் தமிழ்த் திருஅவைகள் அந்நியமாக வளர்ந்து வந்திருக்கின்றன.

எமது திருஅவைகள் கடந்த காலத்தில் பிற மதத்திற்கு எதிரிகளாகவும், சூழலுக்கு அந்நியப்படுத்தப் பட்டவர்களா கவும் வாழ்ந்திருக்கிறோம். ஆரம்பத்தில் நாம் ஐரோப்பிய அந்நிய தன்மை யினால், எம்மைத் தனிமைப்படுத்தி வெளி நாட்டு உதவியுடனும் பண உதவியுடனும் வாழ்ந்து வந்தோம். எமது ஆலயங்களும் வழிபாடுகளும் கிறிஸ்தவர்களின் குழும வாழ்வும் மதில்களுக்குள்ளே மறைந்து செயற்படுவது போலாயிற்று. அதனால் மக்களுடைய வாழ்வையும், அவர்களுடைய பிரச்சினைகளையும், அவர்களுடைய ஏக்கங்களையும், அழுகைக் குரல்களையும் கேட்டு, அவைகளுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளைச் செய்ய இயலாத அமைப்புக்களாக இருந்து வந்திருக்கினறோம்.

மனிதர்களுடைய வாழ்வாதார, பொருளாதார, சமூக பிரச்சினைகளுக்கு உதவி தேடுவதை, அரசியல் என்று போர்வையிட்டு விலகி நடந்தோம். சமூக சவால்களைச் சந்திக்காது, விலக்கி நடந்தோம். சிறு பான்மையாகவும் அந்நிய மதமாகவும், பெரும்பான்மை அரசாங்கத்தின் தயவிலே வாழ்பவர்களாக, நடந்திருக்கிறோம்.

ஐரோப்பியத் திரு அவைகளின் உதவியுடன் மனிதபிமான உதவிகளையே செய்தோம். எமது ஐரோப்பிய கிறிஸ்தவ சகோதரர்களின் உதவிகளைப் பெற்று, எம்மத்தியில் உள்ள வறியோர்க்கு உதவினோம். கறிட்டாஸ், மிசெறெயோர் ( caritas, misereor) போன்ற மேல் நாட்டு கிறீஸ்தவ அமைப்புகளின் உதவிகளைப் பெற்று பகிர்ந்தளிக்கும் ஸ்தாபனங்களாக செடெக், கியுடெக் (SEDEC, HUDEC) செயறபட்டன. இந்த உதவி உள்ளவர் இல்லாதோர்க்கு குனிந்து பிச்சை போடுவது போலாகும். இதைச் செங்குத்தான தோழமை (vertical solidarity) என்போம். உண்மையில் எங்களிடமிருந்து வேண்டப்படுவது சமாந்திரமான, சகோதரத்துவமான, தோழமை ஆகும். (horizontal brotherly solidarity)

**8.6 வறுமையிலும் துன்பத்திலும் மீட்புப் பணி செய்த இயேசுவைப் போல், திரு அவைகளும் நடந்து கொள்ள வேண்டும்.**

2ஆம் வத்திக்கான் சங்கம் முக்கிய ஏடுகளில் விளங்கப் படுத்தியபடி, விசேடமாக திரு அவையைப் பற்றிய -மக்களின் ஒளி - என்ற ஏட்டில், 8ஆம் இல. ஊக்குவித்தபடி, இறைமகன் மனித மீட்பிற்காக, மனிதனானதுபோல்,

திருஅவைகளும் இவ்வுலகில் சகல சூழ்நிலை யதார்த்தங்களிலும் உருவெடுக்க வேண்டும். ***கிறீஸ்து வறுமையிலும் துன்பத்திலும் மீட்பு பணியை செய்து முடித்தார். அதுபோல் மீட்பின் பலன்களை மனிதருக்கு வழங்க, திருஅவையும் அதே பாதையில் அடியெடுத்து வைக்கவே அழைக்கப் பெறுகிறது*** . (Just as God became man through incarnation, so the church is called to in-carnate itslf in the realities of the context) சூழலின் உண்மை நிலையில் பிரசன்னமாயிருக்கும்படி அழைக்கப்படுகின்றது.

உலகத்தில் மனித சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினை களை நன்றாகப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டுமாயின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ச்சக்திகளை இனங்கண்டு, அவைகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டும். முதலில் மதங்கள் ஒன்றாக இணைந்து அம்முயற்சியில் ஈடுபட வேண்டும். (without inter-religious collaboration, one cannot combat social injustices and evils like poverty and oppression) பன் மதப் புரிந்துணர்வும் ஒத்துழைப்புமின்றி சமூகத்திலுள்ள தீய சக்திகளை, அநீதி, வறுமை ,இவைகளை ஒழிக்க முடியாது.

*(இக் காரணங்களைக் கொண்டுதான், நான் 1986-1996 வரை யாழ்ப்பாணத்தில் மனித முன்னேற்றத்திற்காகப் பல் மத ஒத்துழைப்பு முயற்சியை மேற்கொண்டேன். நற்சமூக நடு நிலையம்* ***( Centre for Better Society)*** *என்ற தலைப்பில், கத்தோலிக்க ஆயர் தியோகுபிள்ளை தென் இந்திய திருச்சபை ஆயர் அம்பலவானர், நல்லூர் நல்லை ஆதீன குருக்கள், ஒஸ்மானிய கல்லூரி அதிபர் - நான்கு மத அதிபர்களை போசகர்களாகவும், என் தலைமையிலும் நடாத்தினேன். கல்வி, சுகாதாரம், பார்வையற்றோர், போன்ற பல துறைகளில் யாழ் பல்கலைக்கழக உதவியுடன் விழிப்புணர்வும், உதவியும், சேர்த்து உதவினோம். புதிய உலகம் என்ற சஞ்சிகையையும் 3 மாதத்திற்கு ஒரு முறை வெளியிட்டேன்)*

8.7 திருச்சபையை சீர் திருத்துவதற்கு அர்த்தமும் பொருத்தமுமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

2ஆம் வத்திக்கான் சங்கம் ஏவிய பண்பாட்டு மயமாக்கு தலை பற்றிய புதுப்பித்தலுக்கு இரண்டு இறகுகள் உண்டு. ஒன்று வார்த்தையிலும், வழிபாட்டிலும், பண்பாட்டுமயமாக்குதல் மற்றது வழிபாட்டிற்கு ஏற்ற முறையில் அர்த்தமும் பொருத்தமுமான திருஅவையாகச் செயற்படுவதுமாகும்.

தமிழ் மக்களுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மொழி, கலை, கலாசாரச் செல்வங்களைப் பயன்படுத்தி அதன் செய்தியை நல்ல முறையில் உள்வாங்குவது நீதியும் கடமையும் ஆகும். கிறீஸ்தவர்களாகிய எங்களுக்கு மையப் பொருள் இரண்டு: 1) இறைவனின் வார்த்தை 2) இயேசுக் கிறிஸ்து எங்கள் மீட்பிற்காக ஒப்புக்கொடுத்த பலியின் நினைவாகப் பகிர்ந்துகொண்ட நற்கருணை விருந்து. இந்த இரண்டும்தான் எங்கள் பண்பாட்டு மயமாக்கலின் மையமாக எப்போதும் இருக்கவேண்டும்.

ஆனால் எமது தமிழ் மக்களைக் காலாகாலமாக சூழ்ந்திருக்கும் பாவக் கேடுகளின் சவால்கள் துன்பங்கள் மத்தியில் கிறீஸ்துவின ஒளியாகவும் உப்பாகவும் இருந்து விடுதலையைக் கொண்டு செல்வது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.8 தமிழ்த் திருஅவைகள் தமிழ் மக்கள் மத்தியில் ஒளியாகவும் உப்பாகவும் செயற்பட வேண்டும்.

வார்த்தையிலும் வழிபாட்டிலும் எம்மைப் பெலப் படுத்திக் கொண்டு, ஆலய மதில்களுக்கப்பால் சென்று, மனிதரையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் சந்திக்க வேண்டும்

எங்கள் சூழலிலே, எங்கள் சவால்களின் மத்தியிலே, அந்த இயேசுக்கிறிஸ்துவை ஒளியாகவும், உப்பாகவும், பிரசன்னப் படுத்த வேண்டும். ஆகையினால் பண்பாட்டு மயமாக்குதலுடன் நாங்கள் நின்றுவிடக்கூடாது.

2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபையைப் பற்றிய ஏட்டை மிகப் பொருத்தமான முறையில் மக்களின் ஒளி என்று தலைப்பிட்டிருந்தது. திருஅவை மனுக்குலத்திற்கு ஒரு தனிப்பெரும் ஒளியாக விளங்கவேண்டும் என்ற விருப்பம் 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒளி சிறியதாக இருந்தாலும், அதன் சக்தி சகல திசைகளி லும் பரவி உண்மையை வெளிப்படுத்தி, உண்மையைத் தெளிவுபடுத்திக் காட்டும். அந்த ஒளி இருளை அகற்றும்; இருளை வெல்லும்; அறியாமையை அகற்றும்; உண்மையை நிலைநாட்டும்; அநீதியை ஒழிக்கும்; நீதியை நிலைநாட்டும். இதுதான் கிறிஸ்துவின் பிரசன்னம். இதைத்தான் திருஅவைகளும் தங்கள் தங்கள் சூழலிலே செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். இந்தப் பணியை நாங்கள் எவ்வளவிற்குச் செய்திருக்கின்றோம் அல்லது எவ்வளவிற்கு செய்யப்படுகின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

ஏனென்றால் எங்களுடைய கிறிஸ்தவம் சிற்சில அமைப்பு மாற்றங்களைச் செய்தாலும் இன்னும் எவ்வளவோ மாற்றங்களைச் செய்தால்தான் அது கிறிஸ்துவின் ஒரு குழுமமாக, கிறிஸ்துவுக்குச் சாட்சியம் கொடுக்கும் சபையாக, கிறிஸ்துவைப்போல் ஒளி - சக்தி கொடுக்கும் சபையாகவும் இருக்க முடியும்.

இதே விதத்தில், கிறிஸ்து நானே உப்பு என்றார். எம் எல்லோருக்கும் உப்பைப் பற்றிய அனுபவம் நிறைய இருக்கின்றது. ஒரு சிறு அளவு உப்பு, முழு உணவின் சுவையை மாற்றுகின்றது. உணவிற்கு தேவையான பல பொருட்கள் இருந்தாலும், உப்பு இல்லையேல், சுவையற்ற உணவாகி விடுகின்றது. அத்துடன் இயேசு விண்ணரசு ஒரு கடுகு வித்துக்கு ஒத்தது என்றார். எமது சமுதாயம் பல விதத்தில் திறமையாகவும் அழகாகவும் இருக்கலாம். ஆனால் எமது சமுதாயத்தில் மனிதர்கள் மனிதர்களாக, இறைவனின் பிள்ளை களாக, சம உரிமை கொண்ட சகோதரர்களாக, சமாதானத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ நாங்கள் செய்ய வேண்டிய பணி, ஒளியைப் போலவும் உப்பை போலவும், வித்தை போலவும், மிக சிறிய, ஆனால் இறையரசை கட்டும் உன்னத பணிகள்.

**8.9 பிற மத சகோதரருடன் ஒன்றித்து, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அநீதிகளை எதிர்ப்பதிலும் செயற்படவேண்டும்.**

நான் பங்கெடுத்த ஆசியத் திருஅவை ஆயர்களின் இறையியலாளர் குழு ( Theological Advisory Committee of the FABC) 1986 ஆம் ஆண்டு தனது முதற் கவனத்தை இவ்விடயத்தின்மேல் செலுத்தியது. இக்குழு சர்வ மத உரையாடல் என்ற தலைப்பில் 6 அறிவுரைகளை வழங்கியிருந்தது.

நாம் தமிழர், கிறீஸதவர்களாக மாறுவதற்கு முன், இறைவன் எங்களை மனிதராக, அதிலும் தமிழராகப் படைத்தார். நாம் தமிழ் மனிதர்களாவதற்கு எமக்கு மொழி, கலை, கலாசாரம், அனைத்தும் இனாமாக இறைவனால் கொடுக்கப்பட்டவை. எமது முன்னோர் இயற்கையுடன் இணைந்து, இறைவனைத் தேடியவர்கள். தாங்கள் பெற்ற இறைவெளிப்படுத்தலகளை வெவ்வேறு விதத்தில் தனிஅனுபவமாகப் பெற்று உடன் தமிழர்களுடன் பகிர்ந்து, அவைகளின் அடிப்படையில், காண முடியாத சக்திகளுக்கு பயந்து பணிந்து நடக்க முயன்றனர். சிலர் விசேட அனுபவம் பெற்றவர் களாகத் தமது ஞானத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தினர். வழிபாடுகள் செய்தனர். இப்படியாக மதங்கள் வளர்ந்து, திரண்டு, இந்தியாவின் மக்கள் மத்தியில் இந்து மதம் பரவியது.

தமிழர் மத்தியில் இந்து மதம், சைவமாக இடம் பிடித்துள் ளது. இந்நிலையில்தான் கிறீஸ்தவத்தில் மாத்திரமே மீட்பு, என்று ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் தங்களுடைய விசுவாசத்தில் கூறியதை, தமிழர்கள், முழுமையாக நம்பி, கிறிஸதவர்களாகினர். அத்தோடு, இந்து சைவ மதங்களை பற்றி, ஐரோப்பியர் தங்கள் விசுவாசத்தில் கூறியவற்றை ஏற்று, சில தவறான வெறுப்புடன், இந்து சைவ மக்களை கணித்தனர்.

ஆனால் இன்று 2ஆம் வத்திக்கான் சங்கம், பிற மதங்களுக்கும் இரட்சணிய முக்கியத்துவம் இருக்கின்றது என்பதை ஏற்று விளக்கி இருக்கின்றது. ஆகையால் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்து சைவ மதத்திற்கு உரிய மதிப்பளித்து, தேவையற்ற சச்சரவுகள் வெறுப்புகளை விலக்கி, அவைகளுடன் தேவையான உறவுகளை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் முழுமனிதப் பிரச்சினைக ளுக்கும் முகங்கொடுக்க வேண்டுமென்று வத்திக்கான் சங்கம் விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எங்கு வாழ்கின்றோமோ, அங்கே இருக்கும் மதங்களின் சகோதரருடன் உறவு ஏற்படுத்தி, ஒன்றாக மனித சமூக பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் சார்பாக, அநீதிகளுக்கு எதிராக செயற்பட வேண்டுமென்றும், சங்கம் எமக்கு அறிவுறுத்துகின்றது.

இந்த பார்வையில்தான் நான் 1986-1996 ஆண்டுகளில் யாழ்ப்பாணம் 115, 4ம் குறுக்கு தெரு விதியில் நற்சமூக நடு நிலையத்தை 4 மதத் தலைவர்களின் அனுசரணையுடன் நடத்தினேன்.

தமிழ் கிறிஸ்தவர்கள் திரு அவைகளுக்குள்ளே செய்ய வேண்டிய புதுப்பித்தலுக்கான மாற்றங்களை பற்றிச் சிந்தித் தால் போதாது. மிக முக்கியமாக, எம்மை சூழ்ந்திருக்கும் தமிழ் சமுதாயத்தை முன்னேற்ற, மனித சமுதாய பணிகளில் எல்லோருடனும் இணைந்து செயல்பட வேண்டும்.

எல்லா மதங்களும் மனிதனின் நலனுக்காகவே!
மதங்களுக்காக மனிதரல்ல!
மனிதர்கள் உரிமைகள் பறிக்கபட்டு, அடிமைகளாக
ஒடுக்கபட்டு, அநீதியினால்
வறுமையில் துடிக்கும் பொழுது,
மதத் தலைவர்கள் இப் பிரச்சினைகளெல்லாம்
அரசியல் என்று மௌனத்தில் பதுங்குவது
கோழைகளின் சவான பாவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அத்தியாயம் 9*

# சமாளிக்கும் கிறிஸ்தவத்தை புதுப்பிக்க தமிழ் விடுதலை இறையியல் தோன்ற வேண்டும்

**9.1 மறைபரப்பாளர்கள் 16ஆம் நூற்றாண்டில் நாட்டிய ஐரோப்பிய திருஅவைகள் சுதேசிய வளர்ச்சி அடையத் தொடங்கின.**

16ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட அல்லது மறு நடுகை செய்யபட்ட ஐரோப்பிய திருஅவைகள் கடந்த நூற்றாண்டு களிலே, தமது சூழலின் பிரச்சினைகளுக்குத் தகுந்த பொருத்தமான முறையில் நடந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அதே நூற்றாண்டு களிலே ஆரம்பிக்க பட்ட இலத் தீன் அமெரிக்க, ஆபிரிக்க, திருஅவைகள், இந்த நூற்றாண் டிலே, 2ஆம் வத்திகான் சங்கத்தின் ஊக்குவிப்புடன் விடுதலை இறையியல்களை பிறப்பித்திருக்கின்ற நிலையில் தமிழ் கிறீஸ்தவம், ஏன் விடுதலை இறையியலுக்குத் தயங்குகின்றது, என்ற சிக்கலான வினாவை ஆராய்வோம்.

16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளிலே பரப்பப்பட்ட உரோமன் கத்தோலிக்கத் திருஅவை, தமிழர் மத்தியில் மாத்திரமல்ல, இலத்தீன் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும், அந்நிய மண்ணிலும் மறு நடுகை (transplantation) செய்யப்பட்டது. மேற்கத்திய நாட்டுத் திருஅவைகளைப்போலே இருந்ததன் காரணமாக, அந்தந்த நாடுகளின் தனிப்பட்ட பிரச்சினைகளிற்கு இளந் திருஅவைகள் முகங் கொடுக்க, பதில் கொடுக்க இயலாமல் இருந்தன.

திருஅவையின் மனிதாபிமானப் பணிகள் நன்றாக இருந்தாலும், அன்பு, இரக்கம், காருண்யம், அடிப்படையில் குருக்களும், துறவிகளும், நல்ல மனிதாபிமானப் பணிகளைச் செய்தாலும், அவர்களின் கருத்துமுறைகள், படிப்பினைகள், போதனைகள், இன்னும் அந்நிய நாடுகளின் உருவத்திலேயே இருந்தன.

இதன் காரணமாக, தென் அமெரிக்க நாட்டு மக்கள் வட அமெரிக்காவின் அடிமைகளாகத் தொடர்ந்தும் வாழ்ந்தனர்.

ஆபிரிக்காவிலும் அடிமைகள் வியாபாரம் தொடர்ந்தது, வெள்ளையர்களின் முதலாளித்துவ வியாபாரங்கள் தொடர்ந்தன. வெள்ளையரின் முதலாளித்துவ அநீதி முறைகளைத் திருஅவைகள் மௌனமாக ஏற்றுக் கொள்வது போல் இருந்தது.

அந்தந்த நாடுகளின் சுதேச நிலைமையை, பிரச்சினைகளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் மூல காரணங்களை உணர்ந்துகொள்ள தலைவர்களினால் முடியவில்லை. அவர்கள் ஸ்பானிய போர்த்துக்கல் நாடுகளிலிருந்து வந்த ஆயர்கள் குருக்கள் துறவியர். தமது பணிகளை தாய்நாட்டில் செய்தது போல் தொடர்ந்தும் செய்தனர்.

ஆனால் படிப்படியாக சுதேச குருக்களும், துறவிகளும், மண்ணின் மக்களாகக் கடந்த நூற்றாண்டில் அந்தந்த நாடுகளில் தோன்ற தொடங்கியதுடன், மக்களின் நிலை மைகள் கூடுதலாக அவதானிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டன.

படிப்படியாக தென் அமெரிக்க ஆயர்களும் குருக்கள் துறவிகளும், புத்துயிர் பெற்றவர்களாக மக்களுடைய அடிப்படை வாழ்வு பிரச்சினைகளைத், திருஅவைகளுக்குள் மேல் மட்டத்திலும் விவாதிக்கத் தொடங்கினர். அத்துடன் ஆயர் சங்கங்கள் தென் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் ஆரம்பிக்கபட்டு, உள்நாட்டு பிரச்சினைகளில் கூடிய கவனம் செலுத்த தொடங்கினர்.

## 9.2 2ஆம் வத். சங்கத்தில் தென் அமெரிக்க ஆயர்களின் தாக்கமும் விடுதலை இறையியல் தொடக்கமும்.

தென் அமெரிக்க கிறிஸ்த்தவர்கள் ஆலயத்திலும், வழிபாட்டிலும் கிறிஸ்தவத்தை பின்பற்றி விட்டு, சமூக அநீதிகள், வறுமை, ஒடுக்கு முறைகளிலே, துன்பத்தை அனுபவிக்கும் மக்களையிட்டு கரிசனையில்லாத போக்கை, சமாளிக்கும் கிறிஸ்தவத்தை நீண்ட காலம் தமிழ் மக்களைப் போல் ஏற்றுக் கொள்ளவில்லை.

மக்களின் துன்பம் நிறைந்த வாழ்வின் மத்தியில், தென் அமெரிக்க திரு அவைகள் கிறிஸ்துவின் ஒரு சபையாக இருப்பது, மிகவும் கடினமான சவாலாக இருந்தது. அங்கே இருந்து செயற்பட்ட குருக்கள், துறவிகள், தங்களுடைய திருச்சபையின் வாழ்விற்கும், தங்களைச் சூழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வுக்கும் இடையில் பெரிய முரண்பாடுகளைக் கண்டார்கள். மௌனமாய் இருப்பது கடினமாயிற்று. ஆகையினால்தான் இந்தக் கண்டத்தின் திருஅவைத் தலைவர்கள், குருக்கள் ஆயர்கள், மக்களின் நிலைமைகளை உணர்ந்தவர்களாக, உணர்ச்சிவசப்பட்டு விழித்தெழுந்தார்கள். மக்களுக்காக குரல் கொடுக்க திருச்சபையிலே ஒரு புரட்சியை ஆரம்பித்தது. இதற்கு உறுதுணையாக இரண்டு நிகழ்வுகள் நடந்தேறின.

1955ஆம் ஆண்டு தென் இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் ஒன்றாகக் கூடி தங்களுக்குள்ளே ஒரு ஆயர் சபையை உருவாக்கினர் (CELAM). இச்செயல் பல நூற்றாண்டுகளாக, திருஅவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய எல்லா தீர்மானங்களுக்கும் உரோமை தலைமை பீடத்தில் தங்கி இருப்பதை குறைத்தது. அதேநேரத்திலே அங்கே இருந்த குருக்களும் துறவிகளும் நிலைமை உணர்ந்தவர்களாக அங்கே நடக்கும் அநீதிகள், வன்முறைகள், அடிமைத்தனங்கள், இவை களுக்கு எதிராகக் குரல் எழுப்ப முன்வந்தனர்.

பெறு நாட்டைச் சேர்ந்த குஸ்ரர்வோ குட்டியெறஸ் (Gustavo Guttierez, Peru). லெயனோடா குலொவிஸ் பொவ் சகோதரர்கள் (Leonardo & Clodvis Boff brothers) நாட்டின் சுதேச இறையிலாளராக, மௌனமாயிருந்த திருஅவையை மெல்ல மெல்ல விழித்தெழச் செய்து, துன்பப்படும் மக்களின் சார்பாக, வறுமையில் உறைந்த, அநீதி அனுபவிக்கும், ஒடுக்கப்பட்ட, வன்முறைகளுக்கு ஆளான மக்கள் சார்பாகக் குரல்கொடுக்கத் தொடங்கினார்கள். இது அவர்க ளின் திரு அவையிலே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

இப்படித் திருஅவைத் தலைவர்கள், மக்கள் சார்பிலே குரல்கொடுத்து புரட்சியை ஏற்படுத்துவதை, உரோமன் திருஅவையின் தலைமைப்பீடம் ஏற்று கொள்ளவில்லை. சரியாக புரிந்து கொள்ள வில்லை, மிகவும் வேதனையைக் கொடுத்தது.

ஏனென்றால் உரோமைத் திருச்சபையின் கணிப்பின்படி, தென் அமெரிக்காவில் உள்ள திருஅவைகள் காலனித்துவ காலம் தொட்டு, பரம்பரையாகப் படிப்பித்து வந்த இறையியலைக் கைவிட்டு விட்டனர் என்றும், மக்கள் மத்தியில் இருக்கும் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு, மாக்சிய புரட்சி வழிகளை கையாளுகின்ற னர் என்றும் குற்றம் சாட்டினர். ஆனால் உண்மையில் மக்கள் அதே இறைவனைத்தான் மீண்டும் தமது சூழலில் விடுதலை அளிக்கும், இரட்சணியம் கொடுக்கும், இறைவனாக ஏற்றுக்கொண்டனர்.

இஸ்ரவேலருக்கு விடுதலையையும் மனித குலத்திற்கு இரட்சணியமும் கொடுத்த இயேசுவின் நற்செய்தியிலிருந்தே கிறிஸ்தவம் தொடங்கியது. ஆனால் உரோமையின் தலைமைத் துவத்தின் கீழ் வளர்ந்த திருஅவை அமைப்பு, இறைவன் தம்மை இஸ்ரவேல் மக்களின் விடுதலையில் வெளிப்படுத்தியதை மறந்தவர்களாக, செயற்பட்டது.

ஆனால் வத்திக்கான் சங்க காலத்திலேயே, தென் அமெரிக்க ஆயர்கள் தமது நாட்டு நிலைமைகளையும் பிரச்சினைகளையும் சங்கத்திற்கு வந்த முற்போக்கான ஆயர்களுக்கும் இறையியலாள ருக்கும் விளக்கியிருந்தனர். இவைகளை சங்க பிதாக்களும் இறையியலாளரும் கவனத்தில் எடுத்தனர். இவைகள் சங்கம் நடந்து கொண்டி ருக்கும் பொழுது பிறந்த ஏடுகளிலே தெளிவாக பிரதிபலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் சங்கம் முடிவதற்கு முன்பதாகவே, 1965ஆம் ஆண்டில், 40க்கு மேற்பட்ட ஆயர்கள் உரோமை கற்றகூம் (Catecomb) என்று அழைக்கப்படும் 1ஆம் நூற். கிறீஸ்தவர்கள் மறைவாக வாழ்ந்த இடத்திற்குச் சென்று, ஆயர்கள் தாங்கள் வறுமையில் வாழ்வோம், மக்களுக்காக வாழ்வோம் என ஒப்பந்தம் ( Catecomb-Pact) செய்து, தாங்கள் வத். சங்கத்துடன் சேர்ந்து, வறியவர்களின் திரு அவைகளாக செயற்படுவோம் என்று உடன்படிக்கை செய்தனர்.

*(2015 ஆம் ஆண்டு, 50 ஆண்டுகளின் பின் மீளவும் இவர்களில் சிலர் உரோமையில் கூடி ஒப்பந்தத்தை நினைவு கூர்ந்த மகாநாட்டில், உரை நிகழ்த்தும்படி என்னை அழைத்திருந்தனர். நான் 2ஆம் வத். சங்கத்தில் நேரடிப் பார்வையாளனாக இருந்த அனுபவங்களையும், ஓர் ஆசிய இறையியலாளரும் என்ற வகையில், கருத்துகளை அங்கு வழங்கினேன்.)*

ஆனால் புனித பாப்பரசர் 2ஆம் அருளப்ப சின்னப்பர், சங்க காலத்திலே பிற்போக்கான இறையியலாளராக செயல்பட்ட, ஜேர்மன் கருதினால் றாட்சிங்கரை, கத்தோலிக்க விசுவாச கோட்பாடுகளுக்கு பொறுப்பானவராக நியமித்தார் (Card. Ratzinger, Prefect of Congregation For Faith & Doctrine). அதனால் இவர் 1983ஆம் ஆண்டில், 2ஆம் வத். சங். முடிந்து 18 ஆண்டுகளுக்கு பின்பும், தென் அமெரிக்க விடுதலை இறையியலாளருக்கு எதிராக, தனது கண்டன அறிவிப்பை, (Instruction) வெளிப்படுத்தினார். இந்த விடுதலை இறையியல்கள் மாக்சிய கம்யூனிஸட் போக்கை கொண்டதென்று விமர்சித்தார். ஆனால் அதன் தாக்கம் தென் அமெரிக்க திருஅவைகளின் ஆர்வத்தை குறைக்கவில்லை.

சங்கம் முடிந்த உடனேயே, இலத்தீன் அமெரிக்கத் திரு அவைகளின் ஆயர்கள், இறையியலாளர்கள் தமது திருஅவைகளிலே புதிய அடிப்படை குழுமங்களையும், (Basic Christian Communities BCC) சமூக அநீதிகளுக்கெதிரான போராட்டங்களையும் ஊக்கப்படுத்தினர். புஎப்லா, மெடெலீன், (Puebla, Medellin) என்ற நகரங்களில் ஆயர் சங்கங்களை நடாத்தினர். குஸ்ராவோ குற்றி ஏறெஸ், லெயனாடோ பொவ், குலொட்விஸ் பொவ், யோண் சொப்றீனோ ( Gustavo Guttierez, Leonardo Boff, Clodvis Boff, Joan Sobrino) போன்ற இறையியலாளர்களின் விடுதலை இறையியல்களும், அவைக்குகந்த கிறீஸ்தவ அடிப்படை குழுமங்களும் முன் எடுத்துச் செல்லப்பட்டன.

*(இந்த முயற்சியில் 1992ஆம் ஆண்டில் நான் கண்டி தேசிய குருமடத்தில் இறையியலுக்குப் பொறுப்பாயிருந்த பொழுது, தென் அமெரிக்க ஒரு குருவையும் இரு துறவிகளையும் இலங்கைக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அழைத்து, கண்டி, தேவத்த, திருகோணமலை, யாழ்ப்பாணத்தில் மறைமாவட்ட ரீதியிலே அடிப்படை குழுமங்களைப் பற்றி கூட்டங்கள் நடத்தினேன். அதே துணிவில் கண்டி தேசிய குரு மடத்திலும் யாழ் புனித சவேரியார் குருமடத்திலும், அடிப்படை கிறீஸ்தவ குழுமங்கள் என்ற பாடத்தையும் ஆரம்பித்தேன். ஆனால் அப்பாடம் நீடித்திருக்காததையிட்டு வருந்துகின்றேன்)*

## 9.3 தென் ஆபிரிக்க, வட அமெரிக்க கறுப்பு மக்களின் விடுதலைப் போராட்டமும் கறுப்பு இறையியலை பிறப்பித்தது (Apartheid & Negro Black theology)

ஆபிரிக்கக் கண்டத்தின் நாடுகள் பல விதமான அடிமை தனங்களுக்கு நீண்ட காலமாக உள்ளாகி இருந்தனர். அடிமை வியாபாரம் ஏராளமாக நடந்தது. காலனித்துவ காலத்திலே கிறிஸ்தவத்தைப் பரப்பிய ஐரோப்பிய மறைபரப்பாளர்களும் தென் ஆபிரிக்காவிலே காலனித்து வத்தின் பின் சிறுபான்மையான வெள்ளையர்களும் ஆபிரிக்க கறுப்பு மக்களும் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். ஆனால் பெரும்பான்மையான கறுப்பு கிறீஸ்தவர்களும், கறுப்பு இஸ்லாமியரும், சிறுபான்மையான வெள்ளையர்களினாலே ஆளப்பட்டு பலவிதத்தில் முடக்கப்பட்டு வாழ்ந்தார்கள். இந்த ஒடுக்கு முறையை அப்பாதெயிட் (apartheid) என்று அழைத்தனர். இதற்கு எதிராகத்தான் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நெல்சன் மன்டேலா (Nelson Mandela, African National Congress ANC) தலைமையில் கறுப்பு ஆபிரிக்கர் போராடினார்கள். இதற்கு அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன் ரூற்று ( Desmond Tutu) முக்கிய பங்களித்தார். (*இவரை நவ. 1994க்கு பின் பல முறை சந்தித்து, தமிழரின் போராட்டத்திற்கு அவரின் ஆதரவை பெற்றேன்)* இத்துடன் 120 கிறீஸ்தவ இறையிலாளர்கள் இணைந்து கறுப்பு மக்களின் போராட்டத்திற்கு தமது ஒத்துழைப்பை கைறோஸ் (Kairos) என்ற ஏட்டின் வழியாக வழங்கினர். ( *இந்த ஏட்டை ஆதாரமாகக் கொண்டே, நான் **இனப் பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும்** என்ற சிறிய நூலை வெளியிட்டேன்.)*

வட அமெரிக்காவின் தென்பகுதியிலே அதிகமானோர் கறுப்பு அமெரிக்கராகவும், கிறீஸ்தவர்களாகவும் இருந்தார்கள் (Black Americans Negroes) இருந்தும் அமெரிக்காவின் சட்டங்களிலே அவர்களை ஒருவிதத்திலே புறக்கணித்து, தாழ்மைப்படுத்தி, ஒதுக்கி வாழ்ந்தார்கள் வெள்ளைமக்கள். அதற்கெதிராக கறுப்பு அமெரிக்கர்கள் தங்களுடைய விடுதலை இயக்கங்களை நேர்மையான நீதியான அதாவது வன்முறையற்ற போராட்டங்களினாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்தார்கள். அதிலே முன்நின்றவர் மகாத்மா காந்தியின் வன்முறையற்ற போராட்டத்தைப் பின்பற்றிய மார்ட்டின் லூதர் கிங்.(**Martin Luther King**) அந்தப் போராட்டம் மிகவும் முன்னேற்றமடைந்து வெற்றி பெற்றது.

எங்களுடைய காலத்திலே அப்பேற்பட்ட ஒரு கறுப்பு அமெரிக்கர் தான் பறாக் ஒபாமா ( Barack Obama ) என்று பெயருடன் அமெரிக்காவின் தலைவராகவும் வந்துள்ளார்., அவருடைய பெற்றோர் ஆபிரிக்கா கென்யாவிலே வாழ்ந்தவர்கள். ஒபாமா அமெரிக்காவின் கறுப்பினத்தைச் சேர்ந்தவர். இவர்தான் முதற் தடவையாக அமெரிக்க தலைலவராக வரக்கூடியதாக இருந்தது. தன்னுடைய முதிர்ச்சியான முறையிலே, அவரும் அவருடைய பாரியார் மிச்சேலும் சேர்ந்து, முழு நாட்டையும் முன்னெடுத்தார்கள்.

சுருங்கக் கூறின், தென் அமெரிக்காவில் விடுதலை இறையியல் என்றும், வட அமெரிக்காவின் தென் பகுதியிலே கறுப்பு இறையியல் என்றும் (black theology), தென் ஆபிரிக்காவில் வெள்ளையரின் நிற வேற்றுமைக்கு எதிரான விடுதலை இறையியல் (anti-apartheid) நடந்தது.

## 9.4 தென் அமெரிக்க ஆயர்களைப்போல் ஆசிய ஆயர்கள் ஏன் நடந்து கொள்ள முடியவில்லை?

ஆசிய மக்கள் மதங்களிலும் கலாச்சாரங்களிலும் மூழ்கி, மயங்கி, மனித சமுதாயத்தில் இருக்கும் அநீதிகள் ஒடுக்கு முறைகளை கண்டுகொள்ளாது வாழ்கின்றனரா? அல்லது கண்டும், அவைகளை மத வழிபாடுகளுடன் சமாளித்து வாழுகின்றனரா?

ஏன் ஆசிய நாடுகளில் சமூக அநீதிகள் அடக்கு முறைகளுக்கு எதிராக பெரியளவில் போராட்டங்கள் எதுவும் முன்னெடுக்கபடவில்லை. ஒரு விடுதலை இறையியலை பிறப்பிக்கவுமில்லை. ஏன்?

ஆசியக் கண்டம் மக்கள் நிறைந்த கண்டம் மாத்திரமல்ல. மதங்கள் பூர்வீக பல கலாசாரங்களையும் கொண்டுள்ளது. மக்கள் இவைகளில் நீண்ட வேர்களை கொண்டு வாழ்கின்றனர். அனேகமானோர் இவைகளில் மூழ்கி மயங்கி விடுகின்றனர்.

காள் மார்க்ஸ் (Karl Marx) என்ற ஜேர்மன் மெய்யியலாளர், தனது பொதுவுடமை கொள்கைகளை வெளியிட்ட பொழுது, மதங்கள் மக்களின் மயக்க வஸ்தென்றார். (Religions are the opium of the people). இதைக் கிறிஸ்தவர்களும் மற்றைய மதங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்சியத்தை புரிந்து கொள்ளாது எதிர்த்து தள்ளினர். ஆனால் காள் மார்க்ஸின் ஆளமான கருத்து என்னவென்றால், மதத்தில் மயங்கி மருண்டு போகிறவர்களுக்கு வாழ்க்கையின் யதார்த்த நிலைமைகள் புரியாது. மதுபானத்தில் மயங்கியவனுக்கு குடும்பத்தின் துன்பங்கள் புரியாது. மதத்தின் வழிபாடுகளில் மாத்திரம் மூழ்கியவர்கள் சமூகத்தில் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் துயரங்களை கவனத்தில் எடுத்து கொள்வ தில்லை.

84 வீதம் கத்தோலிக்கரை கொண்ட பிலிப்பைன்ஸ் தீவில்தன்னும் மார்க்கோசின் நீண்ட சர்வ அதிகாரத்திற்கு எதிராக மக்கள் சக்தி (peoples' power) எழுந்து அரசாங்கத்தை மாற்றியது. கோறேயாவிலும் அரசாட்சிக்கு எதிராக மக்கள் புரட்சிகள் நடத்தினர். ஆனால் அந்நாடுகளின் திருஅவைகளிலிருந்து நிரந்தரமான விடுதலை இறையியல் பிறக்கவில்லை.

ஆசிய திருஅவைகள் வெவ்வேறு ஐரோப்பிய காலனித்துவ நாடுகளினாலே ஆரம்பிக்கப்பட்டவை. அவைகளின் ஆயர்கள் வெவ்வேறு ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்ததன் காரணமாகவும், வெவ்வேறு நாட்டின் மத கலாசார சூழலிருந்த திரு அவைகளை வழி நடத்தியதாலும், உரோமை திரு அவையின் பிரமாணிக்கமான கிழைகளாகவே செயற்பட்டனர்.

தென் அமெரிக்க நாடுகளின் பிரச்சினைகளுக்கு ஒரு பெரிய பொதுவான காரணம் தெளிவாக இருந்தது. வட அமெரிக்காவை சேர்ந்த செல்வந்தர்களும் அவர்களின் பணம் சம்பாதிக்கும் அடக்கு முறை அமைப்புகளும் தென் அமெரிக்க நாடுகளின் மக்களை அடிமைகளாக ஆக்கி பணம் சம்பாதித்தனர். . அவைகளுக்கு எதிராகவே தென் அமெரிக்கத் திருஅவைத் தலைவர்கள் எழுந்தார்கள்.

ஆனால் ஆசிய மக்கள் வேறுபட்ட மத கலாசார சூழலிலே இருந்த திருஅவைகளை நடத்தி வந்தனர். ஆகையால் ஒவ்வொரு நாட்டிலும் சமூகப் பிரச்சினைகள் வேறுபட்டு இருந்ததன் காரணமாக, அவைகளைப் பற்றி விளங்கிக் கொள்வது கடினமாயிற்று. தென் அமெரிக்க திரு அவைகளின் தலைவர்களைப் போல் ஒன்று கூடி செயல் படவில்லை.

2ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்து 5 வருடங்களின் பின்னரே, ஆசிய திருஅவைகளின் ஆயர் சங்கங்கள் ஒன்றாக இணைந்து, 1970ஆம் ஆண்டு பாப்பரசர் 6வது சின்னப்பர் தலைமையில் ஆசிய ஆயர் சங்கங்களின் ஐக்கிய அமைப்பு (Federation of Asian Bishops Conferences FABC) ஒன்று மனிலாவில் ஆரம்பிக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையினால் 2ஆம் வத்திக்கான் சங்கம் நடந்து பொழுது, சங்கத்தை வழி நடத்திய ஆயர்கள் இறையியலாளர்களுடன் ஆசியாவின் ஆயர்கள் பெரிதாக ஆசியப் பிரச்சினைகளை பற்றி கருத்து பரிமாற்றம் செய்ய முடியவில்லை.

ஆசிய ஆயர்கள் தங்கள் சமுதாயத்தின் மதங்கள் கலை கலாசாரங்களையிட்டுப் பெருமைப்பட்டனர். 1970 ஆம் ஆண்டிற்குப் பின்பு ஒன்றாகக் கூடி, சங்கம் வெளியிட்ட முற்போக்கான பார்வையில், மத கலை கலாசார வேற்றுமைகளைப் பற்றி ஆலோசனைகளை நடத்த தொடங்கினர். ஆனால் தங்கள் மக்களின் சமூக பிரச்சினைகள் அநீதிகளையிட்டு சங்கத்தின் பின்னும் ஆழமான கருத்துப் பரிமாற்றங்களை செய்யவுமில்லை.

**9.5 சமூக அநீதிகளுக்கு எதிராக சிறு பான்மையான தமிழ் கிறிஸ்தவர்கள் எதுவித போராட்டமுமின்றி, சமாளிக்கும் நிலையையே பின்பற்றினால் தமிழ் விடுதலை இறையியல் தோன்றாது.**

எத்தனையோ மனிதாபிமானமற்ற வேற்றுமைகள், அடக்கு முறைகள், நடைமுறையில் இருந்தும், இந்து மக்கள் புரட்சியோ, இந்திய கிறிஸ்தவர்களின் எதிர்ப்போ பெரிதாக உருவெடுக்க முடியவில்லை. விசேடமாக இந்திய கிறிஸ்தவர்களில் 70 வீதமானோர் மிகக் கீழ்தரமான முறையில், எதுவித மனித உரிமைகளும் இல்லாதவர்களாக, சாதி பட்டியலில் இடம் பெறாதவர்களாக தீண்டத் தகாதவர்களாக (dalits, out-castes, untouchables) நடத்தப்பட்டு வருகிறார்கள். இவர்களில் தலித் (Dalits) என்பவர்களின் நிலை மையை 1970 ஆம் ஆண்டுகளின் பின் கிறிஸ்தவ இறையியலாளர் கவனத்தில் கொண்டு, இயேசு சபைக் குருக்கள் அம்மக்களின் பிரதிநிதிகளைத் திரட்டி அவர்களின் மனிதபிமானமற்ற நிலையை ஐ.நா. மட்டத்திற்கு எடுத்துச் சென்றனர்.

ஜெனீவாவிலும், தென் ஆபிரிக்காவில் டேர்பன் நகரிலும் இன வேற்றுமைக்கு எதிராக ஐ.நா. நடத்திய உலக மகா நாட்டிலும் (World Conference against Racism, Durban) தலித் மக்கள் பலர் இயேசு சபைக் குருக்களால் அழைத்து வரப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இக்கூட்டத்தில் இவர்களை நான் நேரில் கண்டு மகிழ்ந்தேன்

நிலைமையை நன்கு உணர்ந்தவராக, 1991இல் இந்திய ஆயர் சங்கத்தைப் பார்த்து, அன்றைய பாப்பரசரின் பிரதிநிதி யோர்ஜ் சூர் மிகத் துணிவுடன் கூறினார் - *60 வீதத்திற்கு மேற்பட்ட இந்திய கிறிஸ்தவர்கள், மிக தாழ்த்தபட்ட சாதியை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேர்ந்தவராயிருந்தும், அவர்களுக்கு தீர்மானிக்கும் சக்தி யில்லை. சாதியில் உயர்ந்த இந்துக்கள் மாத்திரமல்ல, உயர்ந்த சாதிக் கிறீஸ்தவர்களும் அவர்களின் மனித உரிமைகளை மறுக்கின்றனர்.*

இப்படியாக இந்தியக் கிறிஸ்தவத்தின் சிக்கலான நிலைமை யில், இந்தியாவின் பிராமண - இந்துக்களின் பெரும்பான்மை அதிகாரத்தின் கீழ், தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் ஓர் சமாளிக்கும் கிறிஸ்தவத்தையே தொடரச் செய்கின்றது. இந்திய அரசு இவ்வேற்றுமைகளைக் குறைக்க முடியாத நிலைமையில், அந்நாட்டின் யாப்பிலே சாதியற் றோருக்கு, சில துறைகளில் சலுகையாக சில வசதிகள் செய்திருக்கிறது. ஆனால் இலங்கையில் தாழ்த்தப்பட்ட தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு அப்படியான சலுகை ஏதும் இல்லை!

இந்தியாவில் பக்தி இயக்கங்களும், அம்பெட்காரின், பெரியாரின் சுய மரியாதை இயக்கங்கள் (Ambedkar, Periyar movements) எதிர்ப்பையும் மாற்றத்தையும் ஓரள விற்கு ஏற்படுத்துகின்றன. ஆனால் இந்திய மக்களின் சிந்தனை, பார்வை, கலை, கலாசாரம், எல்லாம் பிராமண -இந்து சக்தியின் பிரமாண்ட தன்மையை எதிர்த்து, முன்னேறுவது மிகக் கடினம். கிறிஸ்தவர்களின் முயற்சியும் இவைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியில்த்தான் தமிழ்க் கிறிஸ்தவத்தின் முயற்சிகளை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு பக்கத்தில் தமிழர்கள் இந்தியர்களாக, பிராமண - சைவ உலகத்தில் வேரூன்றி இருக்கின்றனர். மறுபக்கத்தில் அவர்கள் ஏற்றுக் கொண்ட கிறிஸ்த வத்தின் அமைப்புக்க ளாக, (institutionalised churches) சமூக அரசியல் பிரச்சினைகளிலிருந்து விலகி நிற்கும் போக்கை ஊக்கு விக்கின்றன. இதனுள்த்தான் தமிழ்க் கிறிஸ்தவர்களின் வருங்கால சவால் அடங்கியிருக்கிறது.

எப்படி ஒரே நேரத்தில் தமிழுக்கும் கிறிஸ்தவத்திற்கும் பிரமாணிக்கமாக நடப்பது? இரண்டும் இறைவன் கொடுத்த அழைத்தல்கள். தமிழின ஊற்று வேர்கள் பிராமண - இந்து ஆதிக்கத்தில் ஊன்றியிருக்கின்றன. அதிலே ஊறியிருக்கும் சாதி வேற்றுமைகள் அடிமைத்தனங்களிலிருந்து முழுமையாகப் பிரிவது கடினம். தமிழரின் பார்வைகள், சிந்தனை முறைகள், நடை உடை பாவனை தொடர்ந்தும் தமிழராகவே இருக்கின்றன. கிறிஸ்தவத்தின் சாராம்சத்தை எவ்வளவிற்குத் தமிழ்க் கிறிஸ்தவர்கள், தமிழராக இருந்து கொண்டு உள்வாங்கலாம் என்றும் தமிழ் கிறிஸ்தவத்தில் ஓர் விடுதலை இறையியல் உருவெடுப்பது மிகவும் கடினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவையும் எம்மையும் பொறுத்த மட்டில், இந்நிலைமை தான் தமிழ் விடுதலை இறையியல் தோன்றுவதற்கு தடையாக இருக்கின்றது. ஏன்?

ஆதியில் யூத கிறிஸ்தவ குழுமங்கள் இயேசுவின் அப் போஸ்தலரினால் வழி நடத்தப்பட்டபோது (jewish christianity) யூதரின் ஒடுக்கமான பரிசேய, விருத்தசேசன விதி முறைகளிலிருந்து விடுபட்டு, புறஇனத்தாரையும், மனித மானத்தையும் மதித்து, தம்மிடம் உள்ள இறைவனின் நற்செய்தியையும் இருப்பையும் பகிர்ந்து கொள்ளும் திருஅவையாக அயல் நாடுகளில் பரவியது. (universalisation of Christianity as sharing of Good News and all they had)

ஆனால் உரோமையில் அவைகள் அதிகாரிகளுக்குப் பணியும் பிரமாண்டமான அமைப்புகளாக வளர்ந்தன. இவ்வித மாக அமைப்பில் பெலப்படுத்தப்பட்ட திருஅவைகள் தான் எம் மத்தியிலும் வளர்ந்து வந்திருக்கின்றன. (-institutionalised roman christianity) இப்பின்னணியில், எழும் கேள்வி: யூத கிறிஸ்தவம் விருத்தசேசனக் கடமையுடன் தொடர்ந்தது போல, தமிழ் கிறிஸ்தவமும் சாதி வேறு பாடுகளின் மத்தியில் சமாளிக்கும் கிறிஸ்தவமாக தொடரலாமா?

இல்லவே இல்லை!

கிறீஸ்தவர்கள் தமது நம்பிக்கையின் (விசுவாசத்தின்) சாரம்சத்தை குறைக்கவோ மாற்றவோ முடியாது. இறைவனே நமது ஒரே தந்தையென்றும் மனிதர்கள் நாம் எல்லோரும் அவரின் சம உரிமைகளுடைய பிள்ளைகளும் சகோதரர் என்றும், ஒருவரை ஒருவர் அன்பு செய்து மன்னித்து வாழ வேண்டுமென்றும், வறியவர், பெலவீனமுற்றோருக்கு முன்னு ரிமை அன்பு இரக்கம் காட்ட வேண்டுமென்றும் இயேசு கற்பித்திருக்கிறார்.

இவைகளுக்கு அப்பால் நானே ஒளியும் உப்பும், என்றவர், தீய சக்திகளை ஒழிக்க, அநீதி ஒடுக்கு முறைகளுக்கெதிராக நீங்களே ஒளியாகவும், உப்பாகவும், இருப்பீர்களென எம்மை பணித்தார், ஊக்குவித்திருக்கிறார்.

ஆகையினால் எமது தமிழ்ச் சமூகத்தின் சூழலினாலும், எம் திருஅவை அமைப்பின் அதிகாரிகளினாலும் நிர்ணயிக்கப்பட்டு, நாம் சமாளிக்கும் கிறிஸ்தவ வாழ்விற்குத் தள்ளப்பட்டாலும், நாம் ஒளியாகப் பிரகாசிப்பதற்கும் உப்பாகச் சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், நற்செய்தி விழுமியங்களை வித்தாக விதைப்பதற்கும், எம்மிடம் உள்ளதை பகிர்ந்து கொள்வதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக எழும் தடைகளை எமது அடிப்படை விசுவாசத்தில் தளராது விளக்கி மனித விடுதலைக்காக தொடர்ந்து போராடுவோம்!

9.6 தமிழ் திருஅவைகளின் தலைவர்களும் கிறிஸ்தவ ஒற்றுமை என்ற போர்வையில், தமிழ் மக்களின் சமூக, அரசியல், பிரச்சி னைகளை, அரசியலாக மாத்திரமே கணித்து, விலகி நின்றனர்.

அகில இலங்கை ஆயர் அவை, ஒற்றுமை என்ற போர்வையில், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித வாழ்க்கை பிரச்சினைகளை கவனித்தும் கவனியாது, அல்லது அரசியல் என்று, தள்ள முடியாது. இப்பிரச்சினைகளை தமிழ் ஆயர் குழுவாவது கவனத்தில் எடுத்து செயல்பட வேண்டும்.

இந்தியத் தமிழ் கிறீஸ்தவருடைய நிலைமை பிராமண - இந்து பெரும்பான்மையினால் ஓரளவிற்கு நிர்ணயிக்கப்பட்டு, சமாளிக்கும் கிறிஸ்தவத்திற்குத் தள்ளப்படுகின்றது. ஆனால் இலங்கைக் கிறீஸ்தவர்களுக்கு, அவ்வித தடையேதுமில்லை.

கிறீஸதவத்தில் இறைவன் இஸ்ரவேல் மக்களுக்கு தம்மை அடிமைத் தனத்திலிருந்து விடுதலைக்கு இட்டுச் செல்பவராக வெளிப்படுத்தினார். இறைமகன் கிறீஸ்து தம்மை முழு மனித விடுதலைக்காக அனுப்பப்பட்டவர் (redeemer/ liberator) என்று வெளிப்படுத்தினார். இதன் அடிப்படையில் ஈழத்தில் தமிழர் நடாத்திய விடுதலை போராட்டத்தின் பின்னணியில் இறையியல் பிறக்க காரணமிருக்கின்றது.

ஆனால் தங்களுக்குள்ளேயே நடைமுறையிலிருந்த சாதி வேற்றுமைகளையோ, அநீதியான ஒடுக்கு முறைகளையோ, அடிப்படைக் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முழுக்க முழுக்க முரணானதாக இன்னும் கண்டு கொள்ளாது, சமாளிக்கும் கிறீஸதவத்தை கடைப்பிடிப்பவர்களுக்கு, விடுதலை இஜற யியல் கடினமானது. இறைவனே எம் எல்லோரின் தந்ஜத யென்றும், நாங்கள் அனைவரும் இறைவனின் பிள்ளைகள், சமத்துவ உரிமைகளுடைய சகோதரர் என்பதையும், எம்மகத்தே இருக்கும் வேறுபாடுகளும் ஒடுக்கு முறைகளும் இறைவனுக்கு விரோதமானவை என்பதையும் ஆழமாக விசுவசித்தால்த்தான் எம்மில் துணிவான செயற்பாடுகள் பிறக்கும்.

தமிழ் மக்கள், இலங்கை அரசாங்கத்தினால் இரண்டாம்தர குடிமக்களாக கணித்து மனித உரிமைகள் மறுக்கப்பட்டபோது, அநீதியாக நடாத்தப்பட்டபோது - அது இறைவனின் விதியென்று, ஒரு தமிழரும் சொல்லவில்லை. மாறாகச் சீறி எழுந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரட்டத்திற்கு. ஏனெனில் இனப் பெருமை இருந்தது, ஆனால் இனத்திற்குள்ளேயே நடைமுறையிலுள்ள அநீதிகளையிட்டு சுய விமர்சனம் செய்ய எமக்கு துணிவு இருக்கவில்லை. இந்து மதத்தினாலே விதிக்கப்பட்ட சாதி வேற்றுமைகள் தமிழ் கிறிஸ்தவர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதினால் தமிழ் கிறிஸ்தவ அமைப்புகளின் தலைவர்களும் பெரிதாக மக்களுக்காகப் போராடத் துணியவில்லை!

1956 தொடக்கம் 1976 வரை தமிழ் அரசியல்வாதிகள், ஒரு கிறீஸ்தவன் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையிலே, வன்முறையற்ற ஜனநாயகப் போராட்டத்தை நடத்தினர். அப் போராட்டத்தை தீர்வொன்றும் கிடைக்காதலால், இறைவனே தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டுமென்றும் சொல்லி வட்டுக்கோட்டையில் முடிவு செய்தார்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கப்பட்டனர். விசேடமாக தமிழ் இளைஞர்கள் தமது வரும் காலம் - ஒரே சிங்கள மொழி சட்டம், பல்கலைக்கழகத்தினுள் நுளையும் வசதி மறுப்பு, வேலை மறுப்பு - இப்படி இருள் நிறைந்ததாக விரக்திக்குத் தள்ளப்பட்டனர்.

தமிழ்ச் சமூக தலைவர்களோ, மதத் தலைவர்களோ, இளைஞர்களை வழிநடத்த முன்வரவில்லை! இந்நிலையில்த் தான், அரச பயங்கரவாதத்திற்கு எதிராக, விரக்தியின் எல்லை யில் நின்ற தமிழ் இளைஞர்கள், வன்முறைக்குத் தள்ளப்பட்ட னர்! தமிழர் பகுதியில் இதற்கு யார் பொறுப்பு?

## 9.7 ஈழத்தமிழ் விடுதலை போராட்டத்தில் தமிழ் கிறிஸ்தவத்தின் பங்களிப்பும் - மட்டுப்படுத்தப்பட்டது

இலங்கையின் பெரும்பான்மை சிங்கள புத்த இனம், மகாவம்சப் மனப்பார்வையினால் தூண்டப்பட்டு, தமிழர் தமது தேசியத்திற்கு எதிரானவர்களென்ற தவறான பார்வையில், செயற்ப் பட்டனர். தமிழ் இனத்தின் மனிதத்துவத்திற்கு எதிராக சட்டங்களை பிறப்பித்து, அத்துடன் அரச பயங்கரவாதத்தையும் ஊக்குவித்தனர். இதுவே போருக்கு ஆயத்த காலமாயிற்று.

இந்து சைவ தமிழர்களும் தமிழ்க் கிறீஸ்தவர்களும், வேறொரு இனத்திலிருந்து துன்புறுத்தப்பட்டதனால், இனப் பெருமையுடன் கோபம் கொண்டனர், கொதித்தெழுந்தனர், ஒன்றாக வாழத் துடித்தனர். கிடைக்கும் பாதுகாப்பையும் பசிபோக்கும் கஞசியையும் பகிர்ந்து கொண்டனர். இதிலேதான் முன்பு காணாத தமிழ் தேசிய உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தது. (a defensive Tamil nationalism born out of common suffering)

தமிழ் கிறீஸ்தவர்களைப் பொறுத்த மட்டில், வெளிநாட்டு உதவியுடன் பாதிக்கப்பட்டோருக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்துவிட்டு மௌனம் காத்தனர். தமிழ் மக்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்களை கண்டித்து குரல் கொடுத்து போராடுவதென்பது, அரசியல் என்று ஆயர்கள் கணித்து விலத்தினர். குருக்கள், துறவிகளையும் அவ்வழிக்கே பணித்தனர்.

இருந்தும் மக்களின் பாடுகளில் தோழ்கொடுத்து, பணி செய்து, சில கிறீஸ்தவ குருக்களும் துறவியரும் தம்மை அர்ப்பணித்தனர். உயிரையும் தியாகம் செய்துள்ளனர்.

*(என்னைப் பொறுத்த மட்டில் 1986ஆம் ஆண்டுவரை நான் கண்டி தேசிய குருமடத்தில் கடமை ஆற்றினேன். 1986இல் யாழ் மண்ணின் நிலைமையை உணர்ந்தேன். நானும் என் மக்களுக்காக, ஒரு கிறீஸ்தவ தலைவர் என்ற மட்டில் மக்கள் சார்பாகக் குரல் கொடுத்தேன்.*

*1994இல் சிறீ லங்காவில் போரும் அரசியலும் திரு அவையும் என்ற சிறிய புத்தகத்தை, ஆங்கிலத்திலும் **(Church, politics and War in Sri Lanka)**, பின்பு இந்தியாவில் 2003லும், யாழ்ப்பாணத்தில் 2019லும், **(இனப்பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும்)** என்ற தலைப்பில தமிழிலும் வெளியிட்டேன்.*

*ஆனால் திருஅவையின் தலைவர்கள் எனது முயற்சியை நான் அரசியலில் ஈடுபடுவதாகத் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதுடன் கண்டனத்துக்கும் உள்ளானேன். யாழ் -புனித யாகப்பர் கோவிலும், நவாலி சம்பேதுருவானவர் கோவிலும், அரச படைகளினால் குண்டுகளினால், தாக்கப்பட்ட பொழுது மக்கள் கோவிலுக்குள்ளும், விறாந்தையிலும், உயிரிழந்தனர். இறந்தவர்களை பார்ப்போம் என்று ஆயரை நான் அழைத்தேன். அவர் தான் - ஒரு அரசியல்வாதி அல்ல - என்று வர மறுத்து விட்டார்.*

*ஆனால் தலைவர் சந்திரிக்காவிற்கு, தந்தி மூலம் எதிர்ப்பையும், பி.பி.சி.க்குத் தகவலையும் கொடுத்தேன். அது என் மக்களுக்குரிய கடமையாயிருந்தது. இதன் காரணமாக அதிகமானோர் என்னை சரியாக புரிந்து கொள்ளாது விலக்கினர். ஒரு பக்கத்தில் சிங்களவரும், அரசாங்கமும் என்னைப் பயங்கரவாதி என்றனர், எமது தமிழ்த் திருஅவை நான் அரசியலில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டினர். இந்நிலையில் கொழும்பு ஊடகங்களுக்கு கடிதங்கள் எழுதி என்னைக் விளக்க காப்பாற்ற முயன்றேன். முடியாத நிலையில் 1996 செப். இலங்கையை விட்டு வெளியேறினேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒரு வருடம் லண்டன் பல்கலைக்கழக, கேத்றொப் கல்லூரியில், இறையியல் விரிவுரையாளராகவும். 20 வருடங்கள் ஜேர்மனியில் தங்கி, பங்குத் தந்தையாக மேய்ப்புப் பணியையும் செய்தேன். இதே காலத்தில், புலம் பெயர்ந்த தமிழர்களை திரட்டி, தமிழர் சார்பாக, வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு எமது நிலைமையை விளக்கினேன்.*

*2010இல் இருந்து உலகத் தமிழர் பேரவைத் தலைவராக, ஏராளமான நாடுகளுக்கு சென்று எமது இலட்சியத்திற்காக வாதாடி, இலங்கை அரசாங்கத்தை சர்வதேச வலைக்குள் போட உதவினேன். 2015இல் புதிய தலைவர் சிறிசேனாவினால் நல்லிணக்கப் பணிசெய்ய பிறந்த நாட்டிற்கு அழைக்கப்பட்டு, 2017 டிசெம்பரில் இலங்கை திரும்பியுள்ளேன்)*

9.8 தமிழ் இளைஞர் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஆரம்பித்த ஆயுதப் போராட்டத்தை, தமிழரே இன்னும் சரியாகப் புரிந்து கொள்வதாக இல்லை.

இலங்கை அரசாங்கத்தின் அரசியலும் அரச பயங்கர வாதமும் மக்களைக் கொன்று அழிக்கும் நேரத்தில் தமிழ் சமூகத்தின் இந்து - கிறிஸ்தவ மதத்தலைவர்கள் வன்முறையைத் தவிர்த்து, நடப்பது பயங்கரவாதப் போர் என்றும், அதைப்பற்றிப் பேசுவது அரசியல் என்றும் மௌனம் காத்தனர். அரச படைகளின் வன்முறைக்கு எதிர்ப்பு வழி எதுவும் காட்டவில்லை. மக்களும் எல்லாம் விதி என்றனர்.

இதன் காரணமாக, எதிர்காலத்தை நோக்கிய தமிழ் இளைஞர்கள் தங்களுக்கு கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் எதிர்காலமில்லை என்று விரக்தியின் சுவருக்குத் தள்ளப்பட்டனர்.

ஆகையினால் ஆயுதப் போராட்டம், தானாக வெடிக்க வில்லை. தன்னிச்சையாக தமிழரினால் ஆரம்பிக்கப்பட்டதுமல்ல. அரசாங்கத்தின் போக்கும், தமிழர் தரப்பில் பொருத்தமான வழிகாட்டலுமின்றி, மதத்தலைவர்கள் சாதித்த மௌன செயற்பட்டுப் போக்குமே தமிழ் இளைஞரை ஆயதப் போராட்டத்திற்குத் தள்ளியது.

இனியாவது தமிழ் மக்களின் மதத் தலைவர்கள், விசேடமாக கிறீஸ்தவ தலைவர்கள், மனித உரிமை பிரச்சினைகளை மக்கள் பிச்சினையாக கணித்து, அது அரசியல் என்று தள்ளி விடாது, மௌனம் சாதிக்காது, உண்மை நீதிக்காக சமாதானத்திற்காக குரல் கொடுக்க துணிய வேண்டும். வன்முறையற்ற எதிர்ப்பு போராட்ட மாற்று வழிகளை, பாதிக்கப்பட்டோருடைய போராட்டத்திற்கு சுட்டிக் காட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅவையின் மௌனமும் செயலற்ற தன்மையும், எனது கிறீஸ்தவ சீடத்துவத்திற்கு முரணாக தோன்றிற்று. என்னை தன்னிச்சையான செயல்களுக்கு தள்ளியது. இங்கே நான் நேராக அனுபவித்தவை களைக் கூறமுடியும்.

*(அதிலே ஒரு விசேட அனுபவம் :- 1986ஆம் ஆண்டில் கண்டி குருமட இறையியல் பொறுப்பாளராகப் 10 வருடம் பணியாற்றி விட்டு, யாழ் புனித சவேரியார் குருமட அதிபராக பணியேற்றேன். இலங்கை அரச படைகளுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால் 1987இல் இந்திய அமைதிப் படைகள் (Indian Peace Keeping Force - IPKF) தமிழ் பகுதிகளைப் பொறுப்பேற்றனர்.*

*இதனால் குருமடமும் பல இன்னல்களை அனுபவித்தது. விடுதலைப் புலிகளை தேடிய இந்தியப் படையினர், பொய்யான சந்தேகத்தின் கதரணமாக, 6 குருமாணவரை 5 நாட்களாக வன்முறை விசாரணைக்கு உட்படுத்திய பின் எனது மன்றாட்டிற்கு இணங்கி விடுவித்தனர்.*

*இந்தவேளையில் 120 இறையியலாளர்கள் தென் ஆபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு ஒத்துழைப்புக் கொடுத்து, ஓர் சிறு புத்தகத்தில் தங்கள் கருத்தை வெளியிட்டிருந்தனர். அதன் பெயர் (Kairos Document). அவர்கள் கூறியது என்னவென்றால் நாட்டிலே 3 விதமான இறையியல்கள் திரு அவைகளில் செயற்படுகின்றன.*

1. *அந்த நாட்டு அரசியலுடன் ஒத்துபோகும் இறையியல்*
2. *உரோமைத் திருச்சபையின் பாரம்பரிய இறையியல்*
3. *ஆனால் தென் ஆபிரிக்க மக்களுக்கு வேண்டியது முற்போக்கான, ஒரு தீர்க்கதரிசன இறையியல்*

*அதை அடித்தளமாக வைத்து, நானும் இலங்கைத் திருஅவையை வழி நடத்தும் இறையியலை விமர்சித்து, இறைவாக்கு (தீர்க்கதரிசன) இறையியலை ஊக்குவித்து, ஒரு புத்தகத்தை ஆங்கிலத்தில் Church Politics and War in Sri Lanka என்றும், தமிழில் - இனப் பிரச்சினையும் இலங்கை திருச்சபையும் - என்ற தலைப்பில் வெளியிட்டேன்.*

*அத்துடன் எமது மதத் தலைவர்கள் நடந்து கொண்டிருப்பது தமிழ்ப் பயங்கரவாதமும் அதற்கெதிரான போரும் அரசியலும் என்று, மௌனத்தில் ஒதுங்கி செயற்படாத நேரத்தில், நான் மறைமாவட்ட குரு முதல்வராக, ஆலயங்கள் பாடசாலைகள் மேல் குண்டுகள் வீசப்பட்ட போது, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக குரல் எழுப்பினேன். தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் வரவேற்றனர் ஆனால்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்களும் அரசாங்கமும், நான் புலிகளோடு இணைந்து பயங்கரவாதத்திற்கு உதவுகிறேன் என்றனர்.

1996இல் எனக்கெதிராக ஆங்கில, சிங்கள, அரச ஊடகங்கள் பொய்யான குற்றச்சாட்டுகளுடன் என்னைத் தாக்கினர். மக்களின் சார்பாக, குருமுதல்வராக பொறுப்புடன் வெளியிட்ட கருத்துகளை, தமிழ்த் திருஅவை ஆயர்கள் குருக்கள் தன்னும் விளங்கி, பகிரங்கமாக ஆதரிக்க முன் வரவில்லை.

இந்நிலையில் நான் நாட்டை விட்டு 1996ஆம் ஆண்டின் இறுதியில் வெளியேறினேன். 2017 வரை நான் ஐரோப்பாவில் வாழ்ந்தேன். இக்காலத்தில் குருவாக பணி செய்து கொண்டு, எனது தமிழ் மக்களுக்காக முழுமையாக செயற்பட்டேன்.

## 9.9 தென் ஆபிரிக்க அனுபவங்களும் எனது சர்வதேச ஈடுபாடுகளும்.

1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம், நான் தென்ஆபிரிக்காவின் தலைநகரான கேப் நகரிலே (Cape Town) பேராயர் டெஸ்மன் ரீட்டுவை (Archbishop Desmond Tutu) சந்தித்தேன். தமிழ் மக்களுடைய போராட்டத்திலே, கிறிஸ்தவ தலைவர்கள் அநீதிக்கு எதிராக போராட முன்வரவில்லை. அதனால் பேராயருடைய உதவியைப் பெறுவதற்காக நான் அவரிடம் சென்றிருந்தேன். அவர் ஒரு அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த பேராயர். இருந்தும் அவர் அநீதியை எதிர்ப்பதற்கு தென் ஆபிரிக்காவின் தலைவராகிய நெல்சன் மண்டேலாவிற்குத் துணையாயிருந்தவர். கிறிஸ்தவ தலைவராக போராட்டத்திலே ஈடுபட்டிருந்தவர்.

அத்துடன் என்னுடன் உரோமையில் படித்த பேராயர் ஜோர்ச் டானியேல் அவரும் (Archbishop George Daniel)) உதவியாயிருந்தார். அப்படி உரோமையிலே என்னோடு படித்தவர்களும் ஆயர்களாக, குருக்களாக, இருந்தமையினாலே, நான் அங்கே சென்று, தொடர்புகளை ஏற்படுத்தி (Cape Town, Durban, Johannesburg, Pretoria, Petersburgh ...) போன்ற நகரங்களில் கூட்டங்களை நடத்தி, அவர்களுடைய போராட்டத்தோடு எங்களுடைய போராட்டத்தையும் இணைத்து, அவர்களின் தோழமையையும் பெற்றுகொண்டேன்).

வெள்ளை இன மக்கள் சிறுபான்மையினராக இருந்தும், தென்ஆபிரிக்காவிலே பெரும்பான்மையான கறுப்பு இன மக்களை அடக்கி ஆண்டு கொண்டிருந்தது. ஒரு பெரிய கடுமையான, கொடுமையான அடிமைத்தனமாக இருந்தது. அதன் பெயர் (Apartheid) என்று சொல்லப்படும். அதாவது சிறுபான்மை வெள்ளையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையான கறுப்பினத்தவரை, ஒடுக்கும் முறைகள். இதற் கெதிராகப் போராட்டம் புரிந்த நெல்சன் மண்டேலா (Nelson Mandela) 27 வருடங்களாகச் சிறைக்குச் செல்லவேண்டி இருந்தது. ஆனால் அவர் மீண்டும் சிறையிலிருந்து வந்தபொழுது அவர் அந்த வெள்ளைத் தலைவர்களின் குற்றங்களை மன்னித்து, அப் போதைய தலைவர் டி கிலேக் (de Klerk) உடன் சமாதானத்திலே, நல்லிணக்கத்திலே, ஈடுபட்டார். நன்றாக முடிந்தது.

மீண்டும் என் தலைமையில் உலக தமிழ் பேரவையின் **(Global Tamil Forum)** செயற்குழுவும், திரு. சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (Tamil National Alliance) அங்கத்த வர்களும், (ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேரவையின் (ANC African National Congress) நூற்றாண்டு விழாவிற்கு அழைக் கப்பட்டிருந்தோம். நாம் தென் ஆபிரிக்க பிரதிநிதிகளை சந்தித்து, அவர்களுடைய உதவியை இலங்கைப் பிரச்சினைக்கு வேண்டியிருந் தோம். இதைத்தொடர்ந்து அந்த அரசாங்கத்திலுள்ள தலைவர்களும் என்னை வந்து ஜேர்மனியிலே சந்தித்தார்கள். இரண்டு தடவை அந்த அரசாங்கத்தின் மூன்று தலைவர்கள் வந்து சந்தித்து எங்களுடைய போராட்டத்திற்கு உதவி செய்வதாக அவர்கள் வாக்குக் கொடுத்தார்கள். ஆகையினாலே தென்ஆபிரிக்காவின் உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான குழவிற்கு (Commission for Truth and Reconciliation) தலைமை வகித்த பேராயர் டெஸ்மன் டுட்டுவுடன் (Desmond Tutu) தொடர்பு வைத்திருந்தேன்.

தமிழ் விடுதலை இயலில், என் மக்களை வாழவிடுங்கள் **(Let my people go)** என்ற தலைப்பில் வெளியான என்னுடைய முதற் புத்தகத்திற்கு அவர் ஒரு முன்னுரை கொடுத்துக் கடிதம் எழுதியிருந்தார். ஆகையினாலே தென்ஆபிரிக்காவின் வெள்ளை இன மக்களுக்கு எதிராக, கறுப்பு இன மக்கள் நடத்திய போராட்டம், எமக்கு ஒரு வன்முறையற்ற போராட்டத்திற்கான படிப்பினையாகவும் ஊக்குவிப்பாகவும் இருக்கவேண்டும்.)

தென்அமெரிக்காவிலும் தென் ஆபிரிக்காவிலும் விடுதலை இறையியல்கள் தோன்றியதை பின்னணியாக வைத்து, எமது போராட்ட சூழலில் அப்படி ஒரு விடுதலை - இறையியல் தாகம் ஏன் தோன்றவில்லை என்று வினவினால், அதற்கு இரு காரணங்கள் - ஒன்று தமிழ்த் திருஅவைகள் சமாளிக்கும் போக்கை கடைப்பிடிப்பதும், மற்றது மக்கள் பிரச்சினைகளை தவறாக அரசியல் என்று கணித்து விலகி நிற்பதுமே காரணங்கள்.

இருந்தும் மனம் தளராது, தமிழ்த் திருஅவைகளை புதுப்பிக்கும் முயற்சியை நம்பிக்கையுடன் தொடருவோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 10

# தற்போதைய தமிழ்த் திருஅவைகளை எவ்வாறு எவ்வளவுக்குப் புதுப்பிக்கலாம்?

10.1 இறைஏவுதலில் மனிதர்கள் நடத்தும் திருஅவையை எவ்வளவுக்கு எவ்வாறு புதுப்பிக்கலாம்?

யூதேயாவில் சில சிறு சீடர் குழுமங்களாக ஆரம்பித்தவை, படிப்படியாகப் பரவி, அமைப்புகளாகப் பரவும் பொழுது, மனித பெலவீனங்கள் உண்மையான இலட்சியம், சாட்சியத்துடன் பிழைகளும் பின்னிப் பிணைந்து கொண்டன. இது எதிர்பார்க்க வேண்டியது ஒன்றாகும். இதன் காரணமாகவே திரு அவை எப்போதும் புதுப்பிக்கப்பட வேண்டுமென்கிறோம்.

ஆனால் திருஅவையை புதுப்பிப்பதற்கு, இன்னோர் உயர்ந்த நோக்கமுண்டு. திருஅவையின் நோக்கம், சுய நோக்கமன்று, கிறிஸ்து பிரகடனப்படுத்திய இறைஅரசையே நோக்கமாக கொண்டது.

ஆகையினால் திருஅவையிலிருக்கும் அங்கத்தினரையும் அமைப்பையும் புதுப்பித்தல், செயற்திறனாக்கினால், அழகு படுத்தினால் (பண்பாட்டு மயமாக்குதல்) போதாது! கிறிஸ்தவர்களும், திருஅவைகளும் இந்த உலகை இறையரசின் திசையில் மாற்றியமைக்க பணிபுரிய வேண்டும்.

ஆகையினால், கிறிஸதவம் தனிமனித மீட்பிலும் திருஅவை அமைப்பின் செயற் திறனிலும், வெற்றியிலும் முடிவடைவதல்ல. திருத்தந்தை 23ஆம் அருளப்பர் 2ஆம் வத்திக்கான் சங்கத்தை கூட்டிய பொழுதே கூறினார். உலக திருஅவையை, காலத்தின் அறிகுறிகளை அறிந்து வியாக்கியானம் செய்து இற்றைப் படுத்துவோம் என்றார். (Updating the church by reading the signs of the times = Aggiornamento). இச்சங்கம் தவறான விசுவாச கோட்பாடுகளுக்கு எதிராகவோ கண்டிப்பதற்காகவோ அல்ல, நீண்ட வரலாற்றில் திருஅவை பல தவறான பார்வையுடனும் அதிகாரத்துடனும் செயற்பட்டு, வளர்ந்து வந்திருக்கிறது. இந்த நூற்றாண்டிலாவது, உலக ஆயர்கள் ஒன்றாக கூடி, புதிய உலகிற்கு பொருத்தமான முறையிலே, கிறிஸ்துவின் திருஅவை தன்னை புதுப்பித்து உலகிற்கு பணி செய்ய வேண்டுமென்று விரும்பினார்.

இதற்காகவே, 2ஆம் வத்திகான் சங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே, கருதினால் மொன்ரீனி (பின் பாப்பரசரான 6ஆவது சின்னப்பர்), கருதினால் கேணிக் (வியன்னா), சுயனென்ஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( பெல்சியம்) ( Cardinals Montini, Koenig, Suenens) போன்றவர்களின் ஊக்குவிப்புடன், இன்றைய உலகில் திருஅவை எப்படி செயற்பட வேண்டுமென்ற விடயம் நன்றாக விவாதிக்கப்பட்டு - ***இன்றைய உலகில் திருச்சபை*** என்ற ஏடு வெளியேறியது.

திருஅவையில் இறைத்தன்மையும் மனிதத்தன்மையும் கலந்திருக்கின்றதினால், மனிதரினால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டவைகளை எப்போதும் தொடர்ந்து புதுப்பிக்கவும் வேண்டும். அத்தோடு இவ்வுலகை மேம்படுத்தும் எமது செயல்களையும் புதுப்பிக்க வேண்டும்.

**10.2 எம்மை புதுப்பிப்பதற்காக, எமது ஊற்றின் அடித்தள உண்மைகளுக்கு திரும்புவோம்.**

திருஅவையின் ஊற்றையும் அடித்தளங்களையும் பேணிப் பாதுகாத்து, அவைகளையே மேல்வரிச்சட்டமாகவும், திசை காட்டிகளாகவும் எப்போதும் மதிக்க வேண்டும். செய்ய வேண்டிய மாற்றங்களை இனங்கண்டு செயற்படுவதில் கவனிக்க வேண்டியவை;

1. காலத்திற்கேற்ப சூழல் உண்மைகளுக்கேற்ப மாற்றங்கள் செய்யும் போது, அம்மாற்றங்கள் ஊற்றின் அடித்தளங்களுக்கு இசைந்தவையாக இருக்க வேண்டும்.
2. ஆரம்ப ஊற்றுக்கும் நிறைவேற இருக்கும் நோக்கத்திற்கும் பிரமாணிக்கமாக நடந்துகொள்ள வேண்டும்.

இதற்காகத்தான் திருத்தந்தை 23ஆம் அருளப்பர், 2ஆம். வத்திக்கான் நடந்த பொழுது அடிக்கடி கூறிய அறிவுரை - **ஊற்றுக்கு திரும்பி செல்லுங்கள்** - அவ்வாறுதான் எமது புதுப்பித்தல் முயற்சிகள் நியாயப்படுத்தப்படும்; நீதிப்படுத்தப்படும்.

1. இறைவன் தம்மை இஸ்ரவேல் மக்களின் வரலாற்றூடாக வெளிப்படுத்தினார். காலம் நிறைவேறியதும் தமது மகன் இயேசுக் கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தினார்.
2. இயேசுவின் வாழ்க்கை வரலாறும் படிப்பினைகளும் அருட் செயல்களும் முதற் சீடர்களின் விசுவாசமும், 4 நற்செய்தியாளரினால் எழுதப்பட்டுள்ளன.
3. ஆரம்ப சீடர்தாம் ஆரம்பித்த குழமங்களுக்கு எழுதிய அறிவுரைகள் இன்றும் பொருத்தமானவையாகும்.

இவைகளின் படிப்பினைகள் எமக்கு அடித்தளம். இவைகள் எமது விவிலியத்தில் கூறப்பட்டிருப்பவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மேலும் கிறீஸ்தவ சீடர்களின் குழுக்கள் உரோமையை வந்தடைந்த பின் முதல் 500 ஆண்டுகளில் கிறிஸ்தவ சீடர்களின் குழமங்கள் திரு அவைகளாக மாறின. அந்தியோக் திருஅவையிலே சீடர்கள் முதல் முறையாக கிறிஸ்தவர்க ளென்றும், அவர்களின் குழமங்கள் திருஅவைகள் என்றும் அழைக் கப்பட்டதாக கூறப்படுகிறது. உலகளாவிய திருஅவையாகவும், அதன் விசுவாசக் கோட்பாடுகள் வாழ்க்கை வழிபாட்டு முறைகள் இறையியலாக்கம் போன்ற அனைத்தும் கட்டி எழுப்பப்பட்டன. இவைகள் எமது பாரம்பரியத்தின் செல்வங்கள். ஆனால் அப்படியே காப்பதல்ல, போதிய சம்மதத்துடன் காலத்திற்கேற்ப மாற்றப்படவும் வேண்டும்.

5. எமது காலத்தில் நடந்தேறிய 2ஆம் வத்திக்கான் சங்கம் முக்கிய மாற்றங்களுக்கு வழிதிறந்து ஊக்கமும் கொடுத்திருக்கின்றது. எமது புதுப்பித்தல் முயற்சிக்கு இவைகள் இன்றியமையாத வழிகாட்டியாக அமைகின்றன.

6. இன்றுவரையும் எமது சூழலில் மத, உலக, உண்மை நிலைகளைப்பற்றி நாம் கொண்டிருந்த அணுகுமுறையும் தொடர்புகளும் மாற்றப்பட வேண்டுமென்று சங்கம் வற்புறுத்துகிறது.

7. தமிழ்க் கிறிஸ்தவர்கள் சைவ மதத்தினரை எதிரிகளாகவோ, ஆன்ம காரியங்களில் ஏதோ குறைந்தவர்களாகவோ, கணிப்பதை மாற்ற வேண்டும்.

8. தமிழ் உலகிலே மனித வாழ்வுடன் தொடர்பான அனைத் திலும், கிறிஸ்தவ கண்ணோட்டத்தையும், விமர்சனத்தையும், பங்களிப்பையும் கொடுத்து உதவ வேண்டும்.

9. இற்றைவரை செய்யப்பட்ட பண்பாட்டு மயமாக்குதல், எமது அந்நிய முகத்தையும் சாயலையும் ஓரளவிற்கு மாற்றி இருக்கின்றன. ஆனால் அதை மிகைப்படுத்தி வழிபாட்டின் மையப் பொருளை மழுங்கடிக்காது, மட்டுப்படுத்துவது அவசியம்.

10. எம்மை சில வழிகளில் மாத்திரம் புதுப்பித்து அழகு படுத்தினால் போதாது. கிறிஸ்துவின் நோக்கத்திற்கு இணங்க, இறையரசை இவ்வுலகில வரச் செய்ய, உலக திருஅவை சங்கத்தின் ஊடாக கொடுத்த அழைப்பை பின்பற்றுவதே எமது நோக்கமாகும்.

10.3 தமிழ்த் திருஅவைகளின் தூர நோக்கம், எமது சமூகத் தையும் உலகையும் இறையரசை நோக்கி நகர்த்துவதற்காகவே

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் நோக்கம், திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையை - அதன் அமைப்பை, வாழ்வை, வழிபாடுகளை, சீடர்களை ஊற்றின் நோக்கத்திற்கு இணங்க புதுப்பிப்பதும், அதனூடாக கிறிஸ்துவின் இறையரசுத் திட்டத்தில், உலகத்தையும் மனுக்குலத்தையும் மீட்பின் வழிக்கு கொண்டு வரும் கருவியாக செயற்பட வேண்டுமென்பதே.

ஆகையினால் ஒரு பக்கத்தில் கிறிஸ்தவர்களின் சீர்திருத்தமும், திருஅவைகளின் சீர்திருத்தமும். மறுபக்கத்தில், எம்மைச் சூழ்ந்த தமிழ் உலகத்தினதும், நாம் வாழும் தீவினதும், பரந்த உலகத்தினதும் சீர்திருத்தமும் ஆகும். ஆகையினால், கிறீஸ்தவர்களும் ஆன்மீகத் தலைவர்களும் சேர்ந்து, முதலில் திருஅவைக்குள்ளே செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி சிந்திக்கிறோம். மறுபக்கத்தில், மத எல்லைகளை கடந்து, எம்மைச் சூழ்ந்த சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் செய்யவேண்டியவை நிறைய இருக்கின்றன. இவைகளே நம்மிடமிருந்து துணிவை கோரும் சவால்கள்.

திருத்தந்தை பிரான்சிஸ் இயேசுவை ஒரு தீவிரவாதியாக **(radical)** அண்மையில் குறிப்பிட்டார். அதற்கு காரணமென்ன? புரட்சியான போதனை மாத்திரம் அல்ல, அன்றைய உலகின் அமைப்புகளுக்கு இசைந்தவராக இல்லாது. மனிதருக்கும் அவர்களின் அமைப்புக்கும் மாறான சவாலான வழிகளையே போதித்து சாதித்தவர்.

இறைமகன் இயேசு, மனிதனின் அடிப்படைக் குறைபாடான பாவ நிலையிலிருந்தும் அதனாலே ஏற்பட்ட விளைவுகளிலுமிருந்து மீட்கவே, தனது இறைஅரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து, தம்மையே சிலுவை மரணம் மட்டும் அர்ப்பணித்தார். மனிதருடைய பாவங்கள் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த உலகத்தின் நிலைமைகளுடன் பின்னிப்பிணைந்து இருந்தன. அவருடைய போதனையும் சாதனையும், மனித வாழ்வில் தீய சக்திகளுக்கெதிராக போராடுவதும், மனுக்குலத்தை தமது இறையரசுத் திட்டத்தில் மீட்பதுமாகும். புரட்சியான சவால் நிறைந்த நற்செய்தி விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற அழைப்பும், அவரின் சிலுவை மரணமும் மனிதருக்கு சவாலாக அமைந்தன. அவரின் புரட்சியான இலட்சியத்திற்காகவே சீடர்கள் குழமங்கள் திரு அவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 10.4 தமிழ்த் திரு அவைகளின் சீர்திருத்தமும், தமிழ் சமூகத்தின் சீர்திருத்தமும், கிறீஸ்தவ ஆன்மீகத் தலைவர்களின் இரட்டைப் பணியாகும்

திருஅவைகள் இன்றைய உலகில் கிறிஸ்து ஆரம்பித்த இறையரசுக்கு பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்தவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன, இயங்குகின்றன. இப்படி உண்மையான புரட்சியை ஏற்படுத்தும் அமைப்பிலேயே இன்று ஆயர்கள் குருக்கள் துறவியர் தலைவர்களாக, வழிகாட்டிகளாக, பணி புரிய அழைக்கப் படுகின்றனர்.

ஆன்மீக பணியும் அத்துடன் வரும் ஆன்மீக அருளும் அதிகாரமும், இயேசுவின் புரட்சி ஏற்படுத்தும் இலட்சியத்தை முன்னெடுக்கவே இறைவனால் வழங்கப்படுகின்றன.

ஆகையினால் இந்த இயேசுவைப் பின்தொடரும் சீடர்களும், விசேடமாக இச்சீடர்களின் தலைவர்களும் தீவிரவாதிகளாக வாழவும், செயற்படவும் அழைக்கப்படுகின்றனர். தலைவர்களாக அழைக்கப்பட்ட நாங்கள் முதலிடத்தில் ஆர்வமுள்ள சீடர்களாகவும் ஆவியின் துணிவில் பணியாளராகவும் வாழ அழைக்கப் படுகின்றோம்.

புனித இராயப்பரே தனது கடிதத்தில் தெளிவாக சுட்டி காட்டுகிறார். உங்களிடம் ஒப்படைக்கபட்டவர்களை அடக்கி ஆளாமல், மந்தைக்கு முன்மாதிரியாய் இருங்கள் என்கிறார். நாங்கள் போதிப்பதை வாழ்ந்து காட்டவும், மக்களை போதனையாலும் சாதனையாலும், நல்வழிகளிலே இட்டு செல்லவும் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இவ்வுலகில் நல்லவர்களென்று தங்களை காட்டி கொள்ளும் தீய சக்திகளுக்கும், அத்தீய சக்திகளினால் துன்புறும் மக்களுக்குமிடையில், கிறிஸ்துவினால் அழைக்கப்பட்ட நாங்கள் - குருக்கள் துறவிகள் - எங்களை இரு பகுதியினரும் நல்லவர்கள் என்று கணிப்பதற்காக, அல்லது மதிப்பதற்காக, மௌனம் சாதிப்பது, செயலற்ற நடுநிலைமை வகிப்பது, எமது அழைத்தலுக்கு முரணான துரோகச் செயலாகும். துன்புறுவோரின் சார்பில் தீய சக்திகளை எதிர்த்து போராடுவதே எமது கடமை!

எமது வழிகாட்டும் பொறுப்பை மறைமாவட்டம் அல்லது பங்கு நிர்வாகத்தில் மாத்திரம் செய்தால் போதாது. காலத்தின் குறிகளை அறிந்து, நற்செய்தி ஒளியில் வியாக்கியானம் செய்து, துணிவுடன் மக்களை வழிநடத்த வேண்டும். தலைவர்கள் தனிப்பட்ட குடும்பங்களை நடத்தாவிட்டாலும், எமது உடன் பணியாளர்களைப் பணிக்குடும்பங்களாக ஏற்று, அன்புடனும் பண்புடனும் நீதியுடனும் நடந்து கொள்வோமாக.

எமது வழிநடத்தலை அமைப்பு மயமாக்கி நிர்வாகத்திலே அடக்கி விடக்கூடாது. திருஅவைகள் அமைப்பு உருவெடுத்ததன் காரணமாக, அவைகளின் கடமைகள் பொறுப்புகளை வெவ்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்குழக்களாக நிர்வாகித்து வழி நடத்துவது தேவையாக இருக்கின்றது. ஆனால் அக்குழுக்களின் தீர்மானங்கள், மேற்கூறப்பட்ட மாற்ற முடியாதவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மாற்ற கூடியவற்றையே மாற்ற வேண்டும்.

கடந்த காலத்திலே திருச்சபையின் தலைவர்கள் எங்கள் மதத்தின் மதில்களுக்குள்ளே, பாதுகாப்பாக இருந்துகொண்டு, சடங்குகளை மாத்திரம் சிறப்பாகக் கொண்டாடினோம். சமூகத்திலே உள்ள பிரச்சினைகளை பற்றி, பத்திரிகைகள் ஊடாக, வேலிக்கு பின்னால் நின்று வேடிக்கை பார்பபது போல், சில அறிக்கைகளை அல்லது கண்டனங்களை மாத்திரம் வெளியிட்டோம். சரியா - பிழையா, நீதியா - நீதியற்ற தன்மையா, இது ஒரு ஒடுக்குமுறையா, மனுசீகத்திற்கு உதவுமா, மனுசீகத்தை வளர்க்குமா, இவைகளைப் பற்றி நாம் பகிரங்கமாக கருத்துத் தெரிவிப்பதில் மிகவும் மிகவும் பின்வாங்கி, ஒன்றில் மௌனம் சாதித்தோம்; அல்லது நடுநிலைமை என்று சொல்லிப் பதுங்கியிருந்தோம். இது மிகவும் வெட்கக் கேடான ஒரு செயல். இது தீவிரவாதி கிறீஸ்துவின் நோக்கத்திற்கு எதிரான ஒரு செயல்.

இதே சமயத்திலே, எமது உலகை உற்று நோக்கு வோமாகில், எமது கவனத்தையும் ஈடுபாட்டையும் எதிர்பார்க்கும் பணிகள் ஏராளமாயிருக்கின்றன.

*இந்த உலகத்திலே தீயவர்களின் செயல்களிலும் பார்க்க நல்லவர்கள் செயற்படாமல் இருப்பதினாலேயே, கூடிய தீமை விளைகின்றது* - என்று திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் சொல்லுகிறார். உண்மைதான். சனத்தொகையில் அதிகமாயிருக்கும் நல்லவர்கள், செயற்படாமல், பதுங்கி இருக்கும் பொழுது, சில தீயவர்கள் மாத்திரம் செயற்பட்டு உலகத்தைப் பிழையான போக்கிலே கொண்டு போகின்றார்கள். இந்த நிலைமையை நாங்கள் நன்றாக எமது சூழலிலும் உணரவேண்டும். இலங்கையிலே தமிழ் உலகிலே, என்ன நடக்கின்றது?

மனித வாழ்விற்கும் உரிமைக்கும் முரணான தீர்மானங்கள் செயல்கள் அரசியல்வாதிகளினால், அல்லது பெரும் பான்மை மக்களினால் முன்னெடுக்கப்படும் பொழுது, கிறிஸ்தவர்கள், தொகையில் குறைந்தவர்கள் என்பதற்காக, மௌனம் சாதிப்பதா? இல்லவே இல்லை! எமது மௌனம் சம்மதமாக கருதப்படும்.

இங்கேதான் எமது கிறிஸ்தவ நம்பிக்கையின் வீரமும் துணிவும் வேண்டப்படுகின்றது. ஆலயத்தினுள் ஒலிபெருக்கி மூலம் நற்செய்தியை போதிப்பது சுலபம். ஆனால் நற்செய்தியின் ஒளியில், உலகத்தில் நடப்பனவற்றை உற்று நோக்கி, தீமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்மைக்கும் எதிராக நல்லவற்றை உண்மையை கூறுவது - அதுவே தேவையான பொருத்தமான நற்செய்திப் பணியாகும். இப்படியாக நற்செய்தி பணி புரிவது, மற்றைய இனத்தவரை மதத்தவரை புண்படுத்தவோ எதிர்ப்பதோ அல்ல. தீமைக்கு எதிராகவும் உண்மை நன்மைக்கு சார்பாகவும் அவர்களையும் ஊக்குவிப்பதாகும்.

இயேசு சொன்னார் - உலகெல்லாம், (கோவில்களுக்குள்ளே மாத்திரம் அல்ல) சென்று, நற்செய்தியை அறிவியுங்கள்.

## 10.5 புதுப்பிக்கும் புரட்சியான பணிக்கு ஆயத்தமாக திருஅவைக்குள்ளே தலைவர்களும் மக்களும் தம்மை புனர்நிர்வாணம் செய்து மீளக்காண (**Re-habilitation, Re-discovery**) வேண்டும்.

திருஅவையின் சரித்திரத்திலே, கிறிஸ்துவின் சீடர்களான பொதுநிலையினருக்கும், அவர்களுக்குத் தலைவர்களாக வழிகாட்டி களாக திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர் குருக்கள் துறவிகளும், தம்முடைய சரியான இடத்தையும் பணிகளையும் மீளக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அதை நிவிர்த்தி செய்ய 2ஆம் வத்திக்கான் சங்கமும், அதனை தொடர்ந்த ஆயர் சங்கங்களும் பொதுநிலையினர் கூட்டங்களும் முயற்சிக்கின்றன.

திருஅவையின் சரித்திரத்தில் வாழ்விலும் பணியிலும் தலை வர்களும் மக்களும், ஒருவரை ஒருவர் திருஅவைக்குள்ளே தள்ளும் நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. திருநிலைப் படுத்தப்பட்டவர்கள் மக்களால், ஒரு வகையில் பீடத்தின் பின்தள்ளப்பட்டு உயர்ந்த அதிகாரிகளாக மதிக்கப்பட்டனர்: மக்கள், ஒரு வகையில், திரு நிலைப்படுத்தப்பட்டவர்களால் ஆலயத்திற்கு வெளியே தள்ளப்பட்டு, திருஅவையில் முக்கியமற்றவர்களாக, அமைந்து நடப்பதே அவர்களின் முக்கிய கடமையாக இருந்தது.

இந்நிலையில்தான், நாங்கள் எல்லோரும் வாழும் திருஅவை யையும் எமது பணித்தளமான சமூதாயத்தையும் புரட்சியாக புதுப் பிக்க வேண்டுமாயின், திருஅவைக்குள்ளே எல்லா அங்கத்தினரும் துணிவாக 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் அறிவுரைகளை உள்வாங்கி, ஆவன செய்ய வேண்டும்.

சில வருடங்கள் உரோமையில் தங்கி, எனது இறையியல் பண்டித பட்டத்திறகாக, பொதுநிலையினரின் அழைத்தலைப் பற்றி ஆராச்சி செய்தேன். 1977ஆம் ஆண்டில் நான் வெளியிட்ட முதல் புத்தகம் - *முகமற்ற பொது நிலை பணியாளரை அடையாளங்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காணுதல் ( Recognizing the Faceless Ministers in the Church)*

1987ஆம் ஆண்டு பொதுநிலையினரைப் பற்றி உரோமையில் நடைபெற்ற ஆயர் சங்கத்திற்கு ஆயத்தமாக, 1986ஆம் ஆண்டு ஆசிய ஆயர்கள் யப்பான் தலைநகரான ரோக்கியோவில் கூடினர். அக்கூட்டத்திற்கு ஆரம்ப உரை நிகழ்த்தும் பாக்கியம் பெற்றேன். (Keynote address to the FABC plenary meeting, 1986, Tokyo). பின்பு ஆயர் சங்கத்தில் (1987 Synod on laity) பங்கு பற்றிய ஆசிய ஆயர்களுக்கு, ஒரு மாதமாக உரோமையில் தங்கி மகிழ்ச்சியுடன் ஆலோசகராகப் பணி செய்தேன்.

## 10.6 எம்மை ஊக்குவிக்கும் ஒரு உதாரணம் - தென் அமெரிக்க திரு அவைத் தலைவர்களின் துணிவு

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் தென் அமெரிக்க நாடுகளின் ஆயர்களும் குருக்களும் ஒன்றாக இணைந்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்கள். அவர்கள் பெறு நாட்டின் இறையியலாளர் குஸ்ராவோ குற்றியரஸ் (Gustavo Guttierez of Peru) போன்ற இறையியலாளரினால் ஊக்குவிக்கப்பட்டு, வறியவர் ஒடுக்கப்பட்டவர்கள், அடிமையாக்கப்பட்டவர்களின் குரல்களுக்குக் காது கொடுத்துக் கேட்டு, அவர்களுக்காகக் குரல் கொடுக்க வீரத்துடன் முன்வந்தார்கள்.

திருச்சபை இரட்சகர் இயேசுக்கிறீஸ்துவின் பெயரிலே இயங்குகின்ற ஒரு சபை. எங்களை வழிநடத்தும் இறைவன் தம்மை விடுதலை அளிக்கும் இறைவனாக இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்படுத்தினார். இயேசுக்கிறீஸ்துவும் மனித குலத்திற்கு பாவ அடிமைத்தினத்திலிருந்து விடுதலை அளிக்கவே வந்தார். அவருடைய திருச்சபையும் மனித குலத்திற்கு, பாவத்திலிருந்தும், அதன் அடிமைத்தனங்களிலுமிருந்து விடுதலை கொண்டுவருவதற்காக இருக்கின்றது; இயங்குகின்றது.

ஆகையினாலே கிறீஸ்துவின் திருஅவை தமிழ் மக்கள் மத்தியிலும், தனிப்பட்ட பாவங்களில் இருந்து மாத்திரமல்ல பாவத்தின் விளைவுகளான அடிமைத்தனங்கள் அநீதிகள் வறுமை போன்ற குறைகளை, இனங்கண்டு அவைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்து, அவைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினால்தான் திருச்சபை உண்மையான கிறீஸ்துவின் திருஅவையாக இருக்கமுடியும். இதைத்தான் நாங்கள் தற்போது ஓரளவு உணர்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் 1948ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் மக்கள் நீண்டகாலமாக ஓர் அரசியல் போராட்டத்தை நடத்தினார்கள். தமது மனித உரிமைகளுக்காகப் போராடினார்கள். போரில் ஆயிரமாயிரம் உயிர்களைப் பறிகொடுத்தார்கள். அதில் குருக்களும் இறந்தார்கள்.

தமிழ்க் கிறீஸதவர்கள் ஓரளவு மனிதாபிமான பணிகளைச் செய்தார்கள். ஆனால் நடந்த அநீதிகளைப் பற்றி கொடூரங்களைப் பற்றிப் போதிய அளவு குரல்கொடுக்கத் தவறி விட்டார்கள். கிறீஸ்தவ மதம் ஒரு சிறுபான்மை மதம் அல்லது ஐரோப்பிய மதம் என்று சொல்லி, அரசாங்கத்திற்குப் பயந்து ஒதுங்கினார்கள். தலைவர்கள் தங்களை மௌனம் நடுநிலைமை, என்பவற்றால் நியாயப் படுத்தி, மக்களைப் போரினால் அழிய விட்டார்கள். இது மறக்க முடியாத எங்களுடைய கடந்தகால ஒரு பெரும் குற்றமாக இருக்கின்றது.

கிறிஸ்துவின் திருஅவையாக இருந்து கொண்டு நாங்கள் அட்டூழியங்கள், கொடுமைகள் மத்தியிலே மௌனம் சாதித்து எங்களுடைய கடமைகளிலே இருந்து தவறியதால் நாங்கள் எம்முடைய மனிதத்துவத்துக்கும் இனத்திற்கும் கிறிஸ்துவுக்கும் துரோகம் செய்கின்றோம். இதைத்தான் நாங்கள் இப்போது உணரவேண்டி இருக்கின்றது. நாங்கள் விட்ட தவறை, இனிமேலும் செய்யாதிருக்க நாங்கள் விழித்தெழுந்து, தமிழர்கள் வாழும் உலகத்தை நன்றாகப் புரிந்துகொண்டு, அந்த மக்களின் அழுகைக் குரல்களுக்குச் செவிமடுத்து அவர்களின் சவால்களைப் புரிந்து, பொருத்தமான முறையில் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் செய்தியைக் கொடுக்க முன்வரவேண்டும்.

நடுநிலைமை, மௌனம் இவையெல்லாம் நாங்கள் எங்களுடைய மனிதத் தமிழ் கிறிஸ்தவ பொறுப்புகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் கோழைகளின் வழிகள்.

## 10.7 வேதனை அனுபவங்களே எனது நம்பிக்கை உறுதியை பெலப்படுத்தியது.

எனது பணி வாழ்வில் சில வேதனை அனுபவங்களைப் பெற்று எனது நம்பிக்கையில் உறுதியினால் பெலப்படுத்தப்பட்டேன்.

1. *18 வயதிருக்கும் பொழுதே எனது அன்பு தந்தையின் உயர்ந்த சாதி என்ற பெருமையை மறுத்து எனது அதிருப்தியை இரு முறை வெளியிட்டேன்.*
2. *உரோமையில் குருவாகி (1966) இலங்கை திரும்பிய பின்பு, ஆயர் எமிலியானுஸ்பிள்ளை என்னை முதற் தடவையாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒரு பங்கிற்கு உதவி குருவாக அனுப்பினார். அங்கே ஒரு வாலிபனை கிறிஸ்தவனாக மதம் மாறி திருமணம் செய்வதற்கு இருவாரங்கள் ஆயத்தப்படுத்தி, திருமணத்திற்கு வந்த மணமக்களுக்கு, உட்கார இரு ஆசனங்கள் ஆயத்தபடுத்தினோம். திருமணத்தில் எனது மறையுரைக்கு மணமக்கள் ஆசனங்களில் உட்காராமல், உயர்ந்த சாதியினர்க்குப் பயந்து, தரையில் உட்கார்ந்தனர். நான் செய்தது தவறு என்று எனக்கெதிராக பங்குசபைக் குழு ஆயரிடம் சென்றனர். ஆயர் அவர்களுக்கு கூறிய பதில் - நீங்கள் கூட்டங்களில் சாதியை ஒளிக்க வேண்டுமென்று பேசுவீர்கள். அதைத்தான் சுவாமி செய்திருக்கிறார் என்று கூறி அனுப்பிவிட்டார். இருந்தும் பங்கின் பெரும்பான்மையான உயர்ந்த சாதி கத்தோலிக்கர் இறைவன் சந்நிதானத்தில் எல்லா மனிதரும் இறைவனின் சம உரித்தான பிள்ளைகள் என்பதை ஏற்று கொள்ளவில்லை.*

*குடும்பத்திற்குள்ளும் திரு அவைக்குள்ளும் சாதி வேற்றுமையை எதிர்த்த நான் தமிழருடைய உரிமை போராட்டத்தில் மௌனம் காக்கவில்லை.*

3. போர் நடந்த காலத்தில் விசேடமாக 1986-1996 வரை நான் யாழ்ப்பாணத்திலே இருந்தேன். குருத்துவக் கல்லூரி அதிபராகவும், மறைமாவட்டத்தின் குருமுதல் வராகவும், நற்சமூக நடுநிலையத்தின் தலைவராகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தேன். பாடசாலைகள் கோவில்கள் கூட குண்டு வீசித் தகர்த்தப்பட்டன. அதில் மக்கள் நூற்றுக்கணக்காக மடிந்தார்கள். மக்கள் படிப்படியாக இடம்பெயர்ந்து தங்களுக்குள்ள வற்றைக் கைவிட்டு, இடம்பெயர்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

பசி, வறுமை, வீடில்லா நிலைமை இப்படியான நிலை மைகளில் மக்கள் தவிக்கும் பொழுது, எம்மவர் எத்தனைபேர், திருச்சபையின் அமைப்பிலே இருந்து கொண்டு, திருச்சபையின் அதிகாரத்திலே இருந்து கொண்டு, போதியளவு குரல் கொடுக்க வில்லை. எங்களுடைய கோயில்களையும் அல்லது குருக்கள் துறவிகள் இல்லங்களையும்தான் பாதுகாத்தோம். எழிய மக்களுடைய நிலமையை புரிந்து, உணர்ந்து, அவர்களைப் பாதிக்கும் சக்திக ளுக்கு எதிராகக் குரல்கொடுக்கப் பயந்து நின்றோம்; ஒதுங்கி நின்றோம்; மௌனம் சாதித்தோம். இவைகளெல்லாம் எமது பெரிய தவறுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் புனித யாகப்பர் ஆலயத்தின்மேல் குண்டு வீசப்பட்டது; ஞாயிற்றுக்கிழமை பூசை முடிந்ததும் நடுக்கோயிலில் குண்டு வீசப்பட்டு 39 பேர் மடிந்தார்கள். நவாலியில் புனித பேதுருவானவர் ஆலயத்தில், குண்டு வீசப்பட்டது; 160 மக்கள் மடிந்தார்கள். இவைகளைப் பார்க்கத்தன்னும் தலைமைத்துவ ஆயருக்கு விருப்பம் இருந்ததில்லை. அதனை அவர் அரசியல் என்று கணித்துத் தவிர்த்துக் கொண்டார். வெளிநாட்டு பிரதிநிதிகள் தம்மை தரிசித்தால் நாட்டு நிலைமைகளை விளக்கினார். இப்படியாக கிறீஸ்தவத் தலைவர்கள், உள்நாட்டு அதிகாரிகளையும் அவர்களின் அநீதியான செயல் களையும் கண்டிக்காது மௌனம் சாதித்தது பெரும் தவறு.

அதற்கு மேலாக இன்னும் சகல விதமான மக்களும் சகல மதத்தைச் சேர்ந்தவர்களும் முஸ்லீம்கள், இந்துக்கள் எல்லோரும் துரத்தப்பட்டார்கள். வீடின்றி, உணவின்றி, உடையின்றி தவித்த இவர்கள் மீது நாங்கள் காட்டிய கரிசனை மிகவும் மிகவும் சிறிது. போதியளவு நாங்கள் செய்யவில்லை.

இந்தக் கொடூரச் செயல்களைச் செய்யும் அரசாங்கத்தையோ அதன் சக்திகளையோ, நாங்கள் கண்டிக்கவில்லை. எங்களுடைய பகுதியிலே தமிழர்கள் தமிழ் தலைமைத்துவத்திலே புலிகள் இருந்த போதும்கூட அவர்களைப் போதியளவு நாங்கள் விமர்சிக்கவில்லை. அவர்களிலேயும் குறைகள் இருந்தது. ஆனால் அதை நாங்கள் எடுத்துக் கூற முன்வரவில்லை. நாங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொண்டோம்.

இவ்வளவு சம்பவித்தும் திருச்சபை கிறிஸ்துவின் திருஅவை யாகச் செயற்படவில்லை என்றே நான் கருதி மிகவும் வருந்து கின்றேன். என்னுடைய ஆளுமையும் என்னுடைய குரலும் கட்டுப் படுத்தப்பட்டிருந்தன. எனக்கெதிராக எத்தனையோ சிங்களவர் குரல்கள் எழுப்பினார்கள். நான் குருவாக அல்ல; அரசியல்வாதியாகச் செயற்படுகின்றேன் - பேசுகின்றேன் என்று சொல்லி விமர்சித்தனர். ஒரு ஆயரோ குருவோ என்னைப் பாதுகாக்க, நியாயப்படுத்த முன்வர வில்லை. நான் சொன்ன உண்மைகளை அவர்கள் ஏற்று அதற்காக வாதாடவில்லை. கொழும்பிலுள்ள சகல ஊடகங்களிலும் பொய்யாக விமர்சிக்கப்பட்டு எனக்கெதிராக எத்தனையோ விதமான பொய்க் குற்றச்சாட்டுக்கள் எழுந்த பொழுது தன்னும் அவைகளுக்கு எதிராக எவரும் குரல் கொடுக்கவில்லை. நானாகவே எழுத்திலும் பேச்சிலும் இயன்றளவு குரல்கொடுத்தேன். ஆனால் பொய்ப் பிரசாரங்களை அடக்க முடியவில்லை. அதன் காரணமாகத்தான் நான் இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டி வந்தது.

நான் 1986ஆம் ஆண்டு தொடக்கம் எமது மக்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகத்தான் குரல் கொடுத்தேன். மக்கள் அழியும் பொழுது அவர்கள் சார்பாகத்தான் குருமுதல்வராகவும் ஒரு தமிழ் மகனாகவும் குரல் கொடுத்தேன். ஆனால் நான் கொடுத்த விமர்சனக் கருத்தைப் புலி கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். ஏனென்றால் அவர் கள் அரசாங்க முறைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார் கள். தமிழ் மக்களுக்குச் சார்பான என்னுடைய அந்த கருத்துக்களை அவர்கள் தங்களுக்குச் சார்பாக எடுத்துக் கொண்டார்கள். அதே நேரத்திலே அரசாங்கம் எனது விமர்சனங்களை, புலிகள் பக்கம் சார்ந்து நிற்கின்றேன் அல்லது புலிகளுக்காகப் பேசுகின்றேன் என்றும், நான் ஒரு பயங்கரவாதி என்றும் சொல்லி என்னைக் கணித்தார்கள், கண்டித்தார்கள், தூற்றினார்கள்.

இப்படியாக இரண்டு பகுதியும் - விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் - என்னைத் தவறாகக் கணிப்பிட்டதன் காரணமாக, அதாவது நான் எங்களுடைய மக்களுக்கு, மக்கள் சார்பாகவே அவர்களுக்காகக் குரல்கொடுத்தேனே ஒழிய, புலிகளுக்காகவோ அரசாங்கத்திற்காகவோ சார்பாகவோ எதிராகவோ குரல்கொடுக்க வில்லை. இது தான் உண்மை. இன்றைக்கும் அதுதான்.

நான் என்னுடைய மக்களுக்காக குரல் கொடுக்கும் பொழுது, மற்ற மக்களைத் தாக்கியதில்லை. நான் ஒரு அரசியல்வாதியுமல்ல ஒரு கட்சியைச் சார்ந்தவன் அல்ல அல்லது ஒரு உலக அமைப்பைச் சார்ந்தவன் அல்ல. நான் கிறிஸ்துவின் ஒரு சீடனாக, சீடர்களின் குழுமமான திரு அவையின் ஒரு தலைவராக என்னுடைய மக்க ளுக்காகக் குரல் கொடுக்கும்பொழுது, அது எனது வல்லமையால் அல்ல. இயேசுக்கிறிஸ்துவின் உந்துசக்தியின் வழியாகத்தான் குரல் கொடுக்கின்றேன். அதைத்தான் இன்றும் செய்கின்றேன். தொடர்ந்தும் செய்ய இருக்கின்றேன்.

## 10.6 துணிவான நம்பிக்கையும், வேதனைகளும், திருஅவையின் புதுப்பித்தலுக்கு இன்றியமையாதவை.

கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறைமகன் கிறிஸ்துவில் வைத்திருக்கும் நம்பிக்கையே சக்தியும் சாரம்சமும். அந்தியோக்கு நகரிலேதான் கிறிஸ்துவின் சீடர்கள் முதற் தடவையாக கிறிஸ்தவ ரென்று அழைக்கப்பட்டனர். அதுவரை சீடர்கள் விசுவாசிகள் அல்லது நம்பிக்கையாளர்கள் என்றே அழைக்கப்பட்டனர். இயேசு போதித்த வாழ்ந்து காட்டியவற்றில் நம்பிக்கை உடையவர்களே நாங்கள். இந்த நம்பிக்கை துணிவுடையதாக இருக்க வேண்டும். வார்த்தை யினால் நாம் எழுந்து நின்று, எமது நம்பிக்கையை பல முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கமாக அறிக்கையிடலாம். ஆனால் வாழ்விலும் நடத்தையிலும் செயலிலும் அதை நிரூபிக்க வேண்டும். அது தான் தேவை!

மௌனம், நடு நிலைம, என்ற போர்வையால் எம்மைப் பாதுகாக்காது, துணிவுடன் எமது நம்பிக்கையைத் திரு அவை புதுப்பிக்கும் முயற்சியிலும் கடைப்பிடிக்க வேண்டும். விவாதங்கள், எதிர்ப்புகள், வேதனைகள் அனுபவிக்க வேண்டி வரும். எமக்கு சிலுவையின்றி இறுதி வெற்றி கிடையாது. தேவையான மாற்றங்களை கூறுவது அல்லது போதிப்பது சுலபம். ஆனால் செயற்படுத்துவது கடினம். அதற்கு ஏற்ற நம்பிக்கை திடனும் துணிவும் வேண்டும்.

10.7 தமிழ்த் திருஅவைகளின் சீர்திருத்தமும், தமிழ்ச் சமூகத்தின் சீர்திருத்தமும், கிறீஸ்தவ ஆன்மீகத் தலைவர்களின் இரட்டைப் பணியாகும்.

10.8 எனது கடந்த கால வாழ்வில் நான் செய்த தவறுகளுக்கு மன்னிப்பு வேண்டுகின்றேன்.

மேலே பகிர்ந்து கொள்ளபட்ட கருத்துகள் அதிகமாக எனது அனுபவரீதியாகப் பெற்ற பட்டறிவுகள். ஆகையினால் எனது நீண்ட குருத்துவ பணி வாழ்வில் உயர்ந்த பொறுப்புகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தும், தகுதி உடையவனாக நான் எப்பொழுதும் நடந்து கொள்ளவில்லை, இயேசுவின் சீடத்துவத்தை வாழ்வில் தெளிவாகக் கடைப்பிடிக்கவில்லை என்பதையும் உணருகின்றேன். அதற்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுகின்றேன். ஆனால் நான் அனுபவ அறிவினாலும் வேதனையாலும் பெற்ற உறுதிகளிலே திடனாகத் தொடருவேன்.

எனது வாழ்வின் கடைசிப் பகுதியில், வாழ்வைத் திரும்பிப் பார்த்து, இறை ஒளியில் சுய விமர்சனம் செய்வது ஒரு அருட் கொடை. அதை உங்கள் அனைவருக்கும் விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அத்தியாயம் 11*

# 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில் மனித மீட்பும் உலக நிலைகளும்

11.1 கத்தோலிக்க திருஅவையின் சங்கம் ஒன்று, முதல் முறையாக, உலக உண்மை நிலைமைகளுடன் எமது உறவை ஊக்குவித்தது.

16ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய மறைபரப்பாளர்களால் தாங்கள் அன்று ஐரோப்பாவில் அனுபவித்த திருஅவைகளையே எமது மண்ணிலும் தமிழ்த் திரு அவைகளாக மீள் நடுதல் செய்தனர். அதிலிருந்து எமது நம்பிக்கை வழிபாடுகள் வாழ்க்கை முறைகள் அனைத்தும் உரோமைத் தலைமைப் பீடத்தினால் வழிநடத்தபட்டு வழந்திருக்கின்றன.

ஆனால் நாம் வாழும் உலகத்தையும் எம்மை சூழ்ந்து வாழும் மக்களின் மதங்களையும், சமூகத்தையும், எங்களை வழி நடத்தி வந்த அரச அமைப்புகளையும் நாம், எமது பார்வையிலும் தீர்மானங்க ளிலும் கணிப்பிடவில்லை. எமது ஆலயத்துக்குள்ளும், பங்கு மக்க ளின் குழமங்களிலும் அடங்கி, கிறிஸ்தவர்கள் தம்மை தனிமைப்படுத்தி வாழ்ந்தனர். சுரங்கக்கூறின், தமிழ்த் திரு அவைகள் ஐரோப்பிய அந்நிய மதமாகவே வளர்ந்தன.

இப்பின்னணியில்தான் 2ஆம் வத். சங்கம், திருஅவையின் வரலாற்றில் முதற் தடவையாக, மனிதர் வாழும் உலகத்தின் உண்மை நிலைமைகளையும் கிறிஸ்துவத்தைச் சூழ்ந்து இருக்கும் மதங்களையும் உலகின் அமைப்புகளையும் கணிப்பில் எடுத்தது. இதற்குச் சங்கத்தில் பங்கெடுத்த தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியாவின் ஆயர்களின் பிரசன்னமும் துணையாயிருந்தது.

இச்சங்கம் தொடங்கியதிலிருந்து முற்போக்கான ஐரோப்பிய கருதினால்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர் - கரு. மோன்ரீனி, கரு. கேணிக், கரு. சுஎனன்ஸ (Card. Montini of Milan, later Pope PaulVI, Card.Koenig of Vienna, Card.Suenens of Belgium) நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இந்த முயற்சியால் *இன்றைய உலகில் திருச்சபை (Church in the modern world), பிற மதங்களுடன் திருச்சபையின் உறவு ( Relation of Church to Non-Christian Religions), மறை சுதந்திரம் (Religious Freedom)* - இவைகளைப் பற்றித் துணிவுடனும், தூரப் பார்வையுடனும், அறிவுரைகளைச் சங்கம் கொடுத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவைகளைச் செயற்படுத்துவதற்கு நீண்ட காலமும், துணிவான ஆய்வுகளும், இன்றியமையாதவை. இற்றை வரைக்கும், பாரம்பரிய வழிகளில் ஐரொப்பாவிற்கு வெளியேயுள்ள நாடுகளையும் அவைகளின் யதார்த்த சூழலை நன்கறியாது வளர்ந்த வத்திக்கான் தலைமைத்துவத்தின் சந்தேக - இழுத்தடிப்புடன் சில மாற்றங்களே, எங்கள் அவைகளிலும் நடந்திருக்கின்றன; இன்னும் துணிவுடன் பல முயற்சிகள் தொடர வேண்டும்.

கிறிஸ்து ஆரம்பித்த இறையரசின் வருகையை நோக்கி நடக்கும் நாம், இந்த உலகில் சந்திக்க வேண்டிய சவால் நிறைந்த உலகத்தைக் கருத்தில் கொண்டே, சங்கம் இப்பயணத்தை ஊக்குவித்திருக்கிறது. இன்றைய பாப்பரசர் பிரான்சீஸ் இந்த முயற்சிக்கு பெரும் ஊக்கமளிக்கின்றார்.

11.2 இப்பயணத்தை ஆரம்பித்துத் தொடருவதற்கு வத்திக்கானிலும் ஆசியாவிலும் சில ஆயத்தங்கள்.

நவீன உலகின் உண்மை நிலைகளுடனும், பிற மதங்களுடனும், கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்களுடனும், கததோலிக்க கிறீஸ்தவர்களும் திரு அவைகளும் தொடர்பு கொண்டு, வாழ்ந்து பணிபுரிய, சங்கம் நடந்து கொண்டிருந்த பொழுதே, பாப்பரசர் 6ஆவது சின்னப்பர் காலத்தில் வத்திக்கானில் ஏற்ற செயற்குழக்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டன (Secretariat for Chrisristian Unity, Secretariat for Inter-religious Affairs).

1971இல் ஆசியாவிலும், ஆசிய ஆயர் சங்கம் (Federation of Asian Bischops Conferences FABC) இப்பணிகளுக்குச் செயற்குழுக்களையும், காரியாலங்களையும் உருவாக்கியது. ஆசிய ஆயர் சங்கத்தின் தலைமையின்கீழ், சர்வமத உறவுகள், சமூக பணிகள், கல்வி, தொடர்பு சாதனங்கள், நற்செய்தி பரப்புரை, போன்ற பல்வேறு செயற்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஆசிய மட்டத்தில் ஊக்குவிப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இவைகளுக்கு உதவி செய்ய ஆசிய இறையியலாளர் குழு (Theological Advisory Committee) 1986இல் தொடங்கப்பட்டது. 1986-1995 வரை, ஆசிய ஆயர் குழுக்களுக்கு இறையியல் ஆலோசகராக, நான் இலங்கை பிரதிநிதியாக அழைக்கபட்டு, பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருந் தேன். பல ஆசிய கருத்தரங்குகளில், விசேடமாக, பொதுநிலை யினரைப் பற்றி யும், சர்வமத உரையாடல்கள் பற்றியும், கருத்தரங்குகளுக்கு பல ஆசிய ஆயர்களினாலே பணி புரிய அழைக்கப்பட்டேன்.

11.3 பிறமதத்தவருடன் கிறிஸ்தவர்கள் நடாத்த வேண்டிய உறவு பற்றி, உரோமைச் சபைக்கும் ஆசிய இறையி யலாளருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நான் கொடுத்த ஊக்குவிப்பு

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஊக்குவிப்பில் ஆசிய ஆயர்களும் இறையியலாளர்களும் எடுத்த முயற்சிகள் உரோமை தலைமைப் பீடத்திற்கும், அதன் இறையியலாளருக்கும் சில சந்தேகங் களை ஏற்படுத்தின. விசேடமாக, பல மதங்களும் கலாசாரங்களும் நிறைந்த ஆசியாவில், ஆசிய திருஅவைகளும் அதன் தலைவர்க ளும் பிற மதங்களுடனும் கலாசாரங்களுடனும் தொடர்பு கொள்வ தற்கு சங்கம் கொடுத்த ஊக்குவிப்பைப் பயன் படுத்திச் சில முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் உரோமையின் தலைமைப் பீடத்திற்கும் அதன் ஐரோப்பிய இறையியலாளருக்கும் ஒரு சில பயமும் சந்தேகமும் தொடர்ந்தன.

இதன் காரணமாக 1988ஆம் ஆண்டில் கருதினால் அறின்சே (Card. Arinze) தலைமையில், உரோமையிலிருந்து இறையியலாளர் குழவொன்று தைலாந்திற்கு வந்து 30 ஆசிய இறையியலாளருடன் உரையாட விரும்பியது. இந்த இரு குழவினருக்கும் இடையில் 4 நாட்கள் சந்திப்பும் உரையாடலும் நடந்தது. இதில் ஆசிய மதங்களுடன் ஆசிய கிறிஸ்தவம் மேற்கொள்ளும் உறவுகள் பற்றி, இரண்டு விரிவுரைகள் திட்டமிடப்பட்டன.

இந்தியாவின் இறையியலாளர் அருள்திரு அமல உற்பவ தாஸ் மதங்களைப் பற்றிய இறையியல் (Theology of Religons) உரை நிகழ்த்தினார். நான் *ஆசியாவில் சர்வமதங்களின் உரையாடல் புதிய திசைக்கு திரும்பி, கிறிஸ்துவியலிலும் திரு அவையியலிலும் ஓர் புதிய திருப்பத்தை நோக்குகின்றது* **( Inter-religious Dialogue in Asia at a turning point towards new Christologies and Ecclesiologies)** என்ற தலைப்பில் உரை ஆற்றினேன். எமது முயற்சிகளையும் முனனெடுப்புகளையும் கேட்டறிந்த ஐரொப்பியருக்கு ஓரளவு வியப்பும் சந்தேகமும் இருந்தன. தொடர்ந்த 4 நாட்களில் விவாதமும் விளக்கமும் சுமூகமாக நடந்தது. ஆசிய இறையியலாளரும் தங்கள் விளக்கங்களை கொடுத்து, எனது கருத்தை உறுதி செய்தனர். ஏல்லாம் சமாதானமாக முடிந்தன.

*பிலிப்பைன்ஸ் தீவின் மனிலாவிலும் (Manila, Philippines) ஜேர்மனி, ஆகனிலும் (Aachen, Germany) எனது உரை பிரசுரிக்கப் பட்டது. ஆனால் தாங்களும் தங்கள் உத்தியேக ஏட்டில் பிரசுரிப்போம் என்று, எனது உரையை எடுத்துச் சென்ற உரோமைக் குழு, அதைச் செய்யவில்லை! மாறாக எனக்கு கொழும்பிலிருக்கும் பாப்பரச பிரதிநிதி மூலம், 8 வினாக்கள் இத்தாலி மொழியில் என்னை விளக்கும்படி அனுப்பியிருந்தனர். (ஆங்கிலம் சரியாக விளங்காத இத்தாலிய இறையிலாளர் டொமினிக் கொழும்பு (Domenico*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Colombo) என்பவர் கேள்விகளை தயாரித்து கருதினாலுக்கு கொடுத் தார் என்று பின்பு அறிந்தேன்) இருந்தும் நான் எல்லா வினாக்களுக்கும் இத்தாலிய மொழியில் பதிலளித்திருந்தேன். அவற்றை தமது மௌனத் தினால் ஏற்றுக் கொண்டனர். ஆனால் என் மேல் இருந்த சந்தேகம் தொடர்ந்தது.

எமது கருத்துக்களின்படி ஆசிய உரையாடல் உறவாடல் முயற்சி கள், உரோமையின் மறைபரப்பு பணிக்கு எதிரானதல்ல, என்பதை விளக்க, மீளவும் எனக்கொரு வேண்டுகோள்? திருஅவையின் நற்செய்தி பரப்பும் பணி தொடருகின்றது என்பதை விளக்கி, அவர்களுடைய சஞ்சிகைக்கும் ஒரு சிறிய கட்டுரையை எழுதினேன்.

1992இல் எனது 25 வருட குருத்துவ ஆண்டில், உரோமை சென்று நற்செய்தி பரப்புவதற்கான அமைப்பின் தலைவர் கருதினாலைச் சந்தித்தேன். எனது உரோமை கல்வி காலத்தில் பெற்ற உதவிகளுக்காக, நன்றி தெரிவிப்பதற்காகவே போனேன். ஆனால் கருதினால் என்னை ஒரு இறையியல் உரையாடலுக்கு அழைத்தார். உடனே நான் - என்னுடைய இறையியல் சிந்தனைகளில் சந்தேக மிருந்தால், நீங்கள் என்னை ஒரு இறையியல் உரையாடலுக்கு அழைத்திருக்கலாம். நான் யாழ் மறை மாவட்ட குரு முதல்வராக வும், புனித சவேரியார் பெரிய குருமட அதிபராகவும் தொடர்ந்து இருப்பதை நான் மீள் பரிசீலனை செய்யவேண்டும் - என்றேன். அதற்கு அவர் அப்படி முடிவிற்கு வர வேண்டாம், என்று சமாதான அறிவுரை கூறி அனுப்பினார்.

ஆனால் 1999ல் மீளவும், நான் ஜேர்மன் பிறாங்பேட் பல்கலை கழகத்தினால் (Uniiversity of Frankfurt) - பண்பாடுகளின் மோதல்கள் (clash of civilizations in Vat.II) என்ற தலைப்பில் 6 மாத விரிவுரையாளராக அழைக்க பட்டேன். இதை அறிந்த கருதினால் றாட்சிங்கர் (Cardinal Ratzinger), பிறாங்பேட் ஆயர் கம்ப்கவுசுக்கு (Bishop Camphaus , Frankfurt) என்னை பற்றிய சந்தேகக் கடித மொன்றை அனுப்பியிருந்தார். அக்கடிதத்தை ஆயர் கம்ப்கவுஸ், நான் பணியாற்றும் முன்ஸ்ரர் மறைமாவட்ட ஆயர் லெட்மனுக்கு (Muenster Diocese Bishop Lettman) அனுப்பினார். அவர் உரோமைக்கு, நான் நல்ல குருவாக ஜேர்மனியில் பணி செய்வதாகப் பதிலளித்தார் என்று இக்கடிதத்தை பற்றிய தகவலை 2 மாதங்க ளுக்குப் பின் உதவி ஆயர் யோசவ் வொஸ் (Bishop Josef Voss) என்னிடம் கூறினார். நான் அதிசயப்படவில்லை.

ஆசிய ஆயர்களும் திருஅவைகளும் எமது சேவையை விரும்பினர், வரவேற்றனர், ரோக்கியோவில் 1986ஆம் ஆண்டு நடந்த முழுமையான கூட்டத்திற்கும் (Keynote address at Tokyo 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*FABC Plenary meeting)* *பிரதம உரையாற்ற அழைத்தனர். ஆனால் உரோமைத் தலைமைப் பீட இறையியலாளர்கள், ஆசிய இறையியலாளரான என் மீது சந்தேகம் கொண்டனர். எவ்வித நட வடிக்கைகள் எடுத்தாலும், தயங்காது என் பணியை இறைவனுக்கும் என் மனச்சாட்சிக்கும் பிரமாணிக்கமாக மனிதருக்கும் தமிழருக்கும் தொடருகின்றேன்.*

ஆகையினால் இன்றைய உலகத்தையும் அதன் மாறிவரும் யதார்த்த நிலைமைகளைப் பற்றியும், விசேடமாக எமது பல்லின, பலமத, சூழலுக்கு, 2ஆம் வத்திக்கான் சங்கம் காட்டிய அறிவுறுத் தல்களைத் திறந்த மனதுடன் உள்வாங்கி துணிவுடன் கடைப்பிடிக்க நாம் தமிழ்க் கிறீஸ்தவர்களும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

### 11.4 ஆசியத் திருஅவைகளைப் பற்றி உரோமையின் தொடர்ந்த கவனம்

2ஆம் வத்திக்கான் சங்கம் கொடுத்த முற்போக்கான ஊக் குவிப்பின் காரணமாக, ஆசிய திருஅவைகளின் முயற்சிகளைப் புரிந்து கொள்வது வத்திக்கான் தலைமைப் பீடத்திற்குக் கடினமாக இருந்தது.

சங்கம் ஊக்கப்படுத்திய சிலவற்றையே நாம் இற்றைவரை செய்திருக்கின்றோம். கிறீஸ்தவத்தின் அந்நிய தோற்றத்தைக் குறைக்க, வழிபாடுகளிலும், தலைமைத்துவத்திலும், மாற்றங்கள் செய்திருக்கிறோம். அவை ஒரு தொடக்கமே தவிர எமது நீண்ட பயணத்தின் முடிவல்ல.

1975ஆம் ஆண்டில் நற்செய்தி பரப்புதலும் பண்பாடுகளும் என்ற தலைப்பில் உரோமையில் ஆயர் சங்கம் நடைபெற்றது. (1975 Bishops Synod on Evangelization and Culture). அதன் முடிவுகளைப் பாப்பரசர் 6ஆம் சின்னப்பர் ஒரு சுற்று மடல் வழியாக வெளிப்படுத்தினார்.

*நற்செய்தியை போதிக்க வேண்டும்* ***(Evangelii Nuntiandi)*** என்ற சுற்று நிருபத்தில்) கிறிஸ்துவின் நற்செய்தி, எமது பண்பாட்டிற்குள் எப்படிச் செயற்படலாம் என்பதை கூறுகையில் - *நற்செய்தி அனைத்துப் பண்பாட்டு எல்லைகளையும் கடந்து, ஒவ்வொரு பண்பாட்டிலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்குடன், மனுவுரு எடுத்துச் செயற்பட வேண்டும் என்கிறார்.*

பாப்பரசர் 6ஆம் சின்னப்பர் 1976ஆம் ஆண்டில் கூறிய நோக்கத்தை தாண்டி, அப்பால் செல்ல வேண்டுமென்கிறார் பாப்பரசர் 2ஆம் அருளப்ப சின்னப்பர், தமது - *விசுவாசமும் பகுத்தறிவும்* - (Fides et Ratio) என்ற சுற்று மடலில் இப்படிக் கூறுகின்றார் - நற்செய்தி பரவும் பொழுது, முதலில் கிரேக்க பண்பாட்டை சந்தித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடன் சிந்தனைகளைப் பரிமாறியது. ஆம். முதலாவது சந்திப்புடன் எல்லாம் முடிந்து விடவில்லை. *இந்திய கிறீஸ்தவத்தின் அறிவுச் சக்தி, காலத்தின், தூரத்தின், எல்லைகளிலிருந்து விடுபட்டு, நிறைவான நற்பொருளை அடையும் அனுபவத்திற்குத் தள்ளப்படுகின்றது. இந்திய கிறீஸ்தவர்கள் கால தூர நிகழ்வுகளினால் குழப்பமடையாது, தாங்கள் இறைவனிடமிருந்து பெற்று கொண்ட செல்வங்களின் கதவுகளைத் திறப்பதற்கு இதுவே தகுந்த நேரம்.* **(An immense spiritual impulse compels the Indian mind to an acquiring of that experience which would, with a spirit freed from the distractions of time and space, attain to the absolute good. This is the time, above all for Indian Christians, to unlock these treasures from their inheritance. (John Paul II, *Fides et Ratio*, 72)**

இந்தச் சவால் நிறைந்த முயற்சியில் தமிழ் கிறிஸதவர்களாகிய நாமும் எமது பங்கை செய்ய அழைக்கப்படுகின்றோம்.

11.5 எல்லா மனிதருக்கும் ஒருவரே இறைவன்; மீட்பளிப்பவரும் அவரே!

அனைத்து இனத்தாரும் இறைவனின் படைப்புகள் அவரின் பிள்ளைகள் மார்க்கங்களும், மதங்களும், இறைவெளிப்பாட்டிலிருந்து, மனிதரால் வெவ்வேறு வடிவத்தில் உருவாக்கப்பட்டவை. தமிழரின் மதச் - சூழலை நோக்கும் பொழுது, தமிழ்க் கிறிஸ்தவர்கள் மனித மீட்பைப் பற்றிய நம்பிக்கையையும், பிற மதங்கள் மட்டில் இருக்க வேண்டிய அணுகு முறைகளையும் மீளாய்வு செய்வது பொருத்தமானது. கிறிஸ்தவர்கள் இம் மீளாய்வினால், தமது கிறிஸ்தவ நம்பிக்கையைப் பெலவீனப்படுத்தி விடுவோம் என்னும் பயம் தேவையற்றது. மாறாக, இறைவனின் மீட்பைப் பற்றியும், அதில் மதங்களின் பணியைப் பற்றியும், எமது பார்வையை விரிவு படுத்தும் பொழுது, நிச்சயமாக நாம் நமது நம்பிக்கையில் விரிவடைவோம்; பெலமடைவோம்; தேவையற்ற பயமும் ஒழியும்.

மனிதரினால் உருவாக்கப்பட்ட மதங்கள் எல்லாம், இறைவெளிப்பாட்டை ஊற்றாகக் கொண்டு நல்ல நோக்குடன், மனித உன்னத நலனுக்காக, உருவாக்கப்பட்டன. அவைகளிடையே மனித பெலவீனத்தின் காரணமாக, சில பிழையான நடைமுறைகள் புகுந்திருக்கலாம், கடைப்பிடிக்கபபட்டும் வரலாம். இது சர்வ சாதாரணம். கிறிஸ்தவத்திலும் இது நடந்திருக்கின்றது, இனிமேலும் இடம் பெறவும் கூடும். ஆகையினாலத்தான் ஒரு மதமும் மீட்பு கொடுக்க முடியாது. ஆனால் மீட்பின் வழிகளைக் காட்டி, உதவி கொடுத்து, ஊக்குவிக்கும். இம்மார்க்கங்களை அல்லது மதங்களை, மனச்சாட்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றினால் இறைஇரக்கத்தில் மீட்பை அடையலாம் என்று கிறீஸ்தவம் கற்பிக்கின்றது.

இதைத் தெளிவாக்க, 2ஆம் வததிக்கான் சங்கம், திருஅவை பற்றிய ஏட்டில் 16ஆம். இல. பின்வருமாறு கூறப்படுகின்றது.: *தாங்கள் அறியாத கடவுளை சாயல்களிலும், உருவங்களிலும், தேடுபவர்களிடமிருந்தும் அவர் வெகு . தொலைவில் இல்லை. ஏனெனில் அனைவருக்கும் உயிரையும், மூச்சையும், மற்ற அனைத்தையும், கொடுப்பவர் அவரே.*

*மீட்பராகிய அவர் எல்லா மனிதரும் மீட்புப் பெற வேண்டுமென விரும்புகிறார்.(1தி.2:4) தங்கள் குற்றம் எதுவுமின்றி கிறிஸ்துவின் நற்செய்தியையும் அவரது திருச்சபையையும் அறியாதவர்கள், நேர்மையான உள்ளத்துடன் கடவுளைத் தேடி, மனச்சான்றின் குரலில் கடவுளின் திருவுளத்தை அறிந்து ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால் நிலை வாழ்வைப் பெறுவர். (தி.ப. 16)*

*மேலும் தங்களது குற்றத்தினாலன்றி, வெளிப்படையாகக் கடவுளை இன்னும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும், நேரிய நெறியிலே கடவுளின் அருளின் துணையோடு நடக்க முயல்பவர்களுக்கும் அனைத்தையும் காக்கும் கடவுள் மீட்பிற்குத் தேவையான உதவிகளைத் தர மறுப்பதில்லை.*

இச்சங்க அறிவுரைக் கண்ணோட்டத்தில்த்தான், கிறிஸ்தவர்களும் இறைவனைப் பற்றியும், இரட்கணியம் பற்றியும், திருஅவையைப் பற்றியும் கொண்டிருந்த கடந்த காலப் பார்வையைப் புதுப்பித்து நடந்து கொள்ள வேண்டும். இப்பார்வையில் கிறிஸதவர்களின் திருஅவைகளின் பணி என்ன?

11.6. நற்செய்தி விழுமியங்களை ஒளியாகவும், உப்பாகவும், கொடுப்பதே எமது நோக்கம் - மத மாற்றம் அல்ல

ஆகையால் கிறிஸ்தவம் இன்று மதப்பரப்புரை அல்லது மதமாற்றம் செய்கின்றதா? இல்லை.

கிறிஸ்தவம் இன்று செய்வது, இயேசுவின் நற்செய்தியை வார்த்தையினால் போதிப்பதும், போதிப்பதை உரிய இடத்திலும் முறையிலும் மக்கள் மத்தியிலே சமுதாயத்திலே வாழ்வால் வாழ்ந்து, மனித சமுதாயத்தை இறையரசின் வருகைக்காக ஆயத்தம் செய்வதே. அதாவது, இறைஅரசின் வருகைக்காக, இயேசு போதித்த, சுட்டிக் காட்டிய விழுமியங்களை, வாழ்வில் கடைப்பிடிப்பதும், தமது வார்த்தையாலும், சாட்சிய வாழ்வாலும், மற்றவர்களுக்கு பொருத்தமான நல் வழிகளில் உதவுவதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம் தவிர்ந்த மற்றைய மதங்களையும், அவற்றின் பக்தர்களையும், அவர்களின் இரட்சணியத்தையும் பற்றி, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் விமர்சிப்பதில் பல தவறுகள் இருந்திருக்கின்றன. ஆனால் எம்மை இந்த காலப் போக்கில் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று, உலகத் திருஅவையின் சங்கம் வேண்டுகின்றது..

எல்லா மதங்களும், மனிதரினால் கட்டியெழுப்பப் பட்டாலும், இறைவன் வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்திய ஞானத்தையும், வாழ்வதற்கான வழிகளையும், கொண்டிருக்கின்றன. இக்காரணத்திற்காக, 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில், சர்வமத உரையாடலகள், திரு அவையின் நற்செய்தி பரப்பும் பணியின் ஒரு பாகமாக அமைகின்றது. இதனை சங்கத்தில் பிறமதத்தினருடன் தொடர்பு பற்றிய ஏட்டை சங்கத்தில் முன்னுரைத்தபோதே கருதினால் பேயா இப்படி விளக்கியிருந்தார். (Inter-religious dialogue is part of the evangelizing mission of the church- Card. Bea, in introducing *Nostra Aetatae*- Vat.II document in the Council)

தற்போது ஆசியாவில், பிலிப்பைன்ஸ் தீவுகளில் மாத்திரம் 84வீதம் கிறீஸ்தவர்கள், மற்றைய நாடுகளில் மிக மிகச் சிறு வீதமே கிறீஸ்தவர்கள். இந்தியாவில் 2.5 வீதம், இலங்யையில் 7 சத வீதம் கிறீஸ்தவர்கள். ஆகையினால் ஆசியாவின் திரு அவைகளின் எண்ணிக்கை கூடுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் கிறிஸ்து எமக்களித்த பொறுப்பு - ***உலகெலாம் சென்று இறையரசை வருவிக்கும் நற்செய்தியை போதியுங்கள்*** என்ற பொறுப்பு தொடருகின்றது.

மதமாற்றத்தினால் அல்லது பிற மதங்களுக்கு எதிராக கிறீஸ்தவ திருஅவைகளை வளரச் செய்வதல்ல எமது நோக்கம்;. மாறாக, இறைவன் தமது மகன் இயேசுவினால் ஆரம்பித்த இறையரசை, அவர் காட்டிய வழிகளில், அவருடைய நற்செய்தியைப் பரப்பி, அவர் வாழ்ந்து காட்டிய விதத்தில் ஒளியாகவும் உப்பாகவும் இந்த உலகில் செயற்படுவதே எமது நோக்கம்.

இந்த உன்னத பணியைப் புரிவதற்கு, அமைப்பு மயமாக்கப் பட்டிருக்கும் எமது திருஅவைகளுக்குள் இருந்து கொண்டு, அதன் படிப்பினைகளை விளங்குவதும், அதற்கான மாற்று முயற்சிகளை முன்எடுப்பதும், எம் முன்னிருக்கும் சவாலாகும். இதைத்தான் 2ஆம் வததிக்கான் சங்கம் எமது புதிய இருப்பாகவும் பணியாகவும் (our new existence and mission) விளக்குகின்றது. இதற்காகத்தான் கிறிஸ்தவர்களின் திருஅவை ஆலயத்தில் கூடுகிறது (con-gregate) பின்பு, உலகத்தின் சமூகத்தினுள் அனுப்பப்படுகின்றது ( sent on mission)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இயேசுவை மையமாகக் கொண்டு கூடும் பொழுது, நாம் எம்மை ஊற்றிலிருந்து வரும் வெளிச்சத்தாலும் வெப்பத்தாலும் பெலப்பிக்கும் திருஅவையாகின்றோம். (அதற்காகவே மையத்தை நோக்கிய அவை - **centri-petal church)**

நாளாந்த வாழ்வில் நாம் எல்லோரும் எம்மை பெலப்படுத்த குடிப்பதற்கும் உண்ணுவதற்கும் வீட்டிற்குள் செல்லுகின்றோம். அங்கேதான் எமக்கு தேவையானவற்றை உண்டு குடித்து எம்மை வாழ்விற்கு தயார் செய்கின்றோம். ஆனால் அங்கேயே நாங்கள் நாள் முழுவதும் தங்கி விடுவதில்லை! வெளியே சென்று பல செயல்களில் ஈடுபடுவோம்.

அதேவிதமாக நாம் எம்மை ஆன்மீகத்தில் பெலப்படுத்த, இறைவனுடன் தொடர்புகொண்டு, அவருடைய வார்த்தைக்கும் ஏவுதலுக்கும் செவிமடுத்து, அவருடைய திரு விருந்திலே பங்கெடுத்து, ஏனைய கிறீஸ்தவர்களுடன் உறவு கொண்டு, எம்மையும் எமது அவையையும் பெலப்படுத்துவோம். இதுவே தனிமையிலோ, வீட்டிலோ, கோவிலிலோ, இறை ஊற்று வேர்களுக்குச் சென்று நம்மைப் பெலப்படுத்துவதாகும். இது கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றி அமையாதது.

2) ஊற்றிற்கு அழைத்து எம்மைத் தமது வார்த்தையாலும் அருட்சாதனத்தினாலும் பெலப்பித்த இறைவன் எம்மை உலகத்தினுள் அனுப்புகின்றார். எம்முடன் வாழும் சமுதாயத்திலே ஒளியாகவும் உப்பாகவும் செயற்பட்டு, இறையரசை வளர்க்கும் திருஅவையாகின்றோம். இப்படி மையத்திலிருந்து பெற்றதை, வெளியே ஒளியாக உப்பாகக் கொடுக்கும் அவையாகிறோம். **(centri-fugal church)**

இயேசு எம்மைப் பார்த்து - நானே உலகின் ஒளி, நானே உலகின் உப்பு - என்று கூறி, அவரின் சீடர்களாகிய எம்மை உலகிலே இறை அரசை வளர்க்க அனுப்புகின்றார்.

இறைவனிடம் இருந்து, தனிமையிலோ குழுவாகவோ, வீட்டிலோ, கோவிலிலோ பெற்றுக் கொண்ட, ஆன்ம சக்தியை ஒளியாகவோ, உப்பாகவோ, மற்றவர்களின் சேவையிலே கொடுக்கும் பொழுது, நாம் இறை அரசை இவ்வுலகிலேயே ஆரம்பிக்கிறோம்; ஆயத்தப்படுத்துகிறோம்.

இருள் படர்ந்திருக்கும், எமது சமுதாயத்திலே கிறிஸ்தவ ஒளி, தனது சக்தியிலே உண்மையை வெளிப்படுத்தும் உள்ளதை உள்ளவாறே வெளிப்படுத்தும். அதேபோல், சமுதாயத்திலே, வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கேற்ற அன்பு. இரக்கம், மன்னிப்பு, காருண்யம், போன்ற நற்பண்பு களின்றி வாழத் துடிக்கின்றனர். அப்படியான சமுதாயத்திலே, எப்படி உப்பு, தனது காரசார சக்தியினால் அதனைச் சூழ்ந்திருப்பனவற்றை மாற்றி சுவை கொடுக்கின்றதோ, அதேபோல் நற்செய்தி விழுமியங்கள் பண்புகள் மனித வாழ்விற்கு சுவை கொடுக்கும் மேம்படுத்தும்.

இயேசுவின் வாழ்வில் அவர் கொடுத்த நற்செய்தி விழுமியங் கள் இரு வகையானவை. ஒன்று மனிதர்கள் எப்படி வாழ வேண்டுமென்று போதித்த உண்மைகள். உதாரணமாக, அன்பு செய்தல், மன்னித்தல், பகிர்ந்து வாழ்தல் இறையரசின் தன்மைகள் ... மற்றது அவர் வாழ்ந்து காட்டிய புரட்சிகரமான வழிகள், உதார ணமாக, கால்களை கழுவும் பணியாளனாக, தனது வாழ்வைக் கொடுக்கும் பலியாக, பாவிகள் ஏழைகளை தேடி சென்ற நல்லாயனாக ...

கிறிஸ்துவின் சீடர்களாகிய நாமும், மனித சமுதாயத்திலே, எமது உறவிலே, நாம் செய்யும் காரியங்களிலே எவ்வளவோ அறியாமை தெரியாமை தெளிவற்ற நிலைமைகளிலே, நாம் நற் செய்தியிலிருந்து பெற்ற ஞானத்தையும் அறிவுரைகளையும் மற்றவர் களுடன் பகிர்ந்து ஒளி கொடுப்போம். அத்துடன் தீய செயல்கள் நிகழ்வுகள் தோன்றும் பொழுது, அவைகளை மாற்றி அமைக்க, நற்செய்தியின் ஞானத்தை அறியப் பண்ணி மற்றவர்களுடன் நல்லதை நிலைநாட்டச் உப்பைப்போல் செயற்படுவோம்.

### 11.7 தமிழ்க் கிறிஸ்தவர்கள் சைவ மார்க்கத்தின் சூழலில், கிறிஸ்தவ விழுமியங்களை எப்படி வாழ்வது?

மார்க்கம் (margha) என்பது வாழும் வழி. தமிழர் வாழும் வழிகள் - ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், என்று எம்மில் வேருன்றி இருக்கும் இறை பக்தி ஞானத்தை நாம் மறக்கவோ, மறுதலிக்கவோ, முடியாது.

தமிழராகப் படைக்கப்பட்ட நாம், இறைவனிடமிருந்து வாழ்விற்கு ஏதுவான சூழல் மொழி, கலை, கலாசாரம், அடங்கிய பண்பாட்டையும் இனாமாகப் பெற்றிருக்கின்றோம். இவைகளுடன் மனித வாழ்வு சிறப்பாக அமையலாம்.

நமது மூதாதையர்கள் கிறீஸ்தவ மதத்தைத் தழுவிய பொழுது, கோவிலையும் வழிபாட்டு முறைகளையும், தமது மறையின் ஊற்றாகக் கருதினர். இது தமிழரின் மறைப்பற்று (religiosity).

தமிழரின் வாழ்க்கை முறைகளில் எத்தனையோ நற்பண்புகள் இருக்கின்றன. இதை அறியாத ஐரோப்பிய மறைபோதகர்கள், தமிழரின் வாழ்க்கைமுறை எல்லாவற்றையும், கிறிஸ்தவ விசுவாசத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு முரணானவையாகச் சாத்தானின் பழக்கங்களாக அல்லது மூட நம்பிக்கைகளாக கருதினர். அவைகளிலிருந்து வெளியேற அழைத்தனர். தமிழ் கிறிஸ்தவர்கள், தமிழரின் வாழ்க்கை முறைகளில் எவை நல்லவை எவை தீயவை என்று பிரித்து பார்க்க முடியாத வர்களாக, குழந்தையைக் குளிப்பாட்டின நீருடன் எறிவது போன்று, தமிழரின் வாழ்க்கை முறைகளை முற்றாக விட்டு சிலர் விலகினர். இது தவறு.

ஆனால் பெரும் பான்மையானோர், தொடர்ந்தும் தமிழராகவே வீட்டிலும், சமுதாயத்திலும், வாழ்ந்தனர். இப்படி ஊற்றில் கிறீஸ்தவராகவும், வீட்டிலும் சமுதாயத்திலும் தமிழராகவே வாழ்ந்ததை, சமாளிக்கும் கிறீஸ்தவமென்றும் மேலே கூறினேன்.

அதற்குக் காரணம், கிறீஸ்தவர்கள் ஒரு பக்கத்தில் கிறீஸ்தவ கோவில்களில் வழிபாடுகளில் பங்கு பற்றிக் கொண்டு, அதேநேரத்தில் கிறீஸ்தவ விசுவாசத்தின் சாராம்சம் - அதாவது, இறைவன் எல்லா மனிதரின் தந்தை என்றும், மனிதர் அவருடைய சம உரிமை கொண்ட பிள்ளைகள் என்பதையும் மறுத்து வாழ்ந்தனர். இப்படி வழிபாட்டில் கிறீஸ்தவர்களாகவும், வாழ்க்கையில் சாதி வேற்றுமைக ளைக் கடைப்பிடிப்பவர்களாகவும், இருப்பதையே சமாளிக்கும் கிறீஸ்தவம் என்றோம்.

ஆனால் இப்போது வத்திக்கான் சங்கத்தின் ஊக்குவிப்புடன் தமிழ்க் கிறீஸ்தவர்கள் தம்மைச் சூழ்ந்து வாழும் பெரும்பான்மை இந்து சகோதரர் மத்தியில் எப்படி வாழ அழைக்கப்படுகின்றனர்? எமது போதனையிலும் பார்க்க, எமது சாதனையே மக்கள் மனதை மாற்ற வல்லது என்பதை உணர்ந்தவர்களாக, மதமாற்ற நோக்கம் எதுவும் மறைவில்த்தன்னும் இல்லாது, கிறீஸ்துவை ஒளியாகவும் உப்பாகவும் இந்து சகோதரர்கன் மத்தியிலே கொடுக்க தமிழ் கிறிஸ்தவர் முன்வரவேண்டும்.

2ஆம் வத்திக்கான் சங்கம், அன்றைய கிறிஸ்தவ மறை பரப்பாளர்கள் பிற சமயங்களைப் பற்றிக் கொண்டிருந்த விளக்கமும் அணுகுமுறையும் தவறென்பதை உணர்ந்து, புதிய அணுகுமுறையை வெளிப்படுத்தி இருக்கின்றது. கிறிஸ்தவத்தை வாழும் அமைப்பாக இருக்கும் திருஅவைகளுக்கு, மற்றைய மதங்களிலிருந்து அங்கத்தினரை இணைக்க அல்ல, கிறிஸ்தவ நற்செய்தியை, அதன் விழுமியங்களை கொடுப்பதே எமது நோக்கம். இதைச் செயற் படுத்தவே, சங்கம் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, கிறீஸ்தவம் பிற மதங்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கான செயலகம் ஆரம்பிக்கப்பட்டது. (Secratariat for Non-Christian Religions).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கம் பிற மதங்களைப் பற்றியும், விசேடமாக இந்து சமயத்தைப் பற்றியும், வெளியிட்டிருக்கும் புரிந்துணர்வும் அணுகு முறையும் வியப்பாயிருந்தாலும், அவைகள் உண்மை யானவை; மிக முக்கியமானவை. நடைமுறைப்படுத்துவதில் சவால்கள் இருந்தாலும் துணிவும் இறையருளுடனும் முயற்சிப் போம்.

எமது கடந்த காலக் கிறிஸ்தவ வாழ்வில் - தனித்து நிற்போம், பிற சமய தொடர்புகள் எமக்கு அபாயமானவை, எமது கிறிஸ்தவ நம்பிக்கையைக் குறைத்துவிடும் அல்லது அபாயத்தில் தள்ளி விடும் என்று எமது தலைமைப்பீடமும் நாமும் நம்பி நடந்தோம்.

ஆனால் இன்று பயத்தை விட்டு, புதிய அணுகு முறையில் துணிவுடன் முன்னேற ஊக்கப்படுத்தப்பட்டுள்ளோம்.

ஆகையினால் எமது கிறீஸ்தவ இருப்பைப் புதிய பார்வையில் ஆழப்படுத்திக் கொள்வோம். அப்போதுதான் இந்து சைவ சகோதரர்களுடன் துணிவாகப் புதிய பார்வையில், புரிந்துணர்வில் துணிவுடன் செயற்பட முடியும். அதேநேரம் நாம் நமது விசுவச ஊற்றில் தெளிவாக தளராது நிற்க முடியும்.

11.8 சவால் நிறைந்த எதிர்காலப் பயணத்தைத் துணிவுடன் தொடர, கிறிஸ்துவத்தில் எம்முடைய இருப்பைத் தெளிவு படுத்தி, பெலப்படுத்துவது இன்றியமையாதது.

யூத பண்பாட்டில் கிறிஸ்தவம் தோன்றுவதற்கு முன்பாகவே, இறைவன் தம்மை இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்படுத்தியதை, நாம் இன்றும் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் ஊடாகக் கேட்டு விசுவசிக்கின்றோம். மனுக்குல வளர்ச்சியில் இஸ்ரவேலரை இறை வன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு வழிநடத்தியது, ஆபிர காம், மோயீசன் வழியாக இஸ்ரவேலருக்கு கொடுத்த வாக்குறுதிகள், கற்பனைகள், இவைகளெல்லாம் கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ளும் ஆரம்ப இறை வெளிப்பாடாகும்.

அதைத் தொடர்ந்து, முழு மனுக்குலத்தை மீட்கத் தோன்றிய இறை மகன் இயேசுவின் நிகழ்வுகளையும், யூதேயாவில் இயேசுவின் உயிர்த்தெழுதலின் பின் கூடிய சீடர் குழுமங்களையும் விசுவசிக் கின்றோம். இவைகள்தான் கிறீஸ் தவத்தின் சாராம்சமும், மாற்ற முடியாத அத்திவாரமுமாகும்.

இவற்றைத் தொடர்ந்து 16 நூற்றாண்டுகளாக, உரோமையின் தலைமைத்துவத்திலே வளர்ந்த திருஅவை அமைப்புக ளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளின் வழிபாடுகள், திருவருட் சாதனங்களையும், நன்றியுடனும் விமர்சிப்புகளுடனும் ஏற்றுக் கொள்கிறோம்.

அதன் பின் 16ம் நூற். தமிழர்கள் மத்தியில் தோன்றிய திரு அவைகளையும், போதிய விழிப்புடனும் விமர்சனத்துடனும் உறுதி செய்து கொண்டு, இன்று வத்திக்கான் சங்கத்தின் பின் புதிய பார்வையிலும் புரிந்துணர்விலும், ஒரு புதிய பயணத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

தமிழர் மத்தியில் நாம் நடத்தும் பயணத்தில், மேற்கூறிய கிறீஸதவ நம்பிக்கையின் அத்திவாரத்தில் ஊன்றி நின்று கொண்டு, தளராது, எதுவித மத அல்லது மார்க்க மாற்றங்களை நோக்கமாக கொள்ளாதிருப்போம். தமிழ் மக்கள் தமிழராக ஏற்கனவே பெற்றுக் கொண்ட இறைவனின் திட்டத்தையும் கொடைகளையும் மதித்து நடப்போம்.

கிறீஸ்தவர்கள், தமிழ் உலகிலே, ஒரு வகையான விருந்தாளிகளாக நடந்து கொள்ளவேண்டும். ஏற்கனவே தமிழர்கள் இந்து வாழ்க்கை முறையை பெற்றிருந்தனர். இறைவன் தாமே தமிழரை மனிதர்களாகப் படைத்து, அவர்களுக்கு மொழி, கலை, கலாசாரம், வாழ்க்கை முறை, இயற்கை வசதிகள், எல்லாவற்றையும் இனாமாக கொடுத்தவர் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வெளிப்படுத்தலைத் தொடர்ந்து இந்து சைவ மதங்களும் வளர்ந்தனர். எமது இந்து - சைவ சகோதரர்கள் தங்கள் மனச்சாட்சியின் வழி நடந்து செல்கின்றனர். எல்லோரும் ஒரே சமூகத்தில், கிராமத்தில் அக்கம் பக்கமாக வாழ்ந்து வருகின்றோம்.

2000 ஆண்டுகளுக்குமுன் தோன்றிய கிறிஸ்தவத்தை, தமிழர்கள் சிலர் 16ஆம் நுற்றாண்டிற்கு பின் வரவேற்றனர். இந்த புரிந்துணர்விலேதான் எம்மை தமிழ் சமூகத்தின் விருந்தாளிகள் என்று கூறினேன்.

ஆகையினால் சமூகத்திற்குப் பொதுவான சமூக அரசியல், கல்வி, பொது நல சேவை போன்ற பிரச்சினைகளைுக்கு, இந்துக்களும் நாமும் ஒன்றாக இணைந்து முகங்கொடுக்க வேண்டும். இவைகளைத் தீர்ப்பதில் அல்லது முன்னேறுவதில், கிறிஸ்வ விழுமியங்களினால் தூண்டப்பட்ட நாம் எமது பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

நீண்ட காலம் ஐரோப்பாவில் வளர்ந்த கிறீஸ்தவம், 2ஆம் வத்திக்கான் சங்கத்தில்த்தான், உலக நிலையை உணர்ந்து, ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வரலாற்றில் சம்பாதித்த பழக்க வழக்கங்களை (traditions) கொண்டு நாம் வருங்காலப் பயணத்தை எமது சூழலில் தொடர முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகவே சங்கம் இன்றைய உண்மை நிலைகளை கருத்தில் கொண்டு, எமக்குப் புதிய பார்வையையும், வழியையும் காட்டியிருக்கிறது. பாரம்பரியத்தில் நாம் கட்டி சேர்த்துக் கொண்டவைகள் அனைத்தையும் கிறீஸ்தவத்தின் சாராம்சமாகக் கணிக்காது, மேற்கூறிய சாராம்சத்தை மாத்திரம் அத்திவாரமாக வைத்துக்கொண்டு, புதிய தமிழ்த் திருஅவையின் உருவத்தையும், பணிகளையும், வழிகளையும், தேடுவோம்.

## 11.9 எமது வாழ்வு, சாட்சியம், செயற்பாடுகள் (**Life, Witness, Actions**)?

பரிசுத்த தந்தை பிரான்சிஸ் இயேசுக் கிறிஸ்துவை ஒரு தீவிரவாதியாகக் குறிப்பிட்டார். இது பலருக்கு வியப்பாக இருந்திருக்கலாம் ஆனால் அதுவே உண்மையிலும், உண்மை! இயேசு மனிதனாக வந்த பொழுது, ஓர் இளம் இலட்சியவாதியாகவே தமது பகிரங்க பணியை ஆரம்பித்தார். இளம் சீடர்களையே அழைத்து, உருவாக்கி, உலகெங்கும் சென்று இறை அரசை அறிவியுங்கள் என்றார். அவர்களே இன்று நாங்கள்!

அவரின் இறையரசின் சாராம்சத்தில் இரண்டு முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுவோம்.

1. அன்பு செய்வதும், மன்னிப்பதும், ஒளியாக உப்பாக இறை அரசை வரவேற்பதும்

நான் உங்களை அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள் - என்றார். மேலும் அவர் சீடருக்குக் கற்பித்த செபத்தில் - நாங்கள் ஒருவரையொருவர் மன்னிப்பது போல் இறைவா எங்களை மன்னியும் - என்று கற்பித்தார்.

இறை அன்பு - மன்னிப்பும் எங்கள் பரஸ்பர அன்பு - மன்னிப்பும், ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. எங்கே சுய அன்பு உள்ளதோ, அங்கே பிறர் அன்பு இருந்தால்த்தான், அது உண்மையான நேர்மையான அன்பு! அதே விதமாக மன்னிப்பும். எவ்வளவிற்கு நாம் மற்றவர் எம்மை மன்னிக்க வேண்டுமென்று விரும்புகின்றோமோ, அவ்வளவிற்கு நாம் மற்றவரை மன்னிக்க வேண்டும்! இவை இயேசுவின் புரட்சிகரமான கட்டளைகள்! இன்றைய தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய நாம், நமது சூழலில் - குடும்பத்திலும் சமூகத்திலும் - எவ்வளவு துணிவான புரட்சிகரமான அன்பு - மன்னிப்பைக் கடைப்பிடிக்கிறோம்? நமது கிறிஸ்தவத்தை, ஆலய சுவர்களுக்குள் வழிபாடுகளில், தனிச்செபத்தில், தனி வாழ்வுக்குள்ளும் ஒடுக்கி விடாது, பகிரங்க வாழ்விலும், துணிவுடன் அன்பு இரக்கம் இவற்றை எடுத்துச் சென்று, இறை அரசை வரவேற்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக இயேசு - நானே உலகின் ஒளி, நானே உலகின் உப்பு - (மத். 5.13,14) என்றவர், சீடர்களாகிய எங்களையும் ஒளியாகவும் உப்பாகவும் செயல்ப்பட்டு, இவ்வுலகில் இறை அரசை வரவேற்க வேண்டுமென்றும் கற்பித்தார். இறை அரசை வரவேற்பது அல்லது கட்டுவதென்பது நாங்கள் மனிதர் வியப்படையும் பெரிய செயல்களை செய்ய வேண்டு மென்பதல்ல. இயேசுவே கூறுகின்றார் - விண்ணரசு ஒரு சிறு கடுகிற்கும் புளிப்பு மாவிற்கும் ஒத்தது. (மத் 13. 31-33). நாளாந்த வாழ்விலும் ஈடுபாடுகளிலும் அன்பை இரக்கத்தை காருண்யத்தை கடைப்பிடிப்பது போன்ற செயல்களே வேண்டப்படுகின்றன.

2. மனிதர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்பதற்கு முரணான பல தவறுகள், எம்மத்தியில் இன்னும் இருக்கின்ற இருளை அகற்றுவோம்.

தமிழ்ச் சமூகத்திற்குள்ளேயே நிறையப் பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், அடக்குமுறைகள் மூடத்தனமான நம்பிக்கைகள் இருக்கின்றன. இவைகள் அனைத்தையும் முதலில், இனங் கண்டு எமது கவனத்தையும் கரிசனையையும் காட்டுவோம்.

இறைவனின் நாமத்தில் மனிதர்களுக்குள்ளே வேற்றுமை களைத் நீதிப்படுத்தி திணிப்பதும், அதை எமது பழக்க வழக்கங்களில் வைத்திருப்பதும், தவறு என்பதை கிறிஸ்தவர்கள் உணர்ந்து, வீட்டிலும், சமூகத்திலும், அவ்வேற்றுமைகளை அகற்ற முயற்சிக்க வேண்டும்.

என்னுடைய பார்வையில், அநேக கிறிஸ்தவர்கள் பரஸ்பர அன்பு - மன்னிப்பு கட்டளைகளையோ, மனிதர்கள் எல்லோரும் சம உரிமையுள்ள சகோதரர் என்ற உண்மையையோ ஏற்பதாக, கடைப்பிடிப்பதாக இல்லை. அத்தோடு, ஆரம்ப மறைபரப்பாளர் தடுக்க முடியாததினால் சாதிக்கொரு கோவில் கட்டபட்டன. ஆனால் இன்று அந்த ஆலயங்களில் கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் சம உரிமைகள் வழங்குவதில்லை. இவைகள் திருத்தப்பட வேண்டும்.

பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த பழக்க வழக்கங்களை நாம் இலேசாகவோ, கடும் முயற்சி இன்றியோ மாற்றுவது முடியாது. பங்குகளில் பிரச்சினைகள் மேலெழுந்து வரும் போது, திருஅவைத் தலைவர்களும் மக்களும் சேர்ந்து, பொறுமையுடன் உரையாடல்களை நடத்தி, கிறிஸ்தவ அடிப் படை நம்பிக்கைக்கு எமது பழக்க வழக்கங்கள் சில முரணான தென்பதை விளங்கி, அவைகளை அகற்ற முயற்சிப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் 12*

# இறை மறை பொருட்கள் - சிருட்டிப்பு, இறை வெளிப்படுத்தல், மீட்பின் வழிகள், இறைவனில் எல்லாம் நிறைவடைதல்!

12.1 இறைவன் எப்பொழுதும் மனித சக்திக்கு அப்பாற்ப்பட்ட, மாபெரும் மறைபொருளாகவே இருந்து செயற்படுவார்.

மனிதன் இவ்வுலகில் வாழும் உயிரினங்கட்குள் ஓர் சிறந்த இனமாக இருக்கின்றான். அதிலும் ஐம்புலன்களையும், அவைகளின் சிகரமாக பகுத்தறிவையும் பெற்றிருக்கின்றான். மனித வரலாற்றில் சிருட்டிப்பின் சிறப்புகளைப் பார்த்து ரசித்து வியப்படையும் மனிதராகவே நாம் எப்போதும் இருப்போம்.

தனது ஐம்புலன்களாலும், விசேடமாக பகுத்தறிவினாலும், மனிதன் எத்தனையோ அதிர்ச்சியான அற்புதமான ஆராய்ச்சிகளினால் சிருட்டிப்பின் நீள, அகல, ஆழத்திலே பலவற்றைக் கண்டுபிடித்து, சிருட்டிப்பு அனைத்தையும் நல் வழியில் நடத்த முன்னேற, உதவுகின்றான்.

ஆனால் அதே மனிதன் பாவ ஆசைகளினால் சிருட்டிப்பிலும் மனித வாழ்விலும் அழிவுகளையும் ஏற்படுத்துகின்றான். பாவத்தினால் தீண்டப்பட்ட மனிதனையும், சகல சிருட்டிப்பையும் மீட்கவே, இறைவன் பல்வேறு காலங்களில், பல்வேறு மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவைகளிலிருந்தே பல மதங்கள் தோன்றி, மனிதனையும் சிருட்டிப்பையும் நல்வழியில் நடத்த முயற்சிக்கின்றன.

ஆனால் மனிதத் தன்மை மேலோங்கி மதங்களில் செயற் படும் பொழுது, தவறுகள் நடப்பது சாதாரணம். எல்லா மதங்களும் சுய விமர்சனம் செய்து தம்மை இறை வெளிபாட்டிற்கு பிரமாணிக்கமும், நிகழ்காலத்திற்கு உரியதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

12.2 இறைமகன் கிறிஸ்து, மனித மீட்பிற்காக இம்மண்ணில் ஆரம்பித்த இறை அரசும் இறைவனில் நிறைவடையும் மறை பொருள் அதை நோக்கியே கிறிஸ்தவர்கள் பயணிக்கின்றனர்.

மனித மீட்பிற்காக மனிதனான இறை மகன் இயேசு, தமது பகிரங்க வாழ்வின் ஆரம்பத்திலேயே - விண்ணரசு நெருங்கி விட்டது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் - என்று சொல்லிச் சீடர்களை அழைத்தார். 3 வருட காலமாக நற்செய்தியைப் போதித்து, தீய சக்திகளை ஓட்டி, பல புதுமைகளைப் புரிந்தபின், பாஸ்கா மறைநிகழ்வான பாடுகள் சிலுவை மரணம், உயிர்ப்பு வழியாக மனித மீட்பை மனுக்குலத்துக்கு வென்றெடுத்தார்.

உயிர்த்த இயேசுவை அனுபவித்த சீடர்கள், அவர் பரலோகம் திரும்பியபின் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பெற்றுத் துணிவுடன் இயேசுதான் மீட்பரும் மெசியாவும் இரட்சகரென்றும் பகிரங்கமாகப் போதிக்கத் தொடங்கினர். அவர்களின் சாட்சியத்தை ஏற்று கூடிய குழுமங்களே ஆரம்ப திரு அவைகளாகத் தோன்றின.

இன்று உலகெங்கும் பரவியிருக்கும் கிறிஸ்தவம், தமிழர் மத்தியிலும் கடந்த 400 வருடங்களாகச் செயற்படுகின்றது. தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவை மீட்பராக ஏற்று, அவர் கற்பித்தவைகளைக் கடைப்பிடித்து, அவர் வாக்குப் பண்ணிய இறையரசை நோக்கி பயணிக்கிறோம். இந்த இறையரசை, இவ்வுலகில் வரவேற்க, கிறிஸதவர்கள் ஒளியாகவும், உப்பாகவும், கடுகளாகவான வித்துக்களாகவும், புளிக்காரமாகவும் செயற்பட வேண்டுமென்று இயேசு எமக்கு பணித்துள்ளார்.

மனித வாழ்வு பல் வித மக்கள் இனங்கள், மதங்கள் அனைத்தையும் கொண்டுள்ளது. இவைகளின் முடிவான இறையரசும் ஒரு மறைபொருள்.

**12.3 நன்மையும் தீமையும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து வளரும் மண்ணுலகிலே, பல மதங்கள் மத்தியில், நாம் பின்பற்றும் வழிகள்.**

இவ்வழிகளை இயேசு தாமே தமது பகிரங்க வாழ்வில் எமக்குக் கற்பித்து வாழந்து காட்டினார்.

1. செபம் - அவர் பிதாவை நோக்கி - *உமது அரசு வருக, உம்முடைய சித்தம், விண்ணுலகில் நிறை வேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக* - என்று எமக்கு செபிக்கக் கற்பித்தார். செபம் என்பது, எமது தேவைகளுக்கு வேண்டுவதாக மாத்திரம் இருந்து விடாது, மேலாக இறைவனின் சித்தம் எம்மில் நிறைவேற வேண்டுமென்று விரும்புவதே எமது முதற் செபமாகும்.
2. வாழ்வு - இயேசுவின் சீடர்களாக, நாம் விண்ணுலகை நோக்கிப் பயணிக்கும் போது, நன்மை தீமை இரண்டும் பின்னிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைந்த உண்மை நிலைகளலூடாகச் செல்கின்றோம். இயேசுவின் சீடர்களாக, அவருடைய போதனையின்படி, நன்மை தீமைகளை இனங்கண்டு, எமது வாழ்வை முன்னெடுக்க வேண்டும். நற்செய்தியை ஆழமாக உள்வாங்கி, அதை வாழ்வின் சாட்சியத்தாலும் வார்த்தையாலும் அறிக்கையிட வேண்டும்.

3. பணி - .யேசுவின் நற்செய்தியைப் போதிப்பதிலும் தீய சக்திகளின் மத்தியில் ஒளியாகவும் உப்பாகவும் செயற்படுவதே எமது தலையான பணியாக இருக்கின்றது. அநேகமாகக் கிறிஸ்தவ தலைவர்களும் மக்களும், தீய சக்திகளுக்கு முகங் கொடுக்க தயங்குகின்றோம். எமது மௌனத்தினாலும் ஏனோதானோ என்ற போக்கினாலும் பாவம் செய்கின்றோம். (silence is sinful). தீய சக்திகளின் விளைவுகளைக் கண்டிக்கிறோம், ஆனால் அவைகளின் காரணிகளை ஆராய்ந்து, வேரோடு களைவதில் செயலற்றவர்களாக இருக்கின்றோம். மாறாக, நாம் செய்ய வேண்டியது - நற்செய்தியை வாழ்வாலும் வார்த்தையாலும் உரக்கப் போதித்து கொண்டு, தீய சக்திகளை இனங் கண்டு, வேரோடு களைய அவைகளுக்கெதிராகப் போராட்டம் நடாத்துவது.

## 12.4 கிறிஸ்தவ திரு அவையில் இணையாத கிறீஸ்துவின் பக்தர்களையிட்டும் மகிழ்வோம்

கடந்த 60 ஆண்டுகளிலும் இந்திய மண்ணில் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவ அமைபபான திருஅவையில் சேர்ந்து கொள்ளாது, பல்லாயிரக் கணக்கான இந்துக்கள், இயேசுவை ஓர் இறை அவதாரமாக ஏற்று, அந்த நற்குருவின் வார்தைகளில் குணமாக்கப்படு வதுடன் தங்களுடைய வறுமை அடிமைத்தனங்களிலிருந்து விடுதலையைத் தேடுகின்றனர். அநேகர் தம்மை இந்துக் - கிறீஸ்தவர் என்று அழைக்கின்றனர். இப்படித் தொடர்பு உடையோர்க்கு நவீன மறைபோதக சபைக் குருக்கள் உதவி அளிக்கின்றனர்.

ஆகையினால் யூதேயாவில் உதித்த கிறிஸ்தவம், பல படிகளைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. உரோமன் கத்தோலிக்க அமைப்புத் திருஅவைகளுக்கு அப்பால், இறை மகன் இயேசு எத்தனையோ சபைகளிலும் இந்து -கிறிஸதவர்களிலும் பிரசன்னமாகி செயல்படுவதையிட்டு அக மகிழ்வோம்.

## 12.5 தமிழ்க் கிறிஸ்தவர்களின் வருங்காலப் பயணத்தில், மதம் சார்ந்த சவால்களையும் சந்திக்க வேண்டி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மதங்களும் இறைவெளிப்பாட்டிலிருந்தே தோன்றின. அதற்கிணங்க இந்து சைவ வாழ்க்கை வழியும் இறைவெளிபாட்டி லிருந்து, இந்திய மக்களினால் தங்கள் சூழமைவு, ஞானிகளின் அனுபவ அறிவுகள் மொழி, கலை, கலாச்சாரமாகிய, பலவற்றையும் அடக்கிய வாழ்க்கை முறையை உள்ளடக்கியது. அந்த வாழ்க்கை முறையைக் கிறிஸ்தவர்களாகிய நாம் சரியாகக் கணிக்கவேண்டும், மதிக்க வேண்டும். அவைகளிலும் இறைவனின் வெளிப்பாடு இருக் கின்றது. ஆகையால் தமிழரின் இந்து - சைவ மதத்தை எமது பார்வையிலும் மதிப்பிலும் இருந்து, தள்ளி விட முடியாது. அப்படிச் செய்வது பிள்ளையை தொட்டியின் அழுக்கு நீருடன் வீசூவிடுவ தாகும்.

தமிழராகப் பிறந்து கிறிஸ்தவ மதத்தில் திருமுழுக்கினால் இணைந்த எமக்குள்ள மிக பிரதான கேள்வி இதுவே -

**கிறீஸ்தவத்தை எமக்கு கொடுத்த இறைவனே, ஏற்கனவே தமிழருக்கும் மொழி பண்பாட்டுடன் வாழ்க்கை வழியுடன் இந்து - சைவ மதங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். ஆகையால் தமிழ்க் கிறிஸ்தவர்கள் இறைவன் செயல்களை சரியாக புரிந்து, மதித்து எப்படி வாழ்வோம்?**

இயேசு தமது பகிரங்க வாழ்வின் தொடக்கத்திலும், அவர் கற்பித்தவைகளிலும், இறை அரசை அழுத்திக் கூறினார். மனுக்குலத்தை மீட்க வந்தவர், தமது பணியை இறை அரசை ஆரம்பிப்பவராகவும், பல் திசையிலிருந்தும் வேறுபட்ட இன மதங்களிலிருந்து வரும் மனிதர், இப்பணியில் எப்படிப் பங்கேற்கலாம் என்பதையும் உணர்த்தினார். (மத்25.32). ஆகையினால் இறையரசைக் வரவேற்பது கட்டியெழுப்புவது எமது திருஅவைகள் தனித்துச் செய்யும் பணி அல்ல. இறைவெளிபாட்டைப் பெற்று வெவ்வேறு வழிகளில் முன்னேறும் மதங்களும் இறையரசை நோக்கி நடக்கின்றன. அவர்கள் மோட்சம் நிர்பானா என்று அழைப்பார்கள். இந்தப் பின்னணியிலும் விளக்கத்திலும்தான் சர்வமத உரையாடல்களையும் ஒத்துழைப்புகளையும் நாம் ஊக்குவிக்க வேண்டும்.

*இந்நோக்கிலேயே, அன்றைய மதத் தலைவர்களின் ஆசியுடன், 1986 - 1996 வரை, யாழ்ப்பாணத்தில் 115, 4ம் குறுக்குத் தெருவில், நற் சமூக நடு நிலையத்தையும், புதிய உலகு என்ற வெளியீட்டையும் ஆரம்பித்து நடாத்தினேன். எல்லா மதங்களும் மனித நல் வளர்ச்சிக்காகவே என்ற நோக்கில், கல்வி, சுகாதாரம், பார்வையற்றோர், இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், போன்றவற்றில் பணி புரிந்தோம்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையினால் எமது திருஅவையின் இலட்சியம் ஒரு உயர்ந்த குறிக்கோளாக, இலட்சிய ராஜ்யமாக (utopia) இருக்கின்றது. இதைத் தமிழ்க் கிறீஸ்தவராகிய நாம் எப்படித் தமிழ் உலகில் வாழ்வோம் முன்னெடுப்போம் என்பதைச் சிந்திக்க வேண்டும். மத வேற்றுமை களையிட்டு ஒருவரையொருவர் புண்படுத்தாது, இயலுமான அளவிற்கு இறையரசை கட்டி எழுப்புவதில் ஒன்றாகச் செயற் படுவோம்.

## 12.6 தமிழ்க் கிறிஸ்தவர்கள் நவீன உலகின் சவால்களை சந்திக்க ஆர்வத்துடன் செயற்பட வேண்டும்.

பல விதமான ஆராய்ச்சிகளின் பயனாக, மனித சமுதாயத் துக்கு முன்னேற்ற வழிகளும், அதே நேரத்தில் புதிய கவர்ச்சி - சூழ்ச்சியான தீய வழிகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மத்தியில் மனிதனைத் தகுந்த பாதையில் வழி நடத்துவதில் மதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தமிழ்க் கிறீஸ்தவர்கள் இந்து சைவத் தமிழர்களை விட, உலகளாவிய கிறிஸ்தவத்தின் (universal christianity) அனுபவத்திலும் அறிவிலுமிருந்து, முதிர்ச்சி பெற்ற முன்னேற்றமான அனுபவங்களை, வழிகளை பெற்றிருக் கின்றனர். இவ்வழிகளை கிறிஸ்தவர்கள் பிற மதத்தவர்க ளுக்கும் பகிர்ந்து கொடுத்து, மனித சமுதாயத்தை வழி நடத்த வேண்டும். நற்செய்தியின் அடிப்படையிலும் பூகோள அனுபவ அறிவிலுமிருந்து செயற்படுவது, இந்து சைவ தமிழருக்கெதிராக செயற் படுவதல்ல. கிறீஸதுவின் பல நற்செய்தி விழுமியங்கள் இந்து சைவத்திலும் போற்றப்படும் விழுமியங்கள், என்பதை மறவாது, மக்களுக்கு ஒளி கொடுப்பதிலும் மக்கள் மத்தியில் உப்பாக முன்னேற்றமான மாற்றங்களை தேடுவதிலும் ஏற்படுத்துவ திலும் இந்து சைவச் சகோதரருடன் சேர்ந்து செயற்படலாம்.

உதாரணமாக, பரந்து வாழும் பல் வேறு மனித சமுதா யங்கள் சேர்ந்து, உண்மை, நீதி, சமாதானம் போன்றவற்றைப் பாதுகாப்பதற்காக, பல்லின மக்கள் சக வாழ்வதற்கான முயற்சிக ளில், (peaceful co-existence) மனித உரிமை கோட்பாடுகள், (human rights) போன்ற நாகரீக நலல முயற்சிகளை மேற்கத்திய நாடுகள் அல்லது ஐக்கிய நாடுகள் சபை (united nations) வழியாக முயற்சி கள் நடக்கின்றன. அவைகளில் உலக திருஅவைகளின் ஊடாக, தமிழ்க் கிறிஸ்தவர்களும் அனுபவங்களை உதவிகளை பெறு கின்றனர்.

மனித உரிமைக் கோட்பாடுகளை உணர்ந்து, தமிழருடைய மனித உரிமைகளுக்காக போராடும் பொழுதும், தம்மகத்தே நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக இருக்கும் சாதி வேற்றுமைகளையும் அடக்கி ஆளும் முறைகளையும், இலேசாக இனங்கண்டு, அவைகளை ஒளிக்க எல்லா மதத்தவரையும் அழைத்து முயற்சிப்பது தமிழ் கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் சந்தர்ப்பமும் வாய்ப்பும்.

**12.7 எல்லா மனிதரின் தொடக்கமும் முடிவும் ஒரே இறைவனே, என்ற தத்துவ உறுதியுடன் வாழ்வோம்.**

எம் எல்லோரையும் மனிதராகவும், அவர்கள் மத்தியில் தமிழினமாகவும் படைத்தவர் இறைவனே. தமிழினத்தை ஆதியிலிருந்து இந்து - சைவ வாழ்க்கை முறையில் வளர்ப்பவரும் வழி நடத்துகிறவரும் அவரே! தமது மகன் இயேசுக் கிறீஸ்து வழியாக எம்மைத் தமிழ்க் கிறீஸதவர்களாக அழைத்தவரும் வழிநடத்துபவரும் அவரே!

இறைவனின் சிருட்டிப்பிலே மனிதனைத் தனது சாயலில் படைத்தார் என்று தமிழ் கிறிஸ்தவர் நம்பி வாழுகின்றோம். இறைமகன் இயேசு கிறிஸ்துவின் இறையரசை பற்றிய நறசெய்தியை வார்த்தையாலும் வாழ்வாலும் எல்லா மக்களுடனும் பகிர்ந்து நித்திய வாழ்வை அடைவோமாக!

இன்றைய கிறிஸ்தவர்கள் பலர் தமது
மதத்தை கோவிலுக்குள் மாத்திரம்
அடக்கி விட்டு, கிறிஸ்தவத்திற்கு
முரணான மனித ஒடுக்கு முறைகளில்
வாழ்வது சமாளிக்கும் கிறிஸ்தவமாகும்.
அவர்களின் கிறிஸ்தவம் மனிதரை
சமத்துவ சகோதரர்களாக ஏற்கும்
அளவிற்கு சீர்திருத்த படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செபம்

*திருத்தந்தை பிரான்சிஸ்,*

*எல்லோரும் சகோதரர் என்ற தமது சுற்று மடலின் இறுதியில் சகலத்தையும் படைத்த இறைவனை நோக்கி எழுதிய செபம்.*

மனித குடும்பத்தின் ஆண்டவரே
சிரிட்டிப் அனைத்தையும் சமமான மாண்பில் படைத்தீர்
எங்களுடைய இதயங்களுக்குள்
உமது ஆவியை கொடுத்தருளும் /
மனிதரெல்லோரும் நீதி சமாதானத்திற்காக
ஒருவரையொருவர் சந்தித்து உரையாடுவார்கள்
என்றுநாம் எல்லோரும் விரும்புகின்றோம் /
கனவுகாண்கிறோம்.
சௌக்கியமான சமுதாயங்களையும் /
மாண்புமிகுந்த உலகத்தையும்
பசி, வறுமை, வன்முறை, போரற்ற உலகையும்
உருவாக்க எங்கள் எல்லோரையும் ஏவியருளும் /
இந்த உலகின் எல்லா மக்களுக்கும் / இனத்தவர்க்கும் /
எங்கள் இதயங்களை திறந்தருளும்.
எங்கள் ஒவ்வொருவரிலும் நீர் விதைத்திருக்கும்
அழகையும் / நன்மையையும்
நாம் ஒன்றாக இலட்சியக் கனவுடன் / ஒற்றுமைப் பட்டு/
பொதுத் திட்டங்கள் அமைத்து /
முன்னேறுவதற்கு உதவியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

புத்தக வடிவில் எனது சிந்தனைகளை ஆயத்தம்

செய்வதில் உதவி செய்த

தட்டெழுத்து கோர்த்தவர்களுக்கும்

எழுத்து பிழைகளை திருத்தியவர்களுக்கும்

புனித வளனார் அச்சக பணியாளருக்கும்

எனது மனமுவந்த

நன்றிகள்!

dation.
org



## இதுவரை வெளியாகிய புத்தகங்கள்




**இன்னும் விற்பனைக்கு இருப்பவை**

**முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும், இனப்பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும், பொதுநிலையினரின் முதிர்ச்சி, பொதுநிலையினரின் எழுச்சி**

**விலை: ரூபா 150.00**

St. Joseph's Catholic Press, Jaffna. Phone: 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org